19th August 1961] [Sri M. Bhaktavatsalam]

prices of foodgrains were still high, the Government ordered the continuance of the Fair Price shops even beyond January 1961. These shops have been functioning continuously since then and the Government have sanctioned their further continuance till the end of December 1961, for the present. These shops will be continued even beyond December 1961, if this is found to be necessary. The Government are also willing to open additional Fair Price shops in any district if there is demand for them. Apart from these fair price shops for rice, there are separate Fair Price shops for distribution of wheat to the general public. These shops get their supplies of wheat from the Regional Director (Food), Madras, at the controlled price of Rs. 14 per maund. The Regional Director (Food), Madras, is also holding some stocks of imported milo. The Collectors of the Districts have been informed that they can arrange for opening of Fair Price shops for distribution of milo also through local traders, if there is a demand for the same in their districts. These are some of the measures taken by this Government at the State level.

4. The problem of stabilising the prices of commodities in a developing economy bristles with difficulties. The Planning Commission has considered this problem in great detail and has discussed in Chapter VII of the Third Five-Year Plan several measures to correct or moderate undesirable price trends. Honourable Members will appreciate that any measure in this regard can be taken up effectively only on an All-India basis.

5. I may, however, submit that unlessthere is a substantial increase in the production of foodgrains and other commodities, there can be no real solution to this problem of rise in prices. The aim of our Plans has been and continues to be to increase the ouptut of foodgrains and other essential commodities to the maximum extent possible.

III.—PRESENTATION OF THE REPORT OF THE COMMITTEE ON ESTIMATES.

SRI C. R. RAMASWAMY: Mr. Deputy Speaker, Sir, I, Chairman, Committee on Estimates, present the Report of the Committee on Fisheries Department.

IV.—THE MADRAS STATE ELECTRICITY BOARD BUDGET FOR 1961–62.

DEPUTY SPEAKER: Now the discussion on the State Electricity Board Budget for 1961–62 will be continued. The hon. Member, Sri M. Kalyanasundaram may now move his amendments.

[19th August 1961

SRI M. KALYANASUNDARAM : Sir, I move the following amendments :—

"and on such consideration the House recommends to the Government—

(1) to take immediate action for framing rules defining the powers of the Chairman and the members of the Electricity Board as provided for under section 78 (2) of the Electricity Supply Act, 1948; and

(2) that the following suggestions be made to the Board :—

(i) to issue necessary regulations under section 79 of the Act to arrange to place the copies of such regulations on the table of the House;

(ii) to appoint a high power Committee for evaluating the real achievements of all the schemes implemented during the period of the First and Second Five-Year Plans;

(iii) to appoint a Committee to conduct a review of all the accidents involving loss of life during the past ten years and to examine how far safety measures have been observed or not;

(iv) to constitute a Standing Technical Committee for the purpose of reviewing the cases of break-downs and assessing the efficiency of operation in each system periodically and for placing such a report annually on the table of the House;

(v) to take steps expeditiously to take over the Licensees at an early date failing which suitable steps must be taken to ensure that the Licensees take up rural electrification schemes without delay; and

(vi) to inclusive a scheme for Atomic Power Plant in the Third Five-Year Plan, for increasing the power out-put to meet the growing demand for power in the State."

SRI N. K. PALANISAMI : Sir, I second the amendment.

DEPUTY SPEAKER : How much time does the Hon. Minister for Electricity require for his reply?

THE HON. SRI V. RAMAIAH : Forty-five minutes, with permission to extend it if I do not finish my reply at 1-30 p.m.

*SRI V. K. RAMASWAMY MUDALIYAR : கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இந்த மின்சார போர்டின் வரவு-செலவுத் திட்டத்தின் பேரில் இப்போது விவாதம் நடந்துகொண்டிருக்கும் சமயத்தில் என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை மட்டில் நான் இந்தச் சபையின் முன்பு சமர்ப்பிக்க விரும்புகிறேன். முக்கியமாக இந்த இலாகாவானது நல்ல முறையில் பணியாற்றிக்கொண்டு வருகிறது என்பதைப் பற்றி ஒருவரும் மறுக்க முடியாது. முக்கியமாக இதில் இருக்கும் சீப் என்ஜினீயர் அவர்களும் மற்ற உத்தியோகஸ்தர்களும் நல்ல முறையில் பணியாற்றிக்கொண்டு வருகிறார்கள். எங்கு பார்த்தாலும் விஸ்தரிப்பு திட்டங்கள்,

19th August 1961] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

அதிலும் முக்கியமாக கிராமங்களில் வெகு விரைவாக நடைபெற்று வருகின்றன. இந்த அறிக்கையிலேயே நாம் பார்க்கிறோம், 11,000 கிராமங்களுக்கு மின்சாரம் கொடுக்கப்பட்டுள்ளது, இன்னும் சுமார் 8,000 கிராமங்களுக்கு இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் விஸ்தரிக்கப்படப்போகிறது என்று சொல்லப் பட்டுள்ளது. மின்சார விஸ்தரிப்பு வெகு வேகமாகப் போய்க் கொண்டிருக்கிறது என்பது மறுக்க முடியாத ஒரு விஷயம். நாம் மட்டுமல்லாமல், குந்தாத் திட்டத்தைப் பார்ப்பதற்காக வந்த அமெரிக்க என்ஜினியர்கள், கனடியன் என்ஜினியர்கள் எல்லோரும் போற்றினார்கள். நல்ல முறையில் வேலை நடைபெற்று வருகிறது என்று பாராட்டினார்கள். கனடா அரசாங்கமும் ரஷ்ய அரசாங் கமும் நமக்குப் போதுமான உதவிகளைக் கொடுத்தார்கள்— இன்னும் கொடுக்கப் போகிறார்கள். ஆனால், இவ்வளவு இருந்தும் பற்றாக்குறை அதிகமாக இருந்து வருகிறது. எங்கு பார்த்தாலும் ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டு ஒவ்வொரு இடத்திற்கும் மின்சாரம் எவ்வளவு வேகமாக பரவ வேண்டுமோ அவ்வளவு வேகமாகப் பரவவேண்டுமென்று மக்கள் எண்ணுகிறார்கள். அதற்குப் போது மான வசதிகள் நம்மிடம் இல்லை. இன்னும் நம்முடைய பிராந் தியத்தில் தெர்மல் ஸ்டேஷன்கள் தேவை—குறைந்தது இன்னும் இரண்டு தெர்மல் ஸ்டேஷன்களாவது இருந்தால் நான் நம்முடைய தொழில்களெல்லாம் சீக்கிரம் விருத்தியடைய ஏதுவாக இருக்கும். விவசாயத்திற்கு வேண்டிய மின்சாரத்தை அளிக்க முடியாதபடி பற்றாக்குறை இருக்கிறது. விவசாயத்திற்கு மின்சாரம் வேண்டிய அளவு வினியோகிக்கும் வகையில் எப்படி உற்பத்தி செய்வது என்று சிந்தித்துப் பார்த்து, அதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள் கிறேன்.

இன்னும் பிரைவேட் செக்டாரிலே தெர்மல் ஸ்டேஷன்கள் அமைக்கப் போவதாகச் சொல்லுகிறார்கள். அதற்கு வேண்டிய உதவிகளைக் கொடுக்கவேண்டும். கடன் வசதிகள் செய்தும், மற்றும் அயல் நாடுகளிலிருந்து அதற்கு வேண்டிய யந்திரங்களைத் தருவித்துக் கொடுத்தும் அவர்களுக்கு உதவி செய்யவேண்டும். அவர்களுக்கு வேண்டியது போக பாக்கி மின்சாரம் இருந்தால் இந்த மின்சார போர்டு எடுத்துக்கொள்ள முயற்சி செய்யவேண்டும்.

முக்கியமாக நான் சொல்ல வேண்டியது ஒன்று இருக்கிறது. அதாவது இப்போது மினிமம் சார்ஜஸ் போடுவதன் காரணமாக முக்கியமாக விவசாயிகளெல்லாம் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். எனது தாழ்மையான அபிப்பிராயம் என்னவென்றால் இந்த மினி மம் சார்ஜையே எடுத்தாகவேண்டும். விவசாயத்தைப் பொறுத்த மட்டில் மினிமம் சார்ஜஸே இருக்கக் கூடாது. அநேக வெளி நாடுகளில் இம்மாதிரி இருப்பதாகத் தெரியவில்லை. நாம் உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்று எங்கு பார்த்தாலும் சொல்லிக்கொண்டிருக்கிறோம். அப்படி இருக்கும்போது விவசாயி களிடம் மினிமம் சார்ஜஸ் போட்டு வசூலிப்பது தகாத காரியம். மினிமம் சார்ஜஸ் இருப்பதால் அநேக விவசாயிகள் கஷ்டப்

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [19th August 1961

படுகிறார்கள். வேண்டுமானால் ரேட்டை கொஞ்சம் அதிகப்படுத்தலாமே தவிர, விவசாயிகளுக்கு மீட்டரைக்கொண்டு கன்ஸம்ஷன் பேரில் சார்ஜ‌ஸை வசூலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தவிர, அடிக்கடி மின்சார வெட்டு ஏற்படுவதின் காரணமாக விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். ஆனால் இந்த வருஷம் ஒருவிதமாக நாம் சமாளித்தோம். சமாளித்தபோதிலும், மின்சாரம் தேவையான அளவுக்கு இல்லாத காரணத்தினால் தான் நமக்கு இம்மாதிரியான கஷ்டங்கள் ஏற்பட்டு வருகின்றன என்பதைப் பார்க்கிறோம். அதிலும் குறிப்பாக, குரூப்பிங் அதாவது இணைப்புத் திட்டம் கொண்டு வருவதன் காரணமாக மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். இரவில் கனக்ஷன் கொடுத்து, தண்ணீர் இறைக்கவேண்டுமென்று விவசாயிகளைக் கூறினால் அது சாத்தியமான காரியமல்ல. அவர்கள் பகலில் நிலத்தில் அநேகவித கஷ்டங்கள் பட்டுவிட்டு இரவில் தூங்கும் நேரத்தில் மறுபடியும் கனக்ஷன் கொடுத்து, தண்ணீர் இறைக்கும்படி சொன்னால், அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். வேண்டுமானால் தொழிற்சாலைகளுக்கு இரவில் கனக்ஷன் கொடுத்து, அவர்களை இரவில் பயன்படுத்திக் கொள்ளும்படி செய்து விட்டு, ஏழை விவசாயிகளுக்கு அவசியம் பகலில் கனக்ஷன் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விவசாயத்தைப் பொறுத்த மட்டில் இதை அவசியம் செய்ய வேண்டும்.

இம்மாதிரி கனெக்ஷன் கொடுப்பதிலே லஞ்ச ஊழலும் அதிகமாக ஏற்படுகிறது. குறிப்பாக, என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் என்னிடம் அதிகமாக புகார்கள் இம்மாதிரி வருகின்றன. இதனால் என்னுடைய பிராந்தியத்திலே உள்ள விவசாயிகள் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள். இதைப் பற்றியும் கனம் அமைச்சர் அவர்கள் யோசித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தவிர, மின்சாரம் விஸ்தரிக்கப்பட்ட அநேக இடங்களில் சரியான முறையில் இன்னும் கனக்ஷன் கொடுக்காமல் இருக்கிறார்கள். கம்பங்கள் போடப்படவில்லை. லயின்கள் இழுக்கப்படவில்லை. இதனாலும் அநேக விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். இவைகளையும் உடனடியாக கவனித்து, மின்சாரம் சரிவர கிராமங்களுக்கு நல்லமுறையில் விநியோகிப்பதற்கும், போதுமான லயின்கள் இழுப்பதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தவிர, இந்த அறிக்கையில் பாக்வேர்ட் ஏரியா, பார்வேட் ஏரியா என்று இரண்டாக பிரித்து பின்தங்கிய பிரதேசம், முன்தங்கின பிரதேசம் என்று நிர்ணயித்திருப்பதைப் பார்த்தோம். இதை எந்த அடிப்படையில் நிர்ணயித்திருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. பின்தங்கிய பிரதேசம் என்று குறிப்பிடப்பட்டுள்ள சில பிரதேசங்களில் அநேகமாக எல்லா பகுதிகளுக்கும் மின்சாரம் விஸ்தரிக்கப்பட்டுள்ளதைப் பார்க்கிறோம். இப்படியெல்லாம் இல்லாமல் எந்தப் பகுதிகளில் விவசாயத்தில் உற்சாகம் காட்டுகிறார்களோ, அந்த இடங்களுக்கு எல்லாம் மின்சாரம் விநியோகிக்க ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்

19th August 1961] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

கொள்கிறேன். பின்தங்கிய பிரதேசங்களில் ஒரு குதிரை வேக ஓட்டத்திற்கு ரூபாய் 35 என்றும், முன்தங்கிய பிரதேசங்களுக்கு எல்லாம் ஒரு குதிரை வேக ஓட்டத்திற்கு 50 ரூபாய் என்றும் இந்த அறிக்கையில் போடப்பட்டு இருக்கிறது. இந்த டிபாசிட் கொடுக்க வேண்டிய தொகையை எந்தெந்தப் பிரதேசத்திற்கு எவ்வளவு ரேட்டுகள் போடப்பட்டிருக்கிறது என்பதைத் தெளிவாகத் தெரியப்படுத்த வேண்டும்.

தவிரவும், இன்னும் நம் ராஜ்யத்தில் இந்த பிரைவேட் அண்டர்டேக்கிங்ஸ் (Private undertakings) இருந்துகொண்டு இருக்கிறது. இதைப்பற்றி அநேகவித புகார்கள் எல்லாம் கூறப்பட்டு வருகிறது. சர்க்கார் அநேக துறைகளில் கடன் வாங்கி பல துறைகளில் ஈடுபடுவது போல், இந்தத் துறைக்கும் கொஞ்சம் தொகை ஒதுக்கி பிரைவேட் அண்டர் டேக்கிங்குகளை யெல்லாம் இல்லாமல் செய்து, அவற்றை யெல்லாம் சர்க்காரே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி எடுத்துக் கொண்டால் தான், இன்னும் அதிக வேகமாக பல கிராமங்களுக்கு மின்சாரத்தை விஸ்தரிக்கவும் முடியும். அதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயத்தைப் பொறுத்த வரையில் இந்த மினிமம் சார்ஜை அடியோடு நீக்கிவிட வேண்டும். இதனால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். கிணற்றில் தண்ணீர் இல்லாவிட்டாலும், அவர்கள் இந்த மினிமம் சார்ஜை கட்ட வேண்டியிருக்கிறது. ஆகவே இந்த மினிமம் சார்ஜை நீக்கி, வேண்டுமானால் ரேட்டை கொஞ்சம் உயர்த்தி, கன்சம்ஷன் எவ்வளவு ஆகிறதோ அந்த அளவுக்கு சார்ஜ் விதிக்கும்படி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த யோசனையை சர்க்கார் யோசித்து, உடனடியாக இவ்விஷயத்தில் எவ்வளவு தூரம் நன்மை செய்ய முடியுமோ அவ்வளவு தூரம் உதவும்படியாகக் கேட்டுக் கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

THE HON. SRI V. RAMIAH : சார்ஜை உயர்த்திக் கொள்ளலாமா ?

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : வேண்டுமானால் உயர்த்திக் கொள்ளலாம்.

* SRI T. K. SUBBIAH : உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கை விவாதத்திலே மின்துறை இலாகா நல்லமுறையில் வேலை செய்து, எல்லோரும் பாராட்டக்கூடிய இடத்திலே, நானும் பாராட்ட வேண்டிய இடத்திலே இருந்தும், இந்தச் சந்தர்ப்பத்திலே குறை சொல்லக் கூடியவனாக இருக்கிறேன் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக பின் தங்கிய பிரதேசம் என்று சொல்லக்கூடிய த. பழூர் என்ற இடத்திலே பல ஆண்டுக் காலமாக சொல்லி வந்தும், இதுவரையும் ஒரு கிராமத்திற்குக் கூட மின்சாரம் விஸ்தரிக்கப்படவில்லை. வெள்ள அலுவல் காரணமாக அதற்கு அடுத்துள்ளப் பகுதிக்கு வந்து போன அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிகளுக்கு எல்லாம் நல்ல முறையிலே விஸ்தரிப்பு வேலை செய்யும்படி உதவியிருக்கிறார்கள். அதேபோல் இந்தப் பகுதிக்கும் அவர்களுடைய கவனத்தைச்

செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக, எங்கள் ஜில்லாவில் சில பகுதிகள் லேசன்ஸ்தாரர்களுடைய பகுதியாக இருப்பதால், அந்த லேசன்ஸ்தாரர்கள் எப்போது அரசாங்கம் தங்களிடமிருந்து எடுத்துக் கொள்ளுமோ என்ற பயத்தால், அவர்களுடைய பகுதிகளுக்கு மின்சார விஸ்தரிப்புச் செய்யாமல் இருக்கிறார்கள். ஆகவே அரசாங்கம் திட்டவட்டமாக இத்தனை ஆண்டுகளுக்கு அவர்களிடமிருந்து எடுத்துக் கொள்ளப் போவதில்லை என்றாவது அல்லது இத்தனை ஆண்டுக்குள் நாங்கள் எடுத்துக் கொள்ளப் போகிறோம் என்றாவது அறிவிக்க வேண்டும். இந்த நிலைமை தெரியாது இருக்கின்ற காரணத்தினால் தான் அந்தப் பகுதிகளிலே மின்சாரம் விஸ்தரிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப் படுவதில்லை. குறிப்பாக, என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் நோண்டாக்குறிச்சி முதல் திருமானூர் வரையில் உள்ள எந்தக் கிராமங்களுக்கும் கடந்த 10 ஆண்டுக்காலமாக முயற்சி செய்தும் மின்சாரம் விஸ்தரிக்கப்படாமல் இருக்கிறது. இதைப் பற்றி லேசன்ஸ்தாரர்களைக் கேட்டால், நாங்கள் இந்த ஆண்டு அரசாங்கத்திடம் கடன் கேட்டிருக்கிறோம். இந்த வருஷ பட்ஜெட்டில் சாங்ஷன் ஆனால், இந்த வேலைகளை எடுத்துக் கொள்கிறோம் என்று சொல்லி வருகிறார்கள். இந்தக் குறையை நீக்கி, சீக்கிரமே அந்தப் பகுதிகளுக்கு மின்சாரம் விஸ்தரிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆனால் எங்கள் பகுதியின் தலைநகரமாகிய உடையார்பாளையம் தாலுகாவிற்கு மட்டும், அது பின்தங்கிய பகுதியாக கருதப்பட்டும், அமைச்சர் அவர்களின் தீவிர முயற்சியாலும், அரசாங்கத்தின் ஒத்துழைப்பாலும் உடையார்பாளையம் முதல் ஜெயங்கொண்டம் வரையிலும் மின் வசதி கிடைக்கப் பெற்றது. அதுவரையில் கிடைத்தும்கூட, அங்கிருந்து 4 மைல் தொலைவிலுள்ள என்னுடைய தொகுதிக்கு, அது சர்க்காரைச் சேர்ந்த பகுதியாக இருந்தும் கூட, ஒரு கிராமத்திற்குகூட மின்சாரம் விஸ்தரிக்கப்படாமல் இருக்கிறது. ஆகவே அந்தப் பகுதிக்கு மின்சாரத்தை விஸ்தரிப்பதற்கு உதயாநத்தம், கோடம்புத்தூர், தாழைஊத்து ஆகிய பகுதிகள் வரை உடனடியாக மின்சாரத்தை விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக, அங்கு ஆற்றுப் பாசன வசதி இருக்கிறது என்று காரணம் சொல்லப்பட்ட போதிலும், கோடை காலத்தில் கிணற்றுப் பாசனத்தைத்தான் நம்ப வேண்டியிருக்கிறது. தவிர, அங்கு எங்கு பார்த்தாலும் கரும்பு சாகுபடி செய்து, அந்த கரும்புகளை ஆயில் என்ஜின்கள் வைத்து சாறு பிழிந்து வருகிறார்கள். இந்த இடத்தில் மின்சாரம் விஸ்தரிக்கப்பட்டால், நிறைய சர்க்கரை, வெல்லம் ஆகியவைகளை உற்பத்தி செய்ய முடியும். இதைத் தவிர, அந்தப் பகுதிகளில் ஆயில் என்ஜின்களைத் தவிர, நிறைய பம்பு செட்டுகளும் வைத்து கோடை காலத்தில் தண்ணீர் இறைப்பதால், மின்சாரமும் அவசியமாக இருக்கிறது. அந்த மாதிரி கிராமத்திற்குப் பக்கத்தில் ஒரு மைல் தூரத்திலே மின்சார வசதி இருந்தும், அங்கு மின்சாரம் விஸ்தரிக்கப்படாமல் இருக்கிறது. அந்த கிராமங்களைச் சேர்ந்தவர்கள் தங்களுக்கு மின்சார விஸ்தரிப்புச் செய்யவேண்டுமென்று மனுக்

19th August 1961] [Sri T. K. Subbiah]

கள் செய்தும்கூட, இன்னும் விஸ்தரிக்கப்படவில்லை. இந்த மாதிரி விவசாய அபிவிருத்திக்கு ஆயில் என்ஜின்களை வைத்துக் கொண்டிருக்கும், என்னுடைய பகுதியிலுள்ள கிராமங்களுக்கு உடனடியாக மின்சாரம் விஸ்தரிக்கப்பட நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* SRI R. SRINIVASA IYER : Mr. Deputy Speaker, Sir, the financial statement of the Electricity Board for 1959–60 and 1960–61 is now before this House. Practically we are doing some post-mortem work and in the statement furnished to us, it is stated that the pro forma for the presentation of the budget has not yet been approved by Government and therefore in the usual form it is submitted. The expenditure comes to nearly Rs. 30 crores a year which will be more than one-third of the total budget of the whole State. When such is the case it is but proper that we should have a pro forma for the presentation of the budget in the proper from in which it is being presented in the general budget. This pro forma should be decided by Government at an early date. It could be stated that under the Indian Electricity Supply Act of 1948, the expenditure of the Board is not to be voted by this House. But yet considering the fact that Government are guaranteeing loans raised by the Electricity Board (Government is giving a loan of several lakhs to the Electricity Board), the way in which the money is going to be spent and in what way the expenditure is going to be incurred should be properly made known to the Legislature, at least before the expenditure is incurred. I don't say that the expenditure so far incurred is illegal. Now it is more than one year since 1960–61 is over. What is the use of considering the financial statement relating to that year? No useful purpose will be served.

With this prelude I would state that having had occasion to know the development of electricity in other States when I was at Mussorie in June this year, we must be proud that Madras leads in this respect and we have advanced much more than what we expected. We have exceeded the Second Plan target and in the Third Plan we propose to extend electricity to every village. In this aspect of rural electrification our progress is unique. Though in the consumption of electricity Bombay and Bengal lead us because they were industrialised earlier, we may hope that with the speed with which we are industrialising our State, we will reach at least the second place during the Third Plan period. So far as rural electrification is concerned, on pages 14–18 of the English booklet that is supplied to us, we find that we will be having all villages electrified during the Third Plan period. But there is a stumbling block. That is the licensee system. Either acquire all the licensees or at least tell them that for 10 years from now on, we will not acquire. In this booklet that is supplied to us, it is stated that the programme of acquisition has not yet been decided by Government. Every year it is stated so. The

[Sri R. Srinivasa Iyer] [19th August 1961

electricity supply undertakings are not prepared to invest capital for fear of acquisition soon after. They come to Government for loans. Rs. 25 lakhs is going to be given as loan during 1961-62. That will not be enough. In Arantangi taluk, there is an agitation for electrifying Ayankudi, Arasangulam and Subramanyapuram. The annual return from these villages is expected to be 20 per cent and not 15 per cent as is required. But the licensee, viz., the South Madras Electricity Corporation have applied for a loan. I would request that priority may be given to these places where there is no command of irrigation water from the Couvery-Mettur Project. There are already oil engine pumpsets working. Here lands are not commanded; they are at a higher level and therefore already oil engines are working. This place must be given preference because we have got to increase food production. For the three villages which are contiguous and wherein there are several houses built at a cost of more than Rs. 50,000 each the cost of extending electricity will not be much. The Panchayats are prepared to pay several thousands of rupees a year for electrification. I would submit that while granting loans, some list may be forwarded to the South Madras Electricity Corporation to electrify such of those places which are not commanded by irrigation project and which will make the best use of the power that would be supplied. In this connection I desire to bring to the notice of Government that electrification of Avanam and Tiruchitrambalam, which has been sanctioned some time ago, is being delayed for some reason or other. The loans granted must be enhanced and whenever a private electric corporation approaches Government for loan, Governmnet may be pleased to allocate certain amount for each. For rural electrification, I would also suggest that there must be a phased programme for each district. In this respect the Electricity Board is not properly representative. There is no non-official member in the Electricity Board. Last year when the same subject was discussed here, the Hon. Minister for Electricity stated that non-official members have been appointed in the Development Conucil for the State and in the District Development Councils. I respectfully submit that in a Board in which the amount of expenditure runs to several crores of rupees amounting to nearly one-third of the budget of the State, it is but proper that non-official members should be there, for the reason that they will take more interest in scrutinising the estimates, sanctioning estimates, in seeing whether excess expenditure has been incurred and if so properly incurred. When in other Electricity Supply Undertakings, non-officials have been appointed as members of the Board of Directors, it is but proper that in the State Electricity Board, non-officials are included, because it would then be possible to scrutinise each and every item in detail.

There are certain points which are being referred to by the public. I shall express certain opinions. The Accounts Department in any undertaking must be independent of the Chief Officer

19th August 1961] [Sri R. Srinivasa Iyer]

of the undertaking. It is the Accounts Department that acts as a real check on the estimates sanctioned and on the expenditure incurred for the hydro-electric and other thermal projects, including maintenance and operation. It is but proper that the Accounts Section in the Electricity Board should be independent of the Chief Engineer; the Chief Controller of Accounts should be independent of the Chief Engineer though he will be subordinate to the Electricity Board. Otherwise it is not possible for the Accounts Section to be a check that it is in every other department. There are several tenders which are called for and which are published in the newspapers. Sometimes global tenders are called for running to several crores of rupees. I cannot say definitely there is any irregularity as the details are not placed before us. Yet it is but proper that the public should know all these things. That is why I say non-official member should be there on the Board. Certain tenders are said not to have been accepted even though they were lowest tenders. There may be good reasons for not accepting them. But how are the public to know about these things? When this question of the Accounts Department being made independent was discussed, Chairman of the Electricity Board, who is now on leave, seems to have accepted it on principle. But it has not so far been carried out.

While acquiring an electricity undertaking, the value has got to be fixed. We have got to acquire several new undertakings. When that is done, there also the experience of non-officials who have been running this business and who are experienced in that line, and their services would be very useful.

So far as the cut in electric supply is concerned, the cut in the last year could not be avoided. The book given to us was perhaps prepared before the cut was imposed. We hope that at least in the Third Plan, an atomic plant will be installed (let me not quarrel now regarding the place in which it is to be located) in our State so that it will be possible not to have any cut in electric power for domestic as well as agricultural pumpsets, in future. The all-round progress made in the generation of electricity, the laying of thousands of miles of high and low tension lines during the Second Plan augur well for the Third Plan also. Even in the book circulated to the Members, it is stated that electrification of 1,000 villages every year and installation of 15,000 pumpsets every year will be maintained during the Third Five-Year Plan. As I have already stated, electric power is required also for small-scale industries in rural areas. The sooner we electrify all the villages, the better it would be.

SRI S. PAKKIRISAMI PILLAI : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழே, தமிழ் நாட்டில் மின்சார அபிவிருத்தியைக் குறித்து, அமைச்சரவர்கள் சமர்ப்பித்துள்ள அறிக்கையைக் கவனிக்கும்போது சில முக்கிய மான விஷயங்கள் தெள்ளத் தெளிவாகக் காணப்படுகிறது. 10·0 a.m.

[Sri S. Pakkirisami Pillai] [19th August 1961

மூன்றாவது திட்ட காலத்தில், மின்சாரத்தைப் பொறுத்த வரையில் கொடுத்திருக்கும் தகவலிலிருந்து செலவு சுமார் ரூ. 100 கோடி பிடிக்கும் என்றும், நெய்வேலி பழுப்பு நிலக்கரி மூலமாகவும், அனல் மின்சார வழியாகவும் கிடைக்கும் உபரி உற்பத்தியைச் சேர்த்து 13½ லட்சம் கிலோ வாட்ஸ் நமக்குக் கிடைக்கும் என்றும், நம் தமிழ் நாட்டில் தேவைப்படுகிற உற்பத்தித் திறன் சுமார் 14½ லட்சம் கி. வா. என்றும், இந்த உபரித் தேவையையும் இதர வழிகளில் கிடைக்கும் உற்பத்தியையும் வைத்து பார்த்தால், சுமார் 6 லட்சம் கி. வா. பற்றாக்குறையாக இருக்கும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அந்தப் பற்றாக்குறையைப் பூர்த்தி செய்ய என்ன நடவடிக்கைகள் எடுக்க யோசனை செய்திருக்கிறார்கள் என்று பார்க்கும்போது, அதற்கு அணு சக்தி மின்சார நிலையத்தை உண்டாக்கலாம் என்று சொல்லப் பட்டிருக்கிறது. அந்த நிலைமைக்கு மத்திய சர்க்காரே அல்லது திட்டக் கமிஷனோ ஒத்துக் கொள்ளவில்லையென்றால், அதை வற்புறுத்தியிருக்கிறோம், அப்படி அவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை யென்றால், மேற்கொண்டு மூலதனச் செலவை ஒத்துக்கொள்ள மாட்டோம், கொடுக்க மாட்டோம் என்று சொன்னால், தனியார் துறைக்கு ஊக்கம் கொடுக்கலாம் என்ற யோசனை அரசாங்கத்திற்கு இருக்கிறது என்று எடுத்துக் காண்பித்திருக்கிறார்கள். தமிழ் நாட்டில் உள்ள 19,900 கிராமங்களில், ஏற்கனவே மின்சாரம் அளிக்கப்பட்ட 11,000 கிராமங்கள் போக பாக்கி 9,000 சில்லரை கிராமங்களுக்கு இந்த மூன்றாவது திட்டத்தில் மின்சார வசதி அளிக்கலாம் என்று கண்டிருக்கிறது. மேலும் தமிழ் நாட்டில் இருக்கும் பஞ்சாலை மற்ற தொழில்களில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளிகளுக்கு மூன்றாவது ஷிப்டு வேலை செய்ய மின்சார சக்தியைக் கொடுக்க போர்டார் உத்தரவிட்டுள்ளார்கள் என்றும் சொல்லுகிறார்கள். அப்படிச் சொல்லும்போது, அப்படி அனுமதி கொடுத்திருந்தும், பலவிதக் கட்டுப்பாடுகள் இருக்கின்றன. இந்த மணி நேரத்திலிருந்து, இந்த மணி வரையில் தான் வேலை செய்ய வேண்டும், ஒரே நாளில் இரண்டு, மூன்று இடங்களில் வேலைசெய்யக் கூடாது என்பது போன்ற கட்டுப்பாடுகளின் காரணத்தினால், எப்படி மூன்றாவது ஷிப்டு வேலை செய்ய முடியும் ? எட்டு மணி நேரம் வீதம் மூன்று ஷிப்டுகள், இந்தக் கட்டுப்பாடுகளின் கீழ், செய்ய இடம் ஏது ? மூன்றாவது ஷிப்டு செய்ய முடியாது என்பது தெள்ளத் தெளிவு. இல்லை, முதலாளிகள் தான் குறைந்த மணி நேரம் வேலைசெய்ய ஒத்துக் கொள்வார்களா ? ஆகவே, இந்த மூன்றாவது ஷிப்டு என்பது செய்ய முடியாத காரியம்.

ஒரு நபர் மின்சார உபயோகமானது, இரண்டாவது திட்ட காலத்தில் 60 யூனிட்டாக இருந்தது, அது மூன்றாவது திட்ட காலத்தில் கடைசியில் 160 யூனிட்டுகளாக்க முடியும், அதற்கு வசதி செய்து கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொல்லிவிட்டுக் கடைசியில், மேல் நாடுகளில் தனி நபர் சராசரி "பர் காபிடா கன்சம்ஷன்" 2,000 யூனிட்டு, 4,000 யூனிட்டு என்று உபயோகிக்கிறார்கள் என்று சொல்லி, நம் நாட்

19th August 1961] [Sri S. Pakkirisami Pillai]

டையும் இதர நாடுகளையும் ஒப்பிட்டிருக்கிறார்கள். இந்த ஒப்பனை யைப் பார்க்கும்போது, ஆச்சரியமாகவும் வியப்பாகவும்தான் இருக்கிறது. அவ்வளவு பிற்போக்கான நிலையில், பின் தங்கிய நிலையில் நம் நாடு இன்னும் இருந்து வருகிறது. அவர்களது நிலைக்கு வர நமக்கு வெகுகாலம் பிடிக்கும்போல் இருக்கிறது. நாம் பொருளாதாரத்திலும் மற்ற வகைகளில்கூட அவர்களுக்குச் சமமாக வந்தாகவேண்டும் அம்மாதிரி முயற்சியில் நம் மின்சாரத் துறை எஞ்னியர்களும், அலுவலர்களும், தொழிலாளிகளும் கூடியிருந்து வேலை செய்திருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நமது நன்றி. இனிமேலும் அவர்களுக்கு ஊக்கமளிக்கும் முறையில் அவர்களை உற்சாகப்படுத்தும் வழியில் காரியங்கள் செய்யவேண்டும் என்று அமைச்சரவர்கள் சொல்வதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும். அதே சமயத்தில் தொழிலாளர்கள் நலன் என்று வரும் சமயத்தில் மட்டும் சிக்கனம் பார்ப்பதும் கூடாது என்பதை சொல்ல விரும்புகிறேன். எல்லோருமாகச் சேர்ந்து போட்டி போட்டுக்கொண்டு அபிவிருத்திக்குக் கொண்டு வருவதைப் பற்றி சந்தோஷமடையத்தான் வேண்டும். அவர் களுக்கு நம் நன்றியையும் செலுத்த வேண்டும். ஆனாலும், தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட வரையில் செயல் முறையில் பார்க்கும்போது சில பல கட்டுப்பாடுகளை ஏற்படுத்தியிருக்கிறார் கள். அவர்கள் நாளெல்லாம் வேலைசெய்துதான் ஆகவேண்டும். தொழிலாளிகள் காலையில் ஆறு அல்லது ஆறரை மணிக்குத் தொழிற்சாலையில் நுழைய வேண்டும். பிறகு மத்தியான சாப்பாட் டுக்காக அரை மணி அல்லது முக்கால் மணி நேரம் கிடைக் கிறது. அதற்குள்ளே அவர்கள் ஓடி, ஓடி சாப்பிட்டு விட்டு திரும்பி வரவேண்டும்; வந்து தொழிற்சாலையில் மெஷின் மெஷினுகச் சென்று வேலை செய்ய வேண்டும். அந்த நிலையில்தான் தொழி லாளிகள் வைக்கப்பட்டிருக்கிறார்கள். நடு நிசியிலும் வேலை செய்யும்படியாக இருந்துகொண்டிருக்கிறார்கள். இப்படி ஒரு பெருத்த உழைக்கும் கூட்டத்தைக் கஷ்டப்படுத்தி மற்றவர் களுக்கு வசதி செய்து கொடுக்கும்படியான முறையைத் தவிர்க்க வேண்டும். இம்மாதிரியான கஷ்டம் இல்லாமலேயே உற்பத்தி யைப் பெருக்கி, அதிகமான அளவுக்கு விஸ்தரிக்கும்படியான நிலையில் அரசாங்கம் ஏற்பாடு செய்யலாம். 'ராப் பீடர் அண்டு பே பால்' என்ற கொள்கை இந்தத் துறையிலிருந்து நீக்கப்பட வேண்டும். இம்மாதிரியான நிலைமை அங்கு இருக்குமானால், மேலும் கசந்து போகும்படியான நிலைக்கு தொழிலாளர்கள் அங்கு வந்துவிடுவார்கள். எந்தப் பகுதியாருக்கும் இன்னல் இல்லாத வகையில் மின்சாரத் துறை நடந்துகொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கின்றேன்.

* **Sri V. K. KRISHNAMURTHI**: அவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டு அரசினர் மின்சாரக் குழுவின் வரவு செலவுத் திட்டத்தை நான் வரவேற்றுப் பாராட்டுகின்றேன். தலைசிறந்த நல்ல திட்டமாக இது விளங்குவதோடு மாத்திரமல்லாமல், விவசா

[Sri V. K. Krishnamurthi] [19th August 1961

யத்திற்கும் கைத்தொழிலுக்கும் மிகச் சிறந்த முறையிலே அறம் செய்துகொண்டிருக்கிறது. என்றாலுங்கூட, வடாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இதனுடைய வளர்ச்சி முழுவதும் பலன் அளிக்காமல் இருப்பதற்குரிய பல தடைகள் இருக்கின்றன என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

குறிப்பாகக் கூறுகின்றபோது, பாலாறு பேசின் ஆக்ட் என்ற சட்டம் வடாற்காடு மாவட்டத்தில் நிலவியிருக்கிறது. அதன் காரணமாக இரண்டு ஆயிரம் அடி இடைவெளியில் மின்சாரம் பரப்பப்படக்கூடாதென்ற திட்டம் இருப்பது மட்டுமல்ல, பாசனக் கால்வாய், ஊற்றுக் கால்வாய் ஓடும் இடத்திற்கு அருகிலும் மின்சார பம்ப் செட் அமைக்கக் கூடாது என்ற விதி இருக்கிறது. பாசனக் கால்வாய், ஊற்றுக் கால்வாய், பாலாறு பேசின் ரூல்ஸ் இவை குறுக்கிடுவதனால் வடாற்காடு மாவட்டம் முழுப் பலனை அடைய முடியவில்லை.

ஒரு கிணற்றுக்கு ஒரு பம்ப் செட் இருக்குமானால், அதைச் சுற்றியுள்ள இரண்டாயிரம் அடி வரையில் மீண்டும் பம்ப் செட் அமைக்கக் கூடாது என்ற வகையில் மின்சாரத் துறையிலே ஒரு சட்டம் இப்பொழுது அமுலில் இருக்கிறது. பாலாறு பேசின் ஆக்ட்டை வெல்லக் கூடிய முறையில், சமுதாயம் பலன் அடைய முடியாத வகையில், ஒரு கிணற்றைச் சுற்றியுள்ள இரண்டாயிரம் அடிக்கு மீண்டும் மின்சார பம்ப் செட் வைக்கக் கூடாது என்ற விதி இருப்பதால் வடாற்காடு மாவட்ட விவசாயிகள் அத்தனை பேரும் துன்பப் படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

லைசன்ஸ்தார் பகுதி என்ற மற்றொரு அவலம் இருக்கிறது. வட்டி, வாடகை, லாபம் என்ற மூன்றையும் அடிப்படையாகக் கொண்டு இவர்கள் இருக்கிறார்கள். சமுதாயம் பலன் அடைய வேண்டுமென்ற எண்ணத்தை அவர்கள் கைவிட்டு, லாபத்தையே அடிப்படையாகக் கொண்டு இயங்குகின்ற காரணத்தால், அரசாங்கம் எடுத்துப் பரப்பும் பகுதியில் எந்த அளவு விரிவாகவும் சுறுசுறுப்பாகவும் பரப்பப்படுகிறதோ அந்த அளவுக்குப் பரப்பப்படவில்லை. ஏறக்குறைய நான்கு ஆண்டுகளாக இதே நிலை வடாற்காடு மாவட்டத்தில் இருந்துகொண்டிருக்கிறது. ஒரு அங்குலம்கூட முன்னேற்றம் அடைய முடியவில்லை. விவசாயிகள் பட்ட துன்பம் மேற்கொண்டும் பட்டுக்கொண்டுதான் இருக்கிறார்கள். அதே நேரத்தில் அறிக்கையைப் பார்க்கும்போது, எந்த எந்தப் பகுதிகள் பின் தங்கி இருக்கின்றனவோ, எந்த எந்தப் பகுதிகள் மிகச் சிறந்த முறையில் விவசாயத் துறையில் ஈடுபட்டிருக்கின்றனவோ அந்தப் பகுதிகளுக்கு முன்னோடியாக, முதன்மையாக இந்த மின்சாரம் வழங்குவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்த வரையில், தஞ்சாவூருக்கு அடுத்து விவசாயத்திலே இரண்டாவது விளங்கும் பகுதி வடாற்காடு மாவட்டம் என்பது அனைவரும் அறிந்ததே. பாலாறு பேசின் ஆக்ட் தடையும், சப்ளை சானல் தடையும் ஊற்றுக் கால்வாய்த் தடையும், ஒரு

19th August 1961] [Sri V. K. Krishnamurthi]

கிணற்றுக்கும் மற்றொரு கிணற்றுக்கும் இடையே இரண்டாயிரம் அடி தூரம் இருந்தால், பம்ப் செட் வைக்கக்கூடாது என்ற குறைகளும் தடையும் மலைபோல் குவிந்திருந்தாலும், வடாற்காடு மாவட்டம், அங்குள்ள விவசாயிகளின் உழைப்பு காரணமாக விவசாயத்தில் இரண்டாவது மாவட்டமாக விளங்கிக்கொண்டிருக்கிறது. இந்தத் தடைகள் அத்தனையையும் நீக்கி, மிகச் சிறந்த முறையில் வடாற்காடு மாவட்டத்தில் அரசாங்கம் விரைந்து, பரபரப்புடன் நுழைந்து சிறந்த முறையில் பணியாற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

கணியம்பாடிப் பகுதி வட்டார வளர்ச்சியில் இருந்தாலும், அங்கு விவசாயிகள் மின்சாரத்தை அனுபவிக்கக்கூடிய வாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள். என்றாலும்கூட, 12 யூனிட்டுகள் என்பது 21-ஆக வளர்ந்து, இப்பொழுது 60 யூனிட்டுகளாக வளர்ந்திருக்கும் முறையைப் பார்க்கும்போது, இந்தத் திட்டம் சிறந்த முறையில், தமிழ்நாட்டுக்கு மிக விரிவான முறையில், பலன் அளிப்பது மட்டுமல்ல, அனைத்திந்தியாவுக்கு வழிகாட்டியாக, முன்னோடியாக இருந்தாலுங்கூட, வடாற்காடு மாவட்டம், பாலாறு பேசின் சட்டத்தால் பின்தங்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இந்தச் சட்டத்தைத் தகர்த்தெறிந்து எல்லா விவசாயிகளும் பலன் அடைவதற்காக ஆவன செய்யுமாறு கேட்டுக்கொண்டு, இந்த வரவு செலவுத் திட்டத்தை வரவேற்று ஆதரிக்கிறேன்.

* SRI S. RAMALINGA PADAYACHI : உதவி சபாநாயகர் அவர்களே, நமது மாநில மின்சார அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த மின்சார அறிக்கையை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நமது மாநிலத்தில் மின்சார விஸ்தரிப்பு அதிவேகமாக முன்னேறி வருகிறது. அதற்கு மின்சார அமைச்சர் அவர்கள், இன்ஜினியர்கள் இவர்களுடைய முயற்சிதான் காரணம் என்பதில் சந்தேகம் இல்லை.

நமது நாட்டிலே மின்சாரம் அதிகமான அளவுக்குக் கிடைத்தாலுங்கூட, துரதிருஷ்டவசமாக, எங்கள் உடையார்பாளையம் தாலுகாவில் இதுவரையில் விஸ்தரிக்கப்படாமலிருந்தது. இப்பொழுது கொடுத்த அறிக்கையில் உடையார்பாளையம், பெரம்பலூர், முசிறி தாலுகாக்களுக்கு இந்த ஆண்டில் மின்சாரம் கொடுப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதற்காக நான் மிகவும் சந்தோஷம் அடைகிறேன்.

உடையார்பாளையம் தாலுகாவில் இதுவரை எந்தவிதமான முன்னேற்றமும் இல்லாமலிருந்தது. பதினைந்து ஆண்டு காலமாக அங்கு மின்சார விஸ்தரிப்பு நடைபெறாததற்குக் காரணம், அங்குள்ள லைசன்ஸ்தார்தான். அந்த நிலைமையை இப்பொழுது மாற்றியமைத்து, அரசாங்கமே அந்தப் பொறுப்பை எடுத்துக்கொண்டிருப்பதால், உடையார்பாளையம் தாலுகா முன்னேறி வருவதைக் கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

[Sri S. Ramalinga Padayachi] [19th August 1961

" முன்னேற்றமடைந்த பகுதியில் அதிகப்பட்ச விசேஷ உத்தர வாதத் தொகை, குதிரை சக்தி ஒன்றுக்கு ரூ. 50-லிருந்து ரூ. 45-ஆகக் குறைக்கப்பட்டிருக்கிறது. பின்னடைந்த பிரதேசங்களில் இது குதிரை சக்தி ஒன்றுக்கு ரூ. 35-ஆகக் குறைக்கப்பட்டிருக் கிறது" என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. விவசாயப் பெருக்கமானது எந்த இடத்தில் ஏற்பட் டாலும் அது நல்லதே. முற்பட்ட பகுதி, பிற்பட்ட பகுதி என்று விவசாயத்தைப் பொறுத்தவரையில் பிரிக்கவேண்டிய அவசியம் இல்லை. ஆனால், தொழில்களைப் பொறுத்தவரையில் பிரித்தால் பரவாயில்லை. ஆகவே, முற்பட்ட பகுதியாக இருந்தாலும், பிற் பட்ட பகுதியாக இருந்தாலும், எல்லா இடங்களிலும் விவசாயத் தைப் பொறுத்தவரையில் அதிகபட்ச விசேஷ உத்தரவாதத் தொகை குதிரை சக்தியொன்றுக்கு ரூ. 35-ஆக இருப்பது நல்லது என்று நான் கருதுகிறேன்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில்கூட, நமக்குப் போதிய அளவு மின்சாரம் கிடைக்க முடியாத நிலைமை இருக் கிறது. நமக்குக் கிடைக்கக்கூடிய 8.67 லட்சம் கிலோவாட் மின்சா ரத்தைக் கொண்டு 60 சத விகிதத் தேவையைத்தான் பூர்த்தி செய்துகொள்ள முடியும். இன்னும் அதிகமாகத் தேவைப்படு கிறது. மூன்றாவது திட்ட காலத்திற்குள் 13.47 லட்சம் கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியுமென்றாலுங்கூட, நிலையான உற் பத்திச் சக்தி 8.67 லட்சம் கிலோவாட்டாகத்தான் இருக்கும் என்ற புள்ளி விவரத்தைப் பார்க்கும்போது, நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பற்றாக் குறை பூர்த்தி செய்யப்பட்டு, முழு உற்பத்திச் சக்தி பெருகி, நமது மாநிலத்தில் எங்கு பார்த்தாலும், மின்சார வசதியைப் பார்க்க முடியும் என்ற நம்பிக்கை ஏற்படு கிறது. ஆகவே, முழு மூச்சில் திட்டமிட்டபடி உற்பத்தியைப் பெருக்கவேண்டும். மூன்றாவது திட்டத்தில் ரூ. 100.19 கோடி ரூபாய் வரையில் மின்சார அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்டிருப்பது போல், நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்கு இன்னும் அதிகமாக தொகை ஒதுக்கி அபிவிருத்தி செய்தால் நமது மாநிலத் தில் மின்சாரம் எல்லா இடங்களுக்கும் கொடுக்கமுடியும். அடுத்த படியாக எங்கள் பகுதியிலே எங்கே பார்த்தாலும் நிறையக் கிணறுகள் இருக்கின்றன. இறவை மூலமாகத் தண்ணீர் இறைத்து வருகிறார்கள். அந்தக் கிணறுகளுக்கு எல்லாம் உடனடியாக மின்சாரம் சப்ளை செய்து இந்த ஆண்டிலேயே மின்சார பம்பு செட்டுகள் அங்கே வைப்பதற்கு சர்க்கார் உதவி செய்யவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் எங்கள் பகுதியிலே லைசென்சு ஏரியா இருப்பதாக எனக்கு முன் பேசிய சக மெம்பர்கள் சொன்னார்கள். அதையும் நீக்கி மின்சார போர்டின் கீழேயே நிர்வாகம் வரும்படியாகச் செய்யவேண்டும். மின்சார போர்டே அந்தப் பகுதியையும் எடுத்துக்கொண்டு நடத்தினால் தான் நன்றாக இருக்கும். தனியா ரிடம் லைசென்சு இன்னும் இருப்பதனால் லாபம் இருக்கக்கூடிய பகுதிகளைத்தான் எடுத்துக்கொள்கிறார்கள். மற்ற இடங்களுக்கு விஸ்தரிப்பதில்லை. எங்கள் பகுதியைப் போன்ற பிற்பட்ட பகுதி

களுக்கும் உடனடியாக விஸ்தரிக்க தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று முதல் அமைச்சர் அவர்களேயும், மின்சார இலாகா அமைச்சர் அவர்களேயும் கேட்டுக்கொண்டு இத்துடன் என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

Sri P. S. SANTHANAM : சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் மின்சார போர்டு வரவுசெலவுக் கணக்கு விவாதத்தின்மீது என்னுடைய கருத்தினைச் சொல்ல விருப்பம் உடையவனாக இருக்கிறேன். அமைச்சர் அவர்கள் கொடுத்த மின்சார திட்டத்தின்கீழ்--நாம் சுதந்திரம் பெற்ற பின்னர் அடியடியாக பின்னால் இருந்து பதினொன்று, இருபத்தொன்று, அறுபது, அறுபத்தொன்று என்று படிப்படியாக முன்னேறியிருப்பதைப் பார்க்கிறோம். உண்மையில் ஒருவிதத்தில் இதைப்பற்றி சந்தோஷப்படத்தான் வேண்டும். அதுவும் இரண்டாயிரம், நாலாயிரம் என்று உயர்ந்துகொண்டே போய் விவசாயிகள் அதிகமானபேர் நன்மை அடைகின்ற நிலையையும் பார்க்கிறபோது பெருமை அடையவேண்டும். நம்நாட்டில் நூற்றுக்கு 80 பேர்களுக்குமேல் விவசாயத்தில் தான் ஈடுபட்டிருக்கிறார்கள். மேல் நாடுகளில் எட்டுபேர், ஐந்துபேர்கள்தான் விவசாயிகளாக இருப்பார்கள் என்று நமது நிதி அமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் சுற்றுப் பிரயாணம் செய்துவந்தபிறகு கண் திறந்து கண்ட உண்மையை விளக்கியிருக்கிறார்கள். இங்கு அப்படியில்லை. அதிலும் தமிழகத்தில் தான் அதிகமாக மின்சாரம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது, வடஆற்காட்டில் உள்ளவர்கள் அதிகமாக உபயோகப்படுத்துகிறார்கள் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆகவே வட ஆற்காட்டைச் சேர்ந்த நான் பெருமைப் படவேண்டும். இருந்தாலும் அந்த மாவட்ட ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் குறைபாடுகள் சொல்கிறார்கள். விவசாயிகளுக்கு நல்லமுறையில் அந்தத் திட்டம் பயன்படவேண்டுமானால் பாலாறு பேசின் விதியை எடுத்துவிட்டு அங்குள்ள பகுதியில் மின்சார பம்பு செட்டு வைப்பதற்கு அனுமதி கொடுத்தால் தஞ்சை மாவட்டத்தை எட்டிப்பிடிக்கின்ற சிறந்த நிலவளப் பகுதியாக இது ஆகும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மின்சார திட்டத்தினால் விவசாயிகளுக்கு நல்ல பலன் கிடைக்க வேண்டும் என்று நாம் விரும்புகின்ற நேரத்தில் மின்சாரக் கருவிகள் கிடைக்காத அவல நிலை நிலவுகிறது என்பதை கனம் அமைச்சர் அவர்களே நன்கு உணர்வார்கள். அந்த நிலையைப் போக்கவேண்டுமானால் மின்சார போர்டு கூட்டுறவு இலாகா மூலமாக விவசாயிகளுக்கு நேரிடையாக மின்சாரக் கருவிகளை விற்பனை செய்ய ஏற்பாடு செய்யவேண்டும். அதற்கான வழி வகைகளை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று. விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்குவதில் ஒரு குடும்பத்தில் நான்கு ஏக்கர் நிலம், ஐந்து ஏக்கர் நிலம் இருக்கும். அண்ணன் தம்பி இரண்டு பேர்களுக்கும் பொதுவாக ஒரு கிணறு இருக்கும். அதில் சரிபாதி இரண்டுபேருக்கும் சொந்தம் என்றால்

[Sri P. S. Santhanam] [19th August 1961

அண்ணன் பம்பு செட்டு வைத்தால் தம்பிக்கு இல்லை, தம்பி வைத்தால் அண்ணனுக்கு இல்லை என்கிற கஷ்டமான நிலையைச் சர்க்கார் கவனித்து தக்க வழிவகை செய்யவேண்டும். எனக்கு முன் பேசிய கனம் அங்கத்தினர்கள் சொன்னார்கள். இந்தச் சிக்கல் என்னுடைய மாவட்டத்தில் தான் அதிகம். ஏறக்குறைய ஒரு ஏரியின் கீழ் ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் நிலம் என்று பிரித்துக்கொண்டு நான்கைந்து ஏக்கர் இருக்கும். அங்கங்கே கிணறுகள் வெட்டிக்கொண்டு பயிர் செய்து வருவார்கள். அங்கே மின்சார சக்தியைக் கொடுக்கும்போது இரண்டாயிரம் அடி, ஆயிரம் அடி என்று கொடுக்கிற திட்டத்தை எடுத்துவிடவேண்டும். இந்தத் திட்டத்தினால் சில கஷ்டங்கள் ஏற்படுகின்றன என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அத்தகைய கஷ்டத்தை உடனடியாக நீக்கவேண்டுமானால் 200 அடி, 150 அடி, 100 அடி என்று தரை அளவை நீக்கிவிட்டு நிரந்தர அளவை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமாத்திரம் அல்ல. மின்சார ஊழியர்களுடைய நிலை என்னது என்று பார்க்கவேண்டும். சீரைத் தேடி ஊசியைத் தேடு என்பார்கள். அப்படி இன்றைய தினம் தொழிலாளர்களுடைய நிலைமையை முதலில் கவனிக்க வேண்டும். காலையில் எழுந்திருந்து ஒரு தொழிலாளி வெளியே கிளம்பினான் என்றால் மாலை வருவது நிச்சயம் இல்லை. பெரிய சர்ப்பத்தோடு பழகுவது போன்றது மின்சார ஒயர்களிலே வேலை செய்வது. . . . பட்டால் போய்விடும் உயிர். சமீபத்தில் பத்திரிகையில் கூடப் பார்த்தேன். மின்சாரத் தொழிலாளர்களில் இரண்டு பேர் செத்தார்கள், மூன்று பேர் அடிபட்டார்கள்--என்று. அவர்களுடைய குடும்பத்திற்கு சர்க்கார் அனுதாபத்தோடு உதவி செய்தார்கள் என்று நினைக்கிறேன். இப்படி தங்கள் உயிரை அர்ப்பணம் பண்ணிவிட்டு அவர்கள் பணி செய்கிறார்கள். அவர்கள் ஸ்ட்ரைக் செய்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் நாம் தான். அவர்களுடைய கோரிக்கைகளை நியாயமான முறையில் பூர்த்தி செய்தால் அவர்களுடைய கஷ்டங்களைப் போக்கினால், விடுமுறை வசதிகளை அளித்தால் அவர்கள் வேலை நிறுத்தத்தில் இறங்கமாட்டார்கள். அவர்கள் எத்தனை கஷ்டப்பட்டு வேலை செய்கிறார்கள் என்பதை கிராமங்களுக்குச் சென்று பார்த்தால் தெரியும். அம்மா இட்ட செவ் வெண்ணெய் நிலத்தில் வழிய வேலை செய்கிறார்கள். என்போன்ற ஏழைகளுக்குத்தான் அந்தப் பாட்டாளிகளுடைய நிலை நன்கு தெரியும். ஆகவே அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை உடனடியாகப் பூர்த்தி செய்ய தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று. அடிக்கடி திடீர் திடீரென்று மின்சார வெட்டுகள் வருகிற நேரத்தில் விவசாயிகளுக்கு இரவு மின்சாரம் சப்ளை செய்கிறார்கள். நஞ்சை நிலத்திற்குப் பாய்ச்சுவதாக இருந்தால் இரவில்கூட மின்சாரம் தரலாம். அதில் சிரமம் ஒன்றும் இருக்காது. ஆனால் தோட்டத்திற்கு வெட்டிவிட்டுத் தண்ணீர் பாய்ச்சவேண்டுமென்றால் இரவுக் காலங்களில் மின்சாரம் சப்ளை செய்தால் மிகவும் கஷ்டமாக இருக்கும். இதனால் கரும்புச் சாகு

19th August 1961] [Sri P. S. Santhanam]

படி, புகையிலைச் சாகுபடி இவையெல்லாம் பாதிக்கப்படுறது. அதனால் அத்தகைய முறையை நீக்கி விவசாயிகளுக்கு வெட்டு இல்லாமல் மின்சாரம் கிடைக்கும்படி செய்யவேண்டும்.

10-30 a.m.

விவசாயத்தை வளர்ப்பதற்கு அதிகமான மின்சாரம் தேவைப் படும். நான் குறிப்பிட்ட அந்த அவல நிலையைப் போக்குவதற்கு இந்த திட்டத்தை நல்ல முறையில் வகுக்க சர்க்கார் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆகையால் கனம் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் மின்சார பட் ஜெட்டை ஆதரிக்கிறேன். மின்சாரம் அதிக அளவில் கிடைப்ப தற்கு குறிப்பாக வட ஆற்காட்டுக்கு அதிகமாக கிடைப்பதற்கு அவர்களைப் பாராட்டிக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

* SRI S. RAMASAMI THEVAR: கனம் சபைத் தலைவர் அவர்களே, இப்போது கொண்டுவந்திருக்கும் மானியக்கோரிக்கை மீது நடக்கும் விவாதத்தில் நானும் கலந்துகொண்டு ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இன்று மின்சாரம் தமிழ் நாட்டில் எல்லாக் கிராமங்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. உண்மையிலே மக்கள் பெரும் பயன் அடைந்திருக்கிறார்கள் என்ப தைக் குறித்து நான் மகிழ்ச்சி அடையாமல் இருக்க முடியாது. இருந்தாலும்கூட சென்ற 4½ ஆண்டுகாலமாக எங்கள் பகுதியில் பல தடவை வற்புறுத்தியும்கூட மின்சாரம் கொடுக்கவில்லை. அறந் தாங்கி நகரத்திற்கு மட்டும்தான் மின்சாரம் கொடுக்கப்பட்டிருக் கிறது. அதுவும் 1941-ம் ஆண்டிலே அறந்தாங்கி நகரத்திற்கு மட்டும்தான் வெளிச்சம் போடப்பட்டது. அப்போது யுத்தகால மாகையால் பிளாக் அவுட் வந்தது. இது ஒரு அபசகுனமாக இன்றுவரை அறந்தாங்கி பஞ்சாயத்து எல்லைக்கு அப்பால் ஒரு அடிகூட மின்சாரம் வரவில்லை. அறந்தாங்கி தாலுக்கா ஒரு பிற் பட்ட பகுதி. இதுவரையில் அங்குள்ள மக்கள் இலங்கையை நம்பியிருந்துக்கொண்டிருந்தார்கள். விவசாயம் அதிகம் கவனிக் கப்படவில்லை. ஆனால் இப்பொழுது உள்ள நிலைமை மிகவும் மோச மாகயிருக்கிறது. விவசாயமன்றி வேறு வழியில்லை. அப்பகுதியி லுள்ள மக்கள் பெரும்பாலும் பணவசதி இல்லாமல் புஞ்செய் நிலத்தையே விவசாயத்திற்கு நம்பி இருக்கிறார்கள். அறுநூறு, எழுநூறு ரூபாய் கொடுத்து ஒரு ஜோடி மாடு வாங்கி கவலையடித்த மறு வருஷத்திலே அதை விற்றால் 200, 300 ரூபாய்கூட கிடைக்காத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அப்பகுதி மக்களுக்கு மின்சார வசதி செய்துகொடுத்தால்தான் அவர்கள் பயன்பெற்று நன்றாக வாழ முடியும். அப்படி வாழ்ந்தால்தான் உணவு உற்பத்தியும் பெருகும் என்று நான் சொல்லவேண்டியதில்லை. முக்கியமாக அரசங்குளம், ஆயங்குடி, சுப்பிரமணியபுரம் கிராமங்கள் போன்ற பகுதியில், குறிப்பாக வடபகுதியில் மின்சாரம் கிடைக் காமல் அங்குள்ள விவசாய மக்கள் பெரும்பாலோர் மிகவும் கஷ்டப் படுகிறார்கள். அங்குள்ள மக்கள் பெரும் உழைப்பாளிகள். அறந் தாங்கியிலிருந்து வாராவாரம் 50, 75 லாரிகள் காய்கறிகள் வெளி ஊருக்குப் போய்க்கொண்டிருக்கின்றன. குறிப்பாக நாங்கள்

மிளகாய் அனுப்பிக்கொண்டிருக்கிறோம். அப்பகுதி மக்களுக்கு மின்சாரம் கொடுத்தால் அவர்கள் அதிகமான அளவில் அபி விருத்தி செய்வார்கள் என்று சொல்லவிரும்புகிறேன்.

(Srimathi T. N. Anandanayaki in the chair.)

மற்றும் மின்சார வெட்டு ஏற்படும் காலத்தில் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். விவசாயிகள் அப்போது கவலைக்கட்டி தண்ணீர் பாய்ச்சவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. உண்மையி லேயே விவசாய அனுபவம் பெற்றவர்கள் கவலைக் கட்டித் தண்ணீர் பாய்ச்சுவதில் எவ்வளவு கஷ்டம் இருக்கிறதென்று சொல்லுவார் கள். மோட்டார் வைத்து தண்ணீர் இறைக்கும் விவசாயிகளுக்கு இவ்வளவு கஷ்டம் ஏற்படாது. ஆனால் புஞ்சை நிலத்தையே நம்பி வாழும் விவசாயிகளுக்கு அதிக கஷ்டம் ஏற்படுகிறது. சாதாரண மாக புஞ்சை நிலத்தைப் பயிரிடவேண்டுமானால் பாத்தியிட்டு, ஒவ்வொரு பாத்திக்கும் தண்ணீர் பாய்ச்சவேண்டும். அப்படி இரவில் பாய்ச்சும்போது ஒரு பகுதிக்கு தண்ணீர் பாயும் ஒரு பகுதிக்கு தண்ணீர் பாயாது. இதனால் பல கஷ்டங்கள் ஏற்படு கின்றன என்பதை நான் சொல்லத் தேவையில்லை. ஆகவே விவசாயி களுக்கு முக்கியமாக தண்ணீர் இறைப்பதற்கு பகலில் மின்சார வசதி செய்துகொடுக்கவேண்டுமென்று பெரிதும் வேண்டிக் கொள்ளுகிறேன். மற்ற தொழில்கள் சம்பந்தப்பட்டவரை மின்சார வெட்டு இருந்தாலும், விவசாயத்தைப் பொறுத்தவரை மின்சார வெட்டு கூடாது. ஏனென்றால், மற்றத் தொழில்களுக்கு மின்சாரவெட்டு ஏற்பட்டால் அவர்கள் சில நாட்கள் கழித்து வேலையைத் துவங்க முடியும். ஆனால் விவசாயத்தைப் பொறுத்தவரையில் குறிப்பாக மிளகாய் போன்ற பயிரை எடுத்துக்கொண்டால் ஒன்றிரண்டு நாட்களுக்கு தண்ணீர் பாய்ச் சாவிட்டால் அது பட்டுப்போய் உற்பத்தி பாதிக்கும். ஆதலால் விவசாயிகளுக்கு மின்சாரம் வினியோகிப்பதில் முதலிடம் கொடுப் பதோடு மின்சார வெட்டு இல்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன். என்னுடைய பகுதி மிகவும் பிற்போக்கான பகுதி, ஏழைகள் நிறைந்த பகுதி என்று பல தடவை சொல்லி இருக்கிறேன். சுற்றுப் பயணம் செய்யும்போது அமைச்சர்களும் இப்பகுதியின் பிற்போக்கை உணர்கிறார்கள். ஆனால் எதுவும் செய்வதில்லை. நேற்றுகூட ஸ்ரீ வேதரத்தினம் அவர் கள் பேசும்போது தஞ்சை ஜில்லாவில் மின்சாரம் வினியோகிப்பது பெரிதும் குறைவென்று சொன்னார்கள். ஆனால் அதைவிட எங்கள் பகுதியில்தான், அரந்தாங்கி பகுதியில்தான் மிகவும் குறைவு. இது காடாரம்பப் பகுதி. நான் முன்பு சொன்னதுபோல் 1941-ம் ஆண்டில் அரந்தாங்கி நகரப் பகுதிக்கு மாத்திரம் மின்சாரம் கொடுக்கப்பட்டு மற்ற பகுதிகளுக்கு மின்சாரம் கொடுக்கப்பட வில்லை. சர்க்கார் இதில் கவனம் செலுத்தி அப்பகுதி மக்களுக்கு குறிப்பாக வட பகுதிகளில் வாழும் விவசாயத்தையே நம்பி வாழும் மக்களுக்கு உடனடியாக மின்சாரத்தை வழங்கவேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கடலில் தண்ணீர் சென்று விழுவதுபோல, சதாகாலமும் தண்ணீர் வசதி பெற்றுள்ள நிலப் பகுதிகளுக்கே மின்சாரம் அளிக்கப்படுகின்றதே தவிர, பிற்போக்

19th August 1961] [Sri S. Ramasami Thevar]

கான தண்ணீர் வசதி இல்லாத பகுதி மக்களுக்கு இம்மாதிரி செய்யவில்லை என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அரந்தாங்கி போன்ற பிற்போக்கான பகுதிகளில் வாழும் விவசாய மக்களுக்கு மின்சாரத்தை வழங்கி அவர்களின் வாழ்க்கை வளம்பெற மின்சாரத்தை சீக்கிரமாக விஸ்தரிப்பதற்கு இந்த இலாக்காவும், இந்த இலாக்காவிற்கு சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்ளுகிறேன்.

*SRI T. KARIA GOUNDER: கனம் தலைவி அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் மின்சார திட்டத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்திலும், இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்திலும் மின்சாரம் எவ்வளவு தூரம் தமிழ் நாட்டிலே வளர்ந்திருக்கிறதென்பதை கனம் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கும் அறிக்கையிலே குறிப்பிட்டிருப்பதற்கு அவர்களுக்கு நன்றி செலுத்தாமல் இருக்கமுடியாது என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். காரணம் சேர்ந்தாற்போல் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்திலும் தமிழ்நாட்டில் மின்சாரம் இல்லாத கிராமமே இருக்காது என்பதை தெளிவாகக் குறிப்பிட்டிருப்பதை பாராட்டுகிறோம், போற்றுகிறோம். காரணம் என்னவென்றால் எங்கள் ஜில்லாவைப் பொறுத்தவரையில் பெரும்பாலும் மின்சாரம் இல்லாத கிராமமே கிடையாது. தமிழ்நாட்டில் மின்சாரம் அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுவும் முக்கியமாக வட ஆற்காடு மாவட்டம் பூராவும் பெற்றிருக்கிறது என்பதை யாரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது என்று குறிப்பிட விரும்புகிறேன். அதோடுகூட இந்த பாலார் பேசின் ரூல்ஸ் ஆங்கிலேயர் இருந்த காலத்தில் ஏற்படுத்தப்பட்டு பிறகு தளர்த்தப்பட்டது. சமீப காலத்தில் இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன்பு அதை சர்க்கார் கொஞ்சம் தளர்த்தியிருக்கிறார்கள். ஆனால் தளர்த்தியிருக்கிற இந்த நேரத்தில் மீண்டும் பொது மராமத்து இலாகாவைச் சேர்ந்தவர்கள், என்ஜினியர்கள் 2,000 அடி தூரத்திற்கு ஒரு கிணற்றுக்கு கிணறு சப்ளை கொடுக்கப்படாது என்று சமீபத்தில் சர்க்காருக்கு சிபார்சு செய்யப்பட்டதாக சென்ற வாரம் எங்கள் ஜில்லாவில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி கூட்டத்தில் பேசப்பட்டது. அது விஷயமாகக்கூட சர்க்காருக்கு ஒரு தீர்மானம் செய்து அனுப்பப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்நேரத்தில் அமைச்சர் அவர்களுக்கு நினைப்பூட்ட விரும்புகிறேன். எங்கள் ஜில்லாவில் மின்சாரப் பகுதி இல்லை என்ற குறை இல்லையென்று சொன்னாலும்கூட ஜவ்வாது, ஏலகிரி மலைவாசிகளுக்கு மின்சாரம் இலவசமாக கொடுக்குமாறு நான் அமைச்சர் அவர்களை பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். மூன்றாவது திட்டக் காலத்தில் நூறு கோடி செலவிடப் போகிற நமது சர்க்கார் மலைவாசிகளையும் மனதில் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மலைவாசிகளுக்கு பல நூற்றுக்கணக்கான வீடுகள், அங்கு பிள்ளைகளுக்கான ஒரு ஆரம்ப, உயர்நிலைப் பள்ளியும், இலவச

உணவு, இலவச உடை போன்ற உதவிகளைச் செய்து வருகிறார்கள். சமீபத்தில் நமது தமிழ்நாடு சர்க்காரின் எஸ்டிமேட் கமிட்டி மலைக்கு சென்றிருந்தபோது அந்த நேரத்தில் அவர்களுக்கு ரேடியோ எல்லாப் பகுதிகளுக்கும் சப்ளை செய்யப்பட்டது. அப்படிக் கொடுத்த நேரத்தில் அங்குள்ள மலைவாசிகள், மின்சாரம் இருந்தால்தானே இவைகளை சரியாக இயக்க முடியும் என்று அவர்கள் தெரிவித்ததை நினைவில் வைத்துக்கொண்டு மலைவாசிகள் இருக்கும் இடங்களுக்கும் நன்கு மின்சாரத்தை பரப்ப மூன்றாவது திட்ட காலத்தில் தகுந்த முயற்சி எடுத்துக் கொள்ளுமாறு நான் அமைச்சர் அவர்களை வேண்டிக் கொள்கிறேன். ஏலகிரி மலை ஏறக் குறைய 4,000 அடி உயரத்தில் இருந்தபோதிலும்கூட அங்கு விவசாயிகள் செய்யக்கூடிய விவசாயிகளுக்கு, மலைமேலே தண்ணீர் அதிகமாக கிடைக்கிறது. அங்கு அவர்கள் விவசாயம் செய்ய வசதியாக மின்சாரம் தரப்படுமேயானால் உற்பத்தியைப் பெருக்குவதில் அவர்கள் தலைசிறந்து விளங்குவார்கள் என்பதில் சந்தேகமில்லை. அமைச்சர் அவர்கள் தந்திருக்கிற அறிக்கையில் நம் தேசத்தில் நாம் மூன்றாவது, நாலாவது இடத்தில் இருக்கிறோம் என்று சொல்லியிருப்பதில், நாம் அதில் முதல் அணியில் வந்து சேர வேண்டுமென்றால் அணு மின்சார நிலையத்தை நாம் உடனடியாக ஆரம்பிக்க முயற்சி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அணு மின்சார நிலையத்தை ஆரம்பிக்க வேண்டுமென்றால் 47 கோடி ரூபாய் செலவாகும் என்று அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்கள். நீலகிரியில் கூட்டம் நடந்தபோது, மூன்றாவது திட்ட காலத்தில் 100 கோடி செலவு செய்கிறபோது 47 கோடி ரூபாய் என்பது ஒரு பொருட்டாகாது. நூறு கோடியோடு 47 கோடியையும் சேர்த்து இந்த அணு மின்சார நிலையத்தை ஆரம்பித்து விடுவார்களேயானால் மின்சார வெட்டு அல்லது மின்சார பற்றாக்குறை என்பதெல்லாம் தீர்ந்து விடுமென்று நான் இங்கு அறுவுறுத்த விரும்புகிறேன். அணு சக்தி மின்சார நிலையம் மூலம் பல லட்சக் கணக்கான கிலோவாட்ஸ் உற்பத்தி செய்யக்கூடிய நேரத்தில் நமது மின்சார பற்றாக்குறையே தீர்ந்துவிடும் என்பதினால் மூன்றாவது திட்டகாலத்திலேயே அமைச்சர் அவர்கள் இந்த நிலையத்தை ஆரம்பிப்பார்களேயானால் இந்த நாடு அவர்களுக்கு நன்றி செலுத்த கடமைப் பட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மாரமத்து இலாகா அமைச்சர் அவர்கள் இப்போது சபையில் இருக்கிறார்கள். பாலாறு பேசின் ரூல்ஸ் படி இருப்பதைத் தளர்த்தியிருக்கும் இந்த நேரத்தில் மீண்டும் 2,000 அடிக்கு ஒரு கிணற்றுக்குத்தான் மின்சாரம் சப்ளை கொடுக்கவேண்டுமென்று அந்த இலாகாவினர் சர்க்காருக்கு சிபார்சு செய்திருப்பதை நீக்கி அதை ரத்து செய்யவேண்டுமென்று அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்வதோடு இந்தத் திட்டத்தை நான் மனப்பூர்வமாக ஆதரித்து மின்சார அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **Sri M. P. SUBRAMANIAM** : சட்டமன்றத் தலைவி அவர்களே, மின்சார இலாகா அமைச்சர் அவர்கள் நமக்கு அளித்துள்ள அறிக்கையில் தமிழ்நாட்டில் மின்சார உற்பத்திப் பெருக்கம்

19th August 1961] [Sri M. P. Subramaniam]

1908-லிருந்து எவ்வளவு வேகமாக ஏற்பட்டிருக்கிறது என்பதை இங்கு விவரமாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதோடு வழக்கம் போல் தமிழ்நாடு கிராமங்களுக்கு மின்சாரம் கொடுப்பதில் தலைமை ஸ்தானம் வகிக்கிறது, மொத்த உற்பத்தியிலும் மூன்றாவது ஸ்தானம் வகிக்கிறது என்பதையும் ஒவ்வொரு ஆண்டும் சொல்வதைப் போலவே இந்த ஆண்டும் சொல்லியிருக்கிறார்கள். உண்மையில் இந்த அளவிற்கு மின்சாரம் பெருகியிருப்பதில் நமக்கு எல்லோருக்கும் மகிழ்ச்சிதான். ஆனால் அமைச்சர் அவர்கள் அறிக்கையில் சொல்லியிருப்பதுபோல் மற்ற முற்போக்கு நாடுகளோடு நான் ஒப்பிட்டுப் பார்த்தால் மலைக்கும் மடுவிற்கும் உள்ள வித்தியாசம் இருக்கிறது என்பதை நாம் உணரவேண்டும். அமைச்சர் அவர்கள் இங்கு குறிப்பிட்டிருப்பது போல் சராசரி ஒரு தனி நபர் 60 யூனிட் தான் இங்கு பயன்படுத்துகிறோம். ஆனால் முற்போக்கு நாடுகள் என்று கூறப்படுகிற நாடுகளில் 4,000 யூனிட்கள் வரை பயன்படுத்துகிறார்கள் என்று சொல்லும்போது நாம் இன்னும் அடைய வேண்டிய நிலை எவ்வளவு தூரம் இருக்கிறது என்பதை நாம் உணரவேண்டும். அது மட்டுமல்ல. இந்த அளவிற்கு தமிழ்நாடு முற்போக்கு நிலையில் இருப்பதற்கு இந்த அரசாங்கத்தின் கொள்கை அல்லது இந்தத் துறையில் வேலை பார்க்கும் அலுவலர்களின் திறமை மட்டும் காரணம் என்று நான் நிச்சயமாக சொல்லமாட்டேன். ஏனெனில் தென் பிராந்தியங்களை நாம் எடுத்துக்கொண்டால் 1947-க்கு முன்பாகவே மின் துறையில் சிறந்ததொரு அஸ்திவாரம் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் போடப்பட்டிருந்ததுதான் இத்தகைய வளர்ச்சிக்கு அடிப்படையாக இருந்தது என்பதை நாம் நிச்சயமாக ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். அதோடு மட்டுமல்ல. கிராமங்களுக்கு மின்சாரம் கொடுப்பதினால் நமது வாழ்க்கைத் தரம் உயர்ந்து விடும் என்று சொல்வதற்கில்லை. இங்கு உற்பத்தியாகும் மின்சாரத்தில் கால் பங்கு தான் கிராமங்களுக்கு கொடுக்கப்படுகிறது. அப்படி ஒவ்வொரு கிராமத்திற்கும் கொடுப்பதற்கு இன்னும் சற்று அதிகமாக ஒதுக்கினால், தமிழ்நாட்டிலுள்ள எல்லாக் கிராமங்களுக்கும் கொடுத்தோம் என்பதில் நாம் முதல் இடம் அடைய முடியும். ஆனால், அதனால் தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கு இந்த மின்சக்தி பயன்பட்டு விட்டதென்று நாம் தவறாக எண்ணக்கூடாது என்பதற்காகத்தான் இதை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதுபோல் மூன்றாவது திட்ட காலத்தில்கூட, அவர்கள் குறிப்பிட்டிருக்கிற நாலைந்து திட்டங்கள் நிறைவேறினாலும் மின்சார பற்றாக்குறை இருக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அவரது கணக்கு சரியாகயிருந்தாலும் தவறாகயிருந்தாலும் நமது உற்பத்தியைவிட தேவை வளர்ந்து வருகிறது என்பதை நாம் எல்லோரும் ஒப்புக் கொள்ளவேண்டும். மூன்றாவது திட்ட இறுதியில் நாம் உற்பத்தி செய்திருக்கிற மின்சாரம் போதுமா என்றால் நிச்சயமாக போதாது என்பதுதான் பல நிபுணர்கள் பல சந்தர்ப்பங்களில் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். இதை மனதில் வைத்துக்கொண்டு

வளர்ந்து வரும் மின்சாரத் தேவையை மனதில் வைத்துத்தான் அணு மின் நிலையத்தை இங்கு ஏற்படுத்தவேண்டுமென்று எல்லோரும் வலியுறுத்தினர்கள். அரசாங்கமும் வலியுறுத்தினர்கள் என்று இங்கு கூறினர்கள். மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நாம் அதை உறுதியாகப் பெறுவோம் என்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் ஊட்டப்பட்டது. அந்த நம்பிக்கையை இன்னும் ஊட்ட முயற்சித்துக் கொண்டிருக்கிருர்கள். ஆனல் அது நடைபெறும் என்ற நம்பிக்கை என் போன்ருேருககு கிஞ்சித்தும் இல்லே. தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் நாம் அடைந்திருக்கிற வளர்ச்சியையும், நமக்கு மின்சக்தி இன்னும் எவ்வளவு அதிகமாக தேவையாகயிருக்கிறது என்பதையும் திட்டக் குழுவும், மத்திய அரசும் உணர்ந்து இருக்குமானல் மூன்ருவது திட்டத்திலேயே இந்த அணு மின் நிலேயத்தை ஏற்படுத்துவதற்கு வழிவகை செய்தாக வேண்டும். இதில் அரசாங்கம் மிகக் கவனமாக இருக்கவேண்டுமென்று நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கிராமப்புறங்களில் விவசாயிகளுக்கு நீர் இறைப்பதற்கு மின்சாரம் கொடுப்பதில் இப்பொழுது இரண்டு வகையாகப் பிரித்திருக்கிருர்கள். ஒன்று பின் அடைந்த பகுதி என்றும், ஏனைய பகுதிகள் எல்லாம் முற்போக்கான பகுதி என்றும் பிரித்திருக்கிருர்கள். இதை, எந்த அடிப்படையில் பிரித்தார்களோ தெரியவில்லே. பல பகுதிகளேப் பார்க்கும்போது, பின்னடைந்த பகுதிகள் என்று கூறப்படும் பலயிடங்களில் ஏராளமாக நீர் இருக்கிறது, அங்குள்ள விவசாயிகள் பணம் கொடுக்கும் சக்தியுடையவர்களாகவும் இருக்கிருர்கள். முற்போக்கு பகுதி என்று கூறப்படும் பல பகுதிகளில், இயந்திரங்கள் வைத்து இறைக்க போதிய தண்ணீர் இல்லாதிருக்கும் நிலேயைப் பார்க்கும்போது தவருகத்தான் இந்த பாகுபாடு செய்யப்பட்டிருக்கிறது என்று நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். முற்போக்கு பகுதிகளில் ஒரு குதிரை ஓட்டத்திற்கு 45 ரூபாய் குறைந்தது என்றும், பின்னடைந்த பகுதிகளில் 35 ரூபாய் என்றும் இருப்பதினல் பலயிடங்களில் நியாயம் வழங்குவதாகயில்லே. ஆகவே, இதை ஆலோசித்துத் திருத்தியமைக்கவேண்டும். அல்லது, ஒரு கனம் அங்கத்தினர் சொன்னதுபோல் எல்லாப் பாகங்களுக்கும் குறைந்தது 35 ரூபாய் என்று குறிப்பிடவேண்டும். இதில் ஒன்றைமட்டும் நாம் புரிந்து கொள்ளவேண்டும். எந்த கிணற்றிலும் தண்ணீர் இருக்குமானல் அதை ஆண்டு முழுவதும் விவசாயிகள் பயன்படுத்திக்கொள்வார்கள். ஆகவே அவர்கள் 35 ரூபாய் அல்லது 50 ரூபாய்க்கு மேலும் மின் சக்தியை பயன்படுத்துவார்கள். ஆகவே இதில் ஒரு குறைந்த பட்ச கட்டணத்தை நிர்ணயித்து அதில் ஏற்படுகின்ற நஷ்டத்தை சர்க்காரே ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு முறையை அமைத்ததால் அது சிறந்ததாக இருக்கும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதற்கடுத்து, மின்சார போர்ட் நிறுவி நான்கு ' ஆண்டுகள் ஆகின்றன. ஆனல் இந்த மின்சார போர்ட் ஒரு தனி ஸ்தாபனமாக ஒரு சட்டத்தின்மூலம் இயற்றப்பட்டுவருகிறது. எல்.ஐ.ஸி.,

19th August 1961] [Sri M. P. Subramaniam]

நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன், இந்துஸ்தான் மெஷின் டூல்ஸ் போன்றவைகள் சர்க்கார் பணத்தைப் போட்டும் தனியாக நடை பெறும் ஒரு வியாபார ஸ்தாபனம் என்றே சொல்லலாம். அத் தகைய ஸ்தாபனங்களைப்போன்று இந்த போர்ட் இதுவரையில் ஒரு கமர்ஷியல் பாலன்ஸ் ஷீட் கொடுத்திருப்பதாக தெரியவில்லை. அரசாங்கத்தினுடைய மூலதனத்தைப் போட்டு நான்கு ஆண்டுக ளாக நடந்துவரும் இந்த போர்டின் லாப நஷ்டம் என்ன என்பதை தெரிவித்திருக்கவேண்டும். இதுவரை தெரிவிக்காததின் காரணம் என்ன என்பதை நம்மால் புரிந்துகொள்ளமுடியவில்லை. இந்த அரசாங்கமாயிருந்தாலும் சரி, மத்திய அரசாங்கமாயிருந்தாலும் சரி அரசாங்கத்தினுடைய பணத்தைப் போட்டு நடந்துவரும் ஸ்தாபனங்கள் எல்லாம் கமர்ஷியல் பாலன்ஸ் ஷீட் கொடுத்திருக் கின்றன. லாபம் அதிகமாக இருந்தால் அதில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுத்துக்கொண்டு வருவதும் நாம் உணராதது அல்ல. அத்தகைய முறையை ஏன் இந்த போர்ட் கைக்கொள்ளவில்லை என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. அதை அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, இந்த மின்சார போர்டில் வேலை செய் கின்ற ஊழியர்கள் 1957-ல் இந்த போர்ட் அமைக்கப்பட்ட காலத் தில் நீங்கள் அரசாங்க ஊழியர்களாகவே இருக்கிறீர்களா அல்லது மின்சார போர்டின் புதிய முறையில் ஊழியர்களாக இருக்கப்போகி றீர்களா என்பதற்கு விருப்பம் தெரிவிக்கும் நேரத்தில் 1957-ல் அரசாங்க ஊழியர்கள் அனுபவித்து வந்த சலுகைகள் எல்லாம் கொடுக்கப்படும் என்று அரசாங்கம் உத்தரவாதம் கொடுத்தது. இவ்விதம் உறுதிமொழி தரப்பட்டதின் காரணமாக இதிலுள்ள ஊழியர்கள் மின்சார போர்ட் ஊழியர்களாக அறிவித்துக் கொண்டார்கள். ஆனால் இப்போது பல சலுகைகள் மறுக்கப்பட்டு வருகின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உதாரணமாக சொல்ல வேண்டுமானால், முன்னாலிருந்து கொடுக்கப் பட்டுவருகிற மருத்துவ சலுகை இப்போது கொடுக்க மறுக்கப் படுகிறது. இதிலுள்ள பணத்தை அரசாங்கம் ஈடுகட்டிக்கொண் டிருக்கிறது. ஆனால் இப்போது மின்சார போர்டில் இது மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது. இதில் வேலை செய்கின்ற ஊழியர்கள் தாங்களாகவே கையிலிருந்து பணத்தை கொடுத்து செலவு செய்து விட்டு பின்னால் வாங்கிக் கொள்ளவேண்டும் என்று சொல்லப் பட்டிருக்கிறது. என்.ஜி.ஓ.-க்களைப் பொறுத்தவரையில், அதிலும் குறைந்த சம்பளம் வாங்குகின்ற ஊழியர்களுக்கு இது எவ்வளவு பாதகமாக இருக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நான் சொல்ல விரும்புவது, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் அரசாங்க சிப்பந்திகளுக்கு சம்பள விகிதங் களை மாற்றி அமைக்கப்பட்டபொழுது மின்சார போர்ட் ஊழியர் களுக்கு அத்தகைய ஒரு ஏற்பாடு செய்யப்படவில்லை. திடீரென்று

[Sri M. P. Subramaniam] [19th August 1961

ஒன்றரை ஆண்டு காலத்திற்கு முன்னால் மின்சார போர்டு தாங்களாகவே முன் வந்து சில சம்பள விகிதங்களை அறிவித்தார்கள். ஆனால் அறிவித்த அந்தச் சம்பள விகிதங்கள் இதுவரையில் அமலாக்கப்படவில்லை. இதற்கு என்ன காரணம் என்பது நமக்குத் தெரியவில்லை. இதில் பல சிக்கல்கள் இருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருப்பதானது விஷயத்தைத் தெளிவு படுத்தவில்லை. இதில் ஒரு சாரார் ஒரு குறிப்பிட்ட பிரச்னைமீது உயர்நீதி மன்றத்தில் வழக்கு இருக்கின்றது, அது முடிவு பெருமல் இருப்பதின் காரணமாக இவைகளை அமலுக்கு கொண்டுவர முடியவில்லை என்று சொல்லுவது பெரும்பாலான அளவுக்கு இருக்கும் தொழிலாளர்களுக்கு நியாயம் செய்வதாகாது. இதை நீக்குவதற்கு சட்டபூர்வமாக வேறு வழியில் ஈடுபட்டு இருப்பதாகவே நான் நினைக்கவில்லை. ஆகவே இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் தெளிவான பதில் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதிலும் பெரும்பாலான தொழிலாளர்கள் திட்டத்தை ஒப்புக்கொள்கிறோம் என்று ஒப்புதல் தந்தும்கூட இதுவரை ஏன் அமுலாக்கப்படாமல் இருக்கிறது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

THE HON. SRI R. VENKATARAMAN : அவ்விதமாக கேட்கின்ற தொழிலாளர்களுக்கு பின்னால் சட்டத்தின்மூலம் நீதி மன்றத்தால் வேறு விதமாக முடிவு வந்தால், வேண்டாம் என்று சட்டபூர்வமாக சொல்லுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

SRI M. P. SUBRAMANIAM : அதைத்தான் நான் அமைச்சர் அவர்களிடத்தில் கேட்கிறேன். அதற்கு வேறு எந்த விதத்தில் பரிகாரம் காண முடியும் என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள்தான் நடவடிக்கை எடுக்கவேண்டும். இதைப்பற்றி தொழிலாளர்கள் சொல்லுவார்களா என்பது கேட்பதானது இதற்கு பதில் சொல்லுவதாகாது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். தனியான தொழில் ஸ்தாபனங்களில் எல்லாம் சர்விஸ் ரூல்ஸ் இருக்கின்றன. ஆனால் இந்த மின்சார போர்டில் ஆரம்பத்தில் அரசாங்க சிப்பந்திகளின் ரூல்ஸ் பொருந்தும் என்று சொல்லப்பட்டது. பின்னால் லேபர் கமிஷனர் அரசாங்க சிப்பந்திகளின் ரூல்ஸ் இவர்களுக்குப் பொருந்தாது என்று கூறியிருக்கிறார். அதை ஹைக்கோர்ட்டும் ஆமோதித்திருக்கிறது. அதற்குப் பின்னால் ஏறக்குறைய இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு அதிகாரியை நியமித்து ரூல்ஸ்ஸை ஏற்படுத்தச் சொல்லியிருப்பதாகத் தெரிகிறது. ஆனால் இதுவரையிலும் ரூல்ஸ் ஏற்படுத்தப்படவில்லை. அந்த அதிகாரி என்ன செய்துகொண்டிருக்கிறார், அல்லது அதில் எவ்வளவு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் தெளிவாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, மின்சார போர்டுக்கு தலைவராக இருக்கக்கூடியவர்கள் அடிக்கடி மாறிவிடுகிறார்கள். இவ்விதம் தலைவராக இருக்கக்கூடியவர் முழுநேர ஆட்களாக இருந்தால்தான் காரியங்கள் ஒழுங்

19th August 1961] [Sri M. P. Subramaniam]

காக நடப்பதற்கு வசதியாக இருக்கும். சமீபத்தில் ஒருவரை நியமித்தார்கள். இப்போது அவர்கள் லீவில் போய்விட்டதாக கேள்விப்படுகிறேன். இதன் காரணமாக பல காரியங்கள் தடைபட்டுப் போகின்றன. முக்கியமாக இதில் வேலை செய்கின்ற ஊழியர்களுக்கு பலவிதமான இடையூறுகள் ஏற்படுகின்றன என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே இதில் தயவு தாட்சணியம் இல்லாமல், அரசாங்க அதிகாரி அல்லாத ஒரு 'நான் அபிஷியல்' ஒருவரை போட்டால் நல்ல முறையில் இந்த போர்ட் இயங்க முடியும் என்பது என்னுடைய தனிப்பட்ட கருத்து. இதைப் பற்றியும் அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த முறையில் இயங்கினால் தான் நல்ல முறையில் பல்வேறு பிரச்னைகளை உடனுக்குடன் கவனித்து வேண்டிய நடவடிக்கை எடுக்க வசதியாக இருக்கும் என்பதை தெரிவித்துக் கொண்டு என் உரையை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

* **SRI R. KRISHNASAMI NAIDU :** *கனம் தலைவி அவர்களே, கனம் மின்சார அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள மின்சாரத்துறை வரவு செலவு அறிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நேற்றும் இன்றும் சபையில் இந்த விவாதத்தில் கலந்து கொண்டுள்ள அங்கத்தினர்கள் மின்சார போர்ட் இன்று தமிழ் நாட்டில் இயங்கி வருவதை பெருமையோடு பாராட்டி பேசிய விதத்திலிருந்து எவ்வாறு நம்முடைய தமிழ் நாடு மின்சார போர்ட் பணியாற்றிவருகிறது என்பதை நாம் எல்லோரும் தெரிந்து கொள்ள முடியும். இது மட்டுமல்ல, நம நாட்டினர் மட்டுமல்ல, வெளிநாட்டினரும் வெகுவாக போற்றிப் புகழ்ந்திருக்கிறார்கள். தமிழ் நாட்டில் மின்சார போர்ட் செய்து வருகின்ற சாதனைகளைப்பற்றி. கனம் அமைச்சர் அவர்களும் மின்சாரத்துறை இலாகாவிலுள்ள சீப் இன்சினியர் முதல் எல்லா பணியாட்களும் சிறந்த முறையில் பணியாற்றி வருகிறார்கள். அவர்களை நாம் எல்லோரும் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறோம். இதன் காரணமாக கிராமப்புறங்களிலே அவர்களுக்கு ஒரு புதிய விழிப்பு, முக்கியமாக விவசாயிகளுக்கு இந்த மின்சாரத் துறையின் மூலமாகக் கிடைத்திருக்கிறது என்று சொன்னால் அது மிகை யாகாது. ஏற்கனவே மின்சார விஸ்தரிப்பு உள்ள இடங்களில் விவசாயிகள் சம்பந்தப்பட்டமட்டில் இன்னும் பல பம்ப் செட்டுகள் அமைப்பதற்கு வேண்டிய அளவுக்கு மின்சாரத்தை பயன் படுத்திக்கொள்ளும் வகையில் மின்சார விஸ்தரிப்புத் திட்டங்கள் இல்லை. அவைகளை அவர்கள் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண் டிருக்கிறார்கள். பல இடங்களிலும் இந்த விஸ்தரிப்பு ஏற்பட்டு விட்டது. என்னுடைய ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியைப் பொறுத்த வரையில் இரண்டு, மூன்று கிராமங்கள் தவிர எல்லா இடங் களுக்கும் மின்சாரம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது என்பதை சந்தோஷத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். இரண்டொரு இடங் களுக்கு இல்லை, அதுவும் திட்டம் இப்போது பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. அடுத்த ஆண்டிலே எந்த ஒரு ரெவின்யூ கிராமத்திற்கும், ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகாவிலே, மின்சாரம்*

11 a.m.

[Sri R. Krishnasami Naidu] [19th August 1961

பரவாமல் இருக்காது. மின்சாரம் பரவாத கிராமமே கிடையாது என்று சொல்லிக்கொள்ள முடியும். கடந்த பத்து ஆண்டு காலத்திற்குள் துரிதமாக மின்சார விஸ்தரிப்புத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. கிராமப் புறங்களில் இதற்கு முன்பு மின்சாரம் பரவியுள்ள கிராமங்களில், திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்ட போது அதிலே சேர்ந்துள்ள கிணறுகளைத் தவிர, இன்னும் வேறு கிணறுகளில் பம்ப்செட்டுகள் அமைக்க விவசாயிகள் தயாராக இருந்துகொண்டிருக்கிறார்கள். அந்த வேலைகளையும், புதிய வேலைகளையும் எடுத்துக்கொள்வதில் நாம் எவ்வளவு துரிதமாக இருந்து வேலைகளைச் செய்கிறோமோ அதேபோல, ஏற்கனவே விஸ்தரிக்கப்பட்டுள்ள கிராமங்களிலும்கூட, அந்த நேரத்தில் பம்ப்செட்டுகளை அமைத்துக்கொள்ள வசதி இல்லாதிருந்த விவசாயிகள் இப்போது அவர்களுக்கு அந்த வசதி நேர்ந்துள்ள சமயத்தில் அவர்களுடைய கிணறுகளுக்கும் மேலும் பம்ப்செட்டுகளை அமைக்கவேண்டுமென்று, அதற்கு துரிதமாக காரியங்களைச் செய்யவேண்டுமென்று அவர்கள் ஆவலோடு இருந்துகொண்டிருக்கிறார்கள். அந்த வேலைகளும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டுதான் வருகிறது. இருந்தாலும் இன்னும் துரிதமாக மின்சாரம் பரவியுள்ள இடங்களில் புதிய பம்ப்செட்டுகள் அமைக்கும் வேலைகளைச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

நம் தமிழ்நாடு சம்பந்தப்பட்டவரையில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலே இன்னும் அதிக அளவில் மின்சாரம் தேவையாக இருக்கிறது. நம்மால் எவ்வளவு சரிக்கட்ட முடியும் என்பதைப் பற்றியெல்லாம் அமைச்சர் சமர்ப்பித்துள்ள அறிக்கையிலிருந்து நாம் தெரிந்துகொள்கிறோம். இன்றைக்கு அனல் மின்சாரத் திட்டமும், அணு மின்சாரத் திட்டமும் தமிழ் நாட்டில் அமையவேண்டும் என்பதற்காக அரசாங்கம் அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டுவருவதைப்பற்றி நாம் சந்தோஷமடைகிறோம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எப்படியும் அணு மின்சாரத் திட்டம் வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்து முடித்துவிடுவார்கள் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது.

விவசாயத்திற்கு மின்சாரம் இப்போது கொடுக்கப்படும் வகையிலே, கிராமப்புறங்களில் திட்டமிட்டு மின்சாரம் கொடுத்துவரும் போது, ஸாங்ஷன் ஆகி மின்சாரத் தொடர்பு ஏற்படுத்தியதற்குப் பின்னர், அவர்களுக்கு மின்சாரம் கொடுக்க எல்லாம் தயாராக வைத்திருக்கும் நிலைமையிலேயும்கூட, சில மின்சார சாதனங்கள் கிடைக்காமல் மின்சாரத் தொடர்பு கொடுக்கச் சில வார காலங்கள் தாமதம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. மீட்டர் பெட்டிகளும், மீட்டர்களும் மிகவும் குறைவாகக் கிடைக்கும் காரணத்தினால் வீடுகளுக்கு மின்சாரம் கொடுப்பதில் தாமதம் ஏற்படுகிறது. கிணறுகளுக்கு பம்ப்செட் அமைப்பதில் வேலை முடிந்து காத்துக்கொண்டிருக்கும் நிலைமை ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. இந்த சாதனங்களை இன்னும் அதிகமாக உற்பத்தி செய்ய ஏற்பாடுகளைச்

19th August 1961] [Sri R. Krishnasami Naidu]

செய்து, தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் சில கருவிகள் கிடைக்காத காரணத்தினால் பல நாட்கள், பல வாரங்கள காத்திராமல் பார்த்துக்கொள்வது மிகவும் அவசியம். மின்சாரத் தொடர்பு கிடைக்கும் என்று எதிர்பார்த்து விவசாயிகள் வேலையைச் செய்து முடித்துவிட்டு, சில கருவிகள் இல்லாத காரணத்தினால் தொடர்பு கொடுக்க முடியாத நிலைமை ஏற்படும் போது, விவசாயிகளும் சரி, மின்சார இலாகா பணியாளர்களும் சரி, மிகவும் தயக்கம் அடைகிறார்கள். வேலையெல்லாம் முடிந்தும் இந்தச் சிறு சாதனம் கிடைக்கவில்லையே என்று விவசாயி முதல் மின்சார இலாகா அதிகாரிகளும்கூட வருத்தம் அடைகிறார்கள். இந்தக் கருவிகளெல்லாம் போதிய அளவில் காலாகாலத்தில் கிடைக்க வசதி செய்வது அவசியம்.

மின்சாரத் தொடர்பைப் பெற்றுக்கொண்டிருக்கிற விவசாயிகளும் கிராமப் புறங்களில் வசிப்பவர்களும் மின்சாரக் கட்டணத்தைச் செலுத்துவதற்காகச் சென்றுவரும் சந்தர்ப்பங்களில் சில கஷ்டங்கள் ஏற்படுகின்றன. கட்டணம் செலுத்துவதிலே, சமீபத்திலே உள்ள இடங்களிலும்கூட செலுத்துவதற்கு வேண்டிய ஒரு உசிதமான திட்டத்தை வகுத்து ஏற்பாடு செய்யவேண்டியது மிகவும் அவசியம் என்று கருதுகிறேன்.

முக்கியமாக மின்சாரத்தை வினியோகம் செய்யும் ஒவ்வொரு இடத்திலும் லைன்மேன் என்று வேலை செய்யக் கூடியவர்களுக்கு, ஒரு கிராமத்தில் அவர் பணிபுரியும் பகுதியில் குடியிருக்க மின்சார போர்டிலிருந்தே வீடு கட்டித் தருவது கூட மிகவும் அவசியம் என்று கருதுகிறேன். சமுதாய நலத் திட்டத்திலே கிராம சேவக்குகளுக்கு வீடு கட்டிக் கொடுக்க திட்டம் இருக்கிறதே, அதே போன்று கிராமப்புறங்களில் மின்சாரம் வழங்க நியமிக்கப்பட்டிருக்கிற லைன்மென்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தால் இப்போது இருக்கும் பல புகார்கள் நிவர்த்தியாகி விடும். மழை காலத்திலும், காற்று, வெய்யில் போன்றவைகளினாலும் பல சங்கடங்கள் இருக்கும்போது, குறித்த காலத்தில் மின்சாரம் வேண்டுமென்று விவசாயிகள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்போது பல வித அசந்தர்ப்பங்களினால் குறித்த காலத்தில் சென்று மின்சாரத் தொடர்பை ஏற்படுத்திக் கொடுப்பதிலே மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்று நான் அறிகிறேன். இந்தத் திட்டத்தை சீக்கிரமாக நிறைவேற்றிக் கொடுப்பது, மின்சார போர்டுக்கு பெருமை தருவதாக இருக்கும். இதனால் விவசாயிகள் பெருமளவுக்கு சௌகரியங்களை அடைவார்கள் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மின்சாரம் கொடுக்கக் கூடிய ஒவ்வொரு சூபர்வைஸர் பகுதியிலும் மின்சாரத்தை உபயோகிப்பவர்கள், மின்சார இலாகா சிப்பந்திகள் எல்லோரையும் ஒரே இடத்தில் கூட்டி வருஷத்திற்கு ஒரு தடவையோ அல்லது இரண்டு தடவையோ அரசாங்கம் எப்படி திட்டமிட்டு வேலை செய்கிறது, பணி புரிகின்றவர்கள் எப்படி பணி புரிய வேண்டும், மின்சாரத்தைப் பெற்றுக்

கொள்ளுகின்றவர்களின் கடமை என்ன என்பதைப் பற்றி பிரசார முறையிலே கூட சொல்வது அவசியம் என்று கருதுகிறேன். விஷயங்களைப் புரிந்து கொள்ளாமலும், தெரிந்துகொள்ளாமலும் கூட முக்கியமாக கிராமப் புறங்களில் மக்கள் ஆத்திரம் அடையக் கூடும். மக்கள் நல்ல முறையில் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் பிரசாரம் அவசியம். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் ஒரே ஒரு விஷயத்தைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். மின்சார இலாகாவிலும் லஞ்சம் புகுந்திருக்கிறது. லஞ்சம் வாங்குகிறார்கள் என்று சொல்லப்பட்டது. கீழ்த் தட்டில் அத்தகைய பேச்சுக்கள் பல இடங்களில் பரவலாக இருந்து கொண்டிருக்கிறது. உண்மை என்ன என்று நாம் ஆராயப் புகும் போது, சிப்பந்திகள் லஞ்சம் வாங்குகிறார்கள் என்று சிப்பந்தி களின் மீது புகார் சொல்லப்படும்போது, லஞ்சம் கொடுப்பதற்குப் பிரயத்தினம் செய்யக்கூடியவர்களிடத்திலேதான் நமக்கு கோபமும் ஆத்திரமும் வருகிறது. ஒரு இடத்திற்கு கல்மஷம் இல்லாத சிப்பந்திகள் வந்தாலும் கூட, மின்சாரத்தை சீக்கிரம் பெற வேண்டும் என்ற ஆத்திரத்தில் ஈடுபட்டு, ஆத்திரம் மிஞ்சிய அவர்களை வாங்கும்படியான நிலைமைக்கு சந்தர்ப்பங்களைத் தேடிக் கொண்டு இத்தகைய வேலைகளில் ஈடுபடுகிறார்கள் என்று தெரியும் போது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. மின்சாரம் தானாகவே கிடைக்கும்—ஏதோ சிறு சாதனம் இல்லாததால் கிடைக்காமல் காத்துக்கொண்டிருக்கலாம். ஏதாவது பக்கத்து வீட்டுக் காரருக்குக் கிடைத்திருக்கலாம். அவருக்குக் கிடைத்திருக்கிறது பார்த்தாயா என்று ஒருவர் இவரைத் தூண்டிவிடுகிறார். உடனே இவருக்கு ஆத்திரம் ஏற்படுகிறது. இன்னும் ஒன்றுமே கொடுக்காமலும் கூட கொடுத்துவிட்டதாக தப்புப் பிரசாரம் செய்கிறார் கள். இந்த மாதிரி புகார் ஒன்று என்னுடைய கவனத்திற்கு வந்தது. பதினான்கு மைல் தூரத்திலுள்ள அந்த கிராமத்திற்குச் சென்று மின்சாரம் வேண்டுமென்று மனுச் செய்துகொண்டிருந்த 23 பேர்களையும் கூட்டி கேட்டால் அப்போது லஞ்சம் ஒருவரும் கொடுக்கவில்லை என்ற உண்மையைத் தெரிந்துகொண்டேன். நான் இதைக் கேள்விப்பட்டவுடன் ஆத்திரப்பட்டு ஓடினேன் என்ன நடந்தது என்று விசாரிக்க. இருபத்தி மூன்று பேர்கள் மனுச் செய்துகொண்டிருந்ததில் 5 பேர்களுக்கு மின்சாரத் தொடர்பு கொடுக்கப்பட்டிருந்தது. வரிசைக்கிரமமாக ஐந்து பேர்களுக்குக் கொடுத்திருந்தார்கள். பாக்கி 18 பேர்களுக்குக் கிடைக்கவில்லை. ஐந்து பேர்களுக்கு மட்டும் கிடைத்திருந்தது என்ற காரணத்திற் காக அவர்கள் பணம் கொடுத்து விட்டார்கள் என்று பிரசாரம் செய்திருக்கிறார்கள். எல்லாரையும் கூப்பிட்டுக் கேட்டேன். ஒரு வரும் கொடுக்கவில்லை என்று கூறினார்கள். எது உண்மை என்று தெரிந்துகொள்ளாமல் ஏதாவது ஒருவர் வேண்டுமென்றே கிளப்பி விட்டுவிட்டால் இப்படியே பரவலாக பொறுப்பு இல்லாமல் பேசப் படுகிறது. பொது மக்கள் சாதாரணமாக நம்பி விடுகிறார்கள். முக்கியமாக கிராமங்களில் மின்சாரத்தை வினியோகிக்கும்

19th August 1961] [Sri R. Krishnasami Naidu]

சூபர்வைஸர் இருக்கும் இடத்தில் பிரசாரத்திற்காக ஒரு திட்டத்தைத் தயாரித்து, கூட்டம் நடத்த வேண்டுவது அவசியம் என்று நான் கருதுகிறேன். அதையும் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்4 எனது பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* **SRI K. ANBAZHAGAN :** சட்டமன்றத் தலைவி அவர்களே, இன்று நடைபெறுகின்ற இந்த மின்சார இலாகா நிர்வாகத்தைக் குறித்த பொது விவாதத்தில் சில கருத்துக்களைத் தெரிவிக்க ஒரு வாய்ப்பு கிடைத்தது குறித்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். உண்மையாகவே, மின்சாரத் துறை தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில் குறிப்பாக அதிக அளவு மின்சார உற்பத்தி செய்கிற முறையிலே வளர்ந்து வருகிறது என்று குறிப்பிட்டாலும், உற்பத்தியினுடைய பலன் முழுவதும் தமிழ் நாட்டினுடைய முழு வளர்ச்சிக்கும் பயன் படுகிறதா என்பது ஆராயப்படவேண்டிய விஷயமாகும் என்று நான் மனதாரக் கருதுகிறேன். ஏனென்றால், இன்றைய தினம் தமிழ்நாட்டிலே கிடைக்கும் மின்சார உற்பத்தியில் பெரும் பகுதி நீர்விசை மூலமாக ஏற்படுகின்ற காரணத்தினால், அப்படி உற்பத்தி செய்யப் படுகின்ற மின் விசையைப் பல இடங்களுக்கு, பல கோடிகளுக்கு எடுத்துச் செல்ல வேண்டி ஏற்படுகின்ற காரணத்தினால், அந்தவகையில் கொண்டு செல்வதில் (Transmission) ஏறத்தாழ 3 சத விகிதம் வீணாகிறது என்று நான் அறிகிறேன். நீண்ட தொலைவுக்குக் கொண்டுசெல்கின்ற காரணத்தினால், வழியிலேயே மின் விசையானது பாழாக்கப்படுகிறது என்று அரசாங்கத்தினுடைய ஒரு ஆராய்ச்சிக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படி அந்த மின்சார விசை வழியிலே செலவழிக்கப்படும் ஒரு நிலை இருக்கின்ற காரணத்தினால், அவற்றை ஈடு செய்யக்கூடிய வழி காண வேண்டும்.

மேலும் மழை பெய்யக்கூடிய பருவ காலத்தில் மட்டும்தான் மின்சாரத் தேவை நிறைவு செய்யப்பட்டு மற்றக் காலங்களில் வெட்டு ஏற்படுவதால், அந்தக் காலங்களில் உணவு உற்பத்தியும், மற்ற தொழில்களும் மிகவும் பாதிக்கப்படுகின்ற காரணத்தினால், அவற்றை ஈடு செய்வதற்கும் வழிவகையை அரசாங்கம் ஆராய்ந்து செய்தாக வேண்டும். வெட்டுக்கு ஈடு செய்ய வேண்டுமானால், நீர் விசை மூலமாக மின் உற்பத்தி செய்வதோடு மட்டுமல்லாமல், வேறு வழிகளிலேயும் உற்பத்தி செய்ய, அதற்கான திட்டமிட இந்த அரசாங்கம் தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டாகவேண்டும். அப்படிப்பட்ட முறையில் நெய்வேலி பழுப்பு நிலக்கரி மூலம் உற்பத்தியாகக்கூடிய மின் விசையைத் தவிர வேறு எந்தவிதமான முயற்சியும் இந்த அரசாங்கத்திற்கு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. உண்மையாகவே அப்படி நெய்வேலி பழுப்பு நிலக்கரி மூலம் கிடைக்கக்கூடிய அவ்வளவு மின்சார சக்தியும் தமிழ் நாட்டுப் பொதுமக்களுக்கு கிடைப்பதாகத் தெரியவில்லை. ஐந்தாண்டுத் திட்டங்களின்கீழ் தமிழ்நாட்டில் மின்சார அபிவிருத்தி என்று கொடுக்கப்பட்டுள்ள புத்தகத்தில் 10-வது

[Sri K. Anbazhagan] [19th August 1961

பக்கத்தில் "இந்த அனல் மின்சார நிலையத்திலிருந்து நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் தேவைகளைப் பூர்த்தி செய்துகொண்ட பின்னர் தமிழ்நாடு மின்சார இணைப்புக்கு 2.16 லட்சம் கிலோ வாட் அளவு கிடைக்கும்" என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படிக் கணக்கிடப்பட்டாலும் மொத்தம் மூன்றுவது திட்ட இறுதியில் 13.47 லட்சம் கிலோவாட் மின்சார உற்பத்தித் திறனுள்ளதாகத்தான் தமிழ்நாடு இருக்கும். ஆனால் அதன் 16-வது பக்கத்தில், "நெய்வேலி விஸ்தரிப்புத் திட்டத்தின் மூலம் சென்னை மின்சார இணைப்புக்கு 67,000 கிலோவாட்தான் கிடைக்கும் என்று தெரிகிறது" என்று குறிப்பிடப்பட்டிருக் கிறது. அப்படியிருந்தும் தேவைப்படும் அளவைவிட உற்பத் தியில் குறைவு வரும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே இந்தக் குறையை நிவர்த்தி செய்துகொள்ள மூன்றுவது திட்ட காலத்தில் தமிழ்நாட்டில் அணு சக்தி மின்சாரம் நிலையம் ஒன்று ஏற்படுத்த வேண்டும். அதுபற்றி இந்திய அரசாங் கத்தை இந்த அரசாங்கம் வற்புறுத்திக்கொண்டு வருகிறது என்றும் அது கிடைக்காமற் போனால், தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளத் தனியார் துறையில் அனல் மின்சார நிலையங்கள் ஏற்படுத்தலாம் என்றும் தொழிலதிபர்கள் தெரிவித்துள்ள யோசனையை அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது என்று சொல்லப் படுகிறது. ஆனால் நெய்வேலி மின்சார உற்பத்தி எந்த முறையில் கணக்கிடப்பட்டு சொல்லப்பட்டிருக்கிறது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் விளக்குவார்கள் என்று எதிர் பார்க்கிறேன். இப்போதுள்ள நிலையில் நாம் நீடித்துக் கொண்டு போனால், மூன்றும் திட்ட இறுதியில் தொழில்கள் அபிவிருத்தி ஆகி அப்போதுள்ள தேவையில் நான்கில் ஒரு பங்கு நம்மால் சப்ளை செய்ய முடியாது போகும் என்பதை இந்த நேரத்திலே நான் நினைவூட்ட விரும்புகிறேன். அப்படி நெய்வேலி பழுப்பு நிலக்கரி யில் கிடைக்கின்ற மின்சாரத்தைக் கொண்டு நிலைமையைச் சமாளிக்க முடியுமென்றாலும், பருவ மழையில்லாத காலத்தில் ஏற்படுகின்ற வெட்டுக் குறைகளை எப்படிப் போக்க முடியும் என்பதை அமைச்சர் விளக்கவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

மற்றும் சில முறைகளில் மின்சார உற்பத்தி செய்வதற்கான வழிவகைகள் இருப்பதாக நான் அறிகிறேன். அதிலே ஒன்று, நகர்களில் பெரும் அளவில் சேருகின்ற கழிநீர்ப் பொருள்களி லிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியுமென்று சொல்லப் படுகிறது. இது மிகவும் சுலபமான முறை என்றும் கூறப் படுகிறது. இத்தகைய முறையில் உற்பத்தி செய்வதற்கு அதிகம் செலவாகாது என்றும், அப்படி இந்தக் கழிநீரிலிருந்து மின்சாரம் உற்பத்திச் செய்யும்போது, அதிலிருந்து வேறு சில துணைப் பொருள்களும் உற்பத்தி செய்ய முடியுமென்று சொல்லப்படுகிறது. இதைத் தவிர இந்த முறையில் மின்சாரம் உற்பத்தி செய்தால் இப்போதுள்ள கட்டணத்தைவிடக் குறைந்த அளவில் கட்டணம்

19th August 1961] [Sri K. Anbazhagan]

வசூலிக்க முடியுமென்றும் சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட ஒரு திட்டம்பற்றி சென்னை மாநகர ஆட்சி மன்றம் நகரத்தில் சேரும் கழிநீரிலிருந்து கொறுக்குப்பேட்டையில் ஒரு மின்சார உற்பத்தி நிலையத்தை ஆரம்பிக்கலாம் என்று யோசனையை அரசாங்கத்திற்குத் தெரிவித்துள்ளதாகத் தெரியவருகிறது. இந்த மின்சார உற்பத்தி நிலையத்தை நிறுவுவதற்கு 30 லட்சம் ரூபாய் ஆகலாம் என்று தெரிவித்திருப்பதாக அறிகிறேன். இதை நிறுவுவதற்கு 40 அல்லது 50 லட்சம் ரூபாய் செலவானாலும், இத் திட்டத்தை நிறைவேற்றி வைப்பது அவசியமென்று நான் கருதுகிறேன். காரணம், இத் திட்டத்தினால் தற்போதுள்ள கட்டணமான 12 புதுக் காசுகளுக்கு பதில் 2 புதுக் காசுகளுக்கு மின்சாரம் கொடுக்கக்கூடிய அளவிற்கு குறைந்த செலவுதான் ஏற்படுமென்று சொல்லப்படுகிறது. தவிர இத் திட்டத்தினால் சென்னை நகரத்தின் பெரும் பகுதிக்கு மின்சார வசதி செய்து கொடுக்க முடியுமென்று நிபுணர்கள் கருத்து அறிவித்திருக்கிறார்கள். இதை அவசியம் அரசாங்கத்தார் ஆராய்ச்சி செய்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி ஆராய்ச்சி செய்து இதைச் சென்னையில் நடைமுறைக்குக் கொண்டு வந்தால், அதன் பின்பு இத்திட்டத்தை மதுரை, திருச்சி, கோவை போன்ற முக்கிய நகரங்களுக்கும் விரிவுபடுத்துவதற்கு வசதியாக இருக்கும். அதோடு சில சமயம் நகரங்களைப் பொறுத்த அளவில் ஏற்படுகின்ற மின்சார வெட்டு, தட்டுப்பாடு ஆகியவைகளையும் பெருமளவு சமாளிப்பதற்கு வசதியாக இருக்கும். அதோடு ஒரு நிரந்தரமான முறையில் தொழில்கள் மிகுந்த நகரங்களிலே உள்ள மக்களுக்கு மின்சார வசதி அளிப்பதற்கும் உதவியாக இருக்குமென்று நம்புகிறேன். மேலும் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதாலே, அதிலிருந்து கிடைக்கக்கூடிய துணைப் பொருள்களில் ஒன்றான உரம், சிந்திரி உரத்திற்குச் சமமாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. அதையும் ஆராய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நான் குறிப்பிட விரும்புவது, அணு உலைக்கூடத்தைப் பற்றியதாகும். அணு உலைக்கூடமொன்று ஆரம்பிப்பதன் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியுமென்று 1957-58-ம் ஆண்டுகளில் இந்தச் சட்ட மன்றத்திலே திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்லப்பட்டது. அடுத்து 1958-லும், தமிழ்நாட்டிற்கு ஓர் அணு உலைக்கூடம் வேண்டுமென்ற கோரிக்கையை நமது அரசாங்கம் மத்திய சர்க்காரிடம் வற்புறுத்தி இருப்பதாகச் சொல்லப்பட்டது. மேலும் அதைப் பெற்றுவிட முடியும் என்றும் தெரிவித்தார்கள். அவ்வாறு 1958-ல் மத்திய சர்க்காரை வலியுறுத்திய அமைச்சர் அவர்கள், 1959-லே மீண்டும் அதை மத்திய சர்க்காருக்கு வலியுறுத்தத் தயங்கி, 1960-ல் அதை வலியுறுத்துவதற்கே மறந்தார்கள். 1961-ல் இப்போது கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையில், மீண்டும் மத்திய சர்க்காரை வலியுறுத்திக் கேட்டு வரப் போவதாக நினைவுப்படுத்தி இருக்கிறார்கள். அதற்கான முயற்சிகள் செய்யப்பட்டு வருவதாகக் கூறுகிறார்கள். இப்படிக் கடந்த

[Sri K. Anbazhagan] [19th August 1961]

காலங்களில் தெரிவிக்கப்பட்டு வந்தும், மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்திலே தமிழ் நாட்டிலே ஒரு அணு உலேக்கூடம் ஏற்படப் போகிறதா என்று பார்த்தால், அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை ஏற்றுக் கொண்டதாகவே தெரியவில்லே. இந்த மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே இந்த அணு உலேக்கூடம் வரவில்லே என்ருல், நம்முடைய அமைச்சர் அவர்கள் போகிற போக்கில் ஏறத்தாழ 1971-லாவது இந்த அணு உலேக்கூடம் தமிழ் நாட்டிலே ஏற்படும் என்று நிச்சயமாகச் சொல்லமுடியாத ஒரு நிலேதான் இருக்கிறது. இந்த நிலேயில் 1966-ல் நமக்குத் தேவைப்படுகின்ற மின்சார அளவில் 4-ல் மூன்று பங்காவது உற்பத்தி செய்ய முடியுமா என்பதே சந்தேகத்திற்குரியதாக இருக்கும். அப்படிப் பட்ட ஒரு சூழ்நிலே ஏற்படுமாளுல், இப்போது குழந்தைப் பருவத்திலுள்ள பல்வேறு தொழில்களும் அவற்றின் தொழில் வளர்ச்சியில் பெரிதும் பாதிக்கப்படும். அப்படிப்பட்ட ஒரு பற்ருக்குறை வர இருக்கும்போது, மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே ஒரு அணு உலேக்கூடம் ஏற்படுத்துவதற்கான ஒரு குறிப்பும் இல்லாதது வருந்தத்தக்கது. நம்முடைய நிர்வாகக் குறிப்பின்படியே மின்சாரப் பற்ருக்குறை ஏற்படப் போவதாக அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள அறிக்கையிலிருந்தும் தெரிந்து கொள்ளமுடிகிறது. இந்நிலேயில் மத்திய சர்க்கார் சமர்ப்பித்துள்ள அறிக்கையிலிருந்தும் மூன்ருவது திட்ட காலத்தில் ஒரு அணு உலேக்கூடம் ஏற்படுவதற்கான அறிகுறிகள் தென்படவில்லே. இப்படி ஐந்தாண்டுத் திட்டங்கள் கழிந்துக் கொண்டு வந்தால் இன்னும் 15 ஆண்டுகளுக்குள்ளாவது தமிழ் நாட்டில் ஒரு அணு உலேக்கூடம் ஏற்படுத்த முடியுமா என்ற கவலே எனக்கு ஏற்படுகிறது. ஒருவேளே என்னுடைய கவலே அமைச்சர் ராமையா அவர்களுக்கு அணு உலேக்கூடம் அமைப்பதில் வெற்றியை அளிக்குமாளுல் நான் மிகவும் மகிழ்ச்சி அடைவேன். இதில் வெற்றி தோல்விக்கே இடமில்லே. நாட்டினுடைய நிலேயைக் கணக்கிட்டு நாம் அதற்குத் தக்கபடி முயற்சிகள் செய்யவேண்டும். அந்த வகையில் இதற்குத் தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களேக் கேட்டுக் கொள்கிறேன்.

இதே நேரத்தில் மற்ருென்றையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்றையத் தினம் இந்த இலாகாவின் நிர்வாகத்தைப் பற்றி எடுத்துக்கொண்டால், பிற மாகாணங்கள் பாராட்டும்படியான அளவிற்கு இந்த இலாகாவினுடைய தலேமைப் பொறுப்பில் இருந்து பணியாற்றும் பிரதம எஞ்ஜினியர் அவர்களே நான் மனதாரப் பாராட்டுகிறேன். ஆளுல் அதே நேரத்தில் தொழிலாளர்களுடைய பிரச்னேகளேக் கவனிப்பதில் போதிய அக்கறை செலுத்தப்படவில்லே என்பதையும் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். காரணம் இந்த மின்சார இலாகா இவ்வளவு வளர்ச்சி அடைந்திருப்பதற்கு முக்கியமாகத் தொழிலாளர்கள்தான் காரணமாவார்கள். அவர்கள் அப்படி இந்த வேலேயில் ஈடுபடும்போது பலர் பலவித எதிர்

19th August 1961] [Sri K. Anbazhagan]

பாராத விபத்துக்களுக்கு ஆளாக நேரிடுகிறது. அவர்கள் எவ்வளவுதான் ஜாக்கிரதையாக வேலை செய்தாலும்கூட, அவர்களையும் மீறி எதிர்பாராமல் பல விபத்துக்களுக்கு உள்ளாக வேண்டியிருக்கிறது. அவ்வாறு துன்பப்படுகிறவர்களுக்குப் போதிய பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டியது நிர்வாகத்தின் முக்கிய கடமையாகும். அதற்கான வழிவகைகளை நாம் முதலில் காண வேண்டும். அதற்காக நாம் என்ன செய்ய வேண்டுமென்று எண்ணிப் பார்க்கவேண்டும். இந்த இலாகாவில் வேலை செய்யும் தொழிலாளர்கள் வேலை செய்யும்போது மின்சாரத் தாக்குதலால் இறக்க நேரிட்டால் அவர்களுக்கு தாராளமான உதவி செய்ய இழப்பு ஈடு அளிக்க முன்வரவேண்டும். அவர்கள் எவ்வளவுதான் கவனத்துடன் வேலை செய்தாலும்கூட, விபத்து அவர்களைத் தேடிக்கொண்டு வருகிறது. ஆகவே இவைகளையெல்லாம் மனதில் கொண்டு அமைச்சர் அவர்கள் இவைகளுக்கு என்ன வழியில் பரிகாரம் தேடலாம் என்பது பற்றி எண்ணிப் பார்க்கவேண்டும். அதேபோல் இந்த இலாகாவில் வேலை செய்யக்கூடியவர்களுக்கு ஏற்கனவே அறிவித்துள்ள "ரிவைஸ்ட் ஸ்கேல்"—புது விகித சம்பளங்களை—உடனடியாக கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இப்படி இவைகளை உடனடியாக செய்யாவிட்டால், அவர்கள் மனதிலே எப்படிப்பட்ட எண்ணங்கள் ஏற்படும் என்பதை அமைச்சர் அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். தொழிலாளர்களைப் பொறுத்தவரையிலே அடிக்கடி கூலி உயர்வு கேட்பார்கள், ஊதிய உயர்வு கேட்பார்கள் என்று பொதுவாகக் குறை சொல்லப்படுகிறது. அவர்களை யாரோ தூண்டிவிடுகிறார்கள், இல்லாவிட்டால் அவர்கள் கேட்கமாட்டார்கள், அவர்களுக்கு உலகம் தெரியாது என்று நம்பிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு அரசாங்க முடிவுப்படி ஊதியம் 'ரிவைஸ்டு ஸ்கேல்ஸ் ஆப் பே' அளிக்கிறோம் என்று சொல்லிவிட்டு, அரசாங்கம் மற்ற துறையிலே உள்ளவர்களுக்கு அளித்த பின்னாலும்கூட, மின்சார இலாகா ஊழியர்களுக்கு மட்டும் பின்னாலும்கூட, மின்சார உண்மையிலேயே கண்டனத்திற்கு உரியதாகும். அதை அளிக்க வேண்டும் என்று வற்புறுத்துகிற நேரத்தில், அமைச்சர் கூறுகிறார் உயர் நீதி மன்றத்தில் ஒரு வழக்கு இருக்கிறது, அவர்கள் தங்களையெல்லாம் ஒரு தொழில் நிறுவனத்தின் தொழிலாளர்கள் என்று கருதி, தொழிலாளர்க்கு அளிக்கப்படுகிற சலுகைகளையெல்லாம் அளிக்கவேண்டும் என்று கேட்டுள்ளார்கள், இந்த நிலையிலே அவர்களுக்கு அந்த ஊதிய உயர்வை எப்படி அளிக்க முடியும் என்று. இதே கேள்வியை சற்று முன்னர் அமைச்சர் வெங்கடராமன் அவர்கள் எழுப்பினார்கள். நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன், உண்மையாகவே ஊதிய உயர்வு உடனடியாக அளிக்கவேண்டும். எந்த முறைப்படி அளித்தாலும், கோர்ட்டினுடைய உத்தரவிற்கு இரு சாராரும் எப்பொழுதும் கட்டுப்பட்டே தீரவேண்டும். அதிலே மாறுபாடு இருக்க முடியாது. கோர்ட்டு உத்தரவு வருவதற்கு இடையிலே தர வேண்டிய சலுகைகளைத் தராமல் இருப்பது என்பது எந்த விதத்

திலும் முறையாகாது என்று உளமாறக் கருதுகிறேன். கோர்ட்டு உத்தரவினுல் உண்மையாக இந்த நிலையிலிருந்து மாற்றம் ஏற்படுமேயானுல், அந்த மாற்றத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ளு வார்கள். இடையிலே ஏற்கனவே சொன்ன வாக்குறுதிப்படி ஊதியத்தைத் தருவது அதற்கு எப்படித் தடையாகும், அல்லது அது கோர்ட்டு உத்தரவினுல் எப்படித் தடுக்கப்படும் என்று நான் அறியமுடியவில்லை. அப்படி இருக்குமானுல், அதற்கு மாருக இன்றையதினம் இருக்கிற நிலையிலே அளிக்கவேண்டிய ஊதிய உயர்வை அளிப்பதற்கு கோர்ட்டு அனுமதி கேட்டு உடனேயே அளிப்பதற்கு முயற்சிக்கவேண்டும் என்று வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மற்றென்று, இந்த இலாகாவிலே எளிய ஊதியத்தில் இருப்ப வர்கள் பல்வேறு சிறு குறைகளை தெரிவித்திருக்கிறர்கள். ஒரு அரசியல் கட்சியினுடைய தூண்டுதலின் பேரில்தான் சிறு குறை களை தொழிலாளர்கள் ஒழுங்குபடுத்தித் தெரிவிக்கவேண்டு மென்பது இல்லை. அவர்களுக்கு இயல்பாகவே தோன்றுகிற குறைகள் அவைகள். அந்தக் குறைகளைத் தீர்ப்பதற்கு, உண்மை யிலேயே தொழிலாளர்களுடைய நலத்தைக் கவனிப்பதற்கென்று மின்சார போர்டில் ஒரு தனி உறுப்பினர் இருந்தாகவேண்டும். பொறியியல் துறையிலே அதிக அக்கரை காட்டக்கூடியவர் அதிலே முக்கியமான இடத்திலே அமர்ந்திருக்கிறர். கணக்கிற் கென்று ஒரு தனி அதிகாரி உறுப்பினராக இருக்க முடிகிறது. அதைப்போல நிச்சயமாக தொழிலாளர்கள் நலத்தை கவனிப்ப தற்கென்றே ஒருவர் அந்த போர்டில் இருந்தாகவேண்டும். அப்படி யிருந்தால்தான் ஏறக்குறைய 40,000 பேர்களுக்கு அதிகமாக பணியாற்றக்கூடிய ஒரு நிறுவனம் சிறந்த முறையில் பணியாற்றி நாட்டிற்கும், மக்களுக்கும் நல்ல தொண்டாற்றமுடியும்.

கடைசியாக நான் குறிப்பிட விரும்புவது, ஒன்று இதனை அரசாங்கத்திற்கு ஈடான மற்றெரு நிறுவனமாகக் கருதினுல் அரசாங்க ஊழியர்களுக்கு உள்ள சலுகைகளை எல்லாம் தர வேண்டும். அப்படியில்லை என்று சொன்னுல் தொழிற்சாலையில் உள்ள ஊழியர்களுக்கு உள்ள எல்லா சலுகைகளையும் தர வேண்டும். தொழிற்சாலையாகவும் கருதாமல் அரசாங்க நிறுவனத் திற்கு ஒப்பாகவும் நடத்தாமல், இரண்டும் அற்ற சூழ் நிலையில் வைத்திருப்பது, உண்மையாகவே நிறுவனத்தின் லாபக் கணக்கை காட்டுவதற்குப் பயன்படுமே தவிர, அதனுல் தொழிலா ளர்கள் மகிழ்ச்சி அடைய முடியாது. நான் வேண்டிக்கேட்பது, இரண்டில் எந்த வகை என்று தீர்மானம் செய்வதற்கு முயற்சிக்க வேண்டும்.

முன்னர் ஒருமுறை நான் பேசும்பொழுது தெரிவித்திருக் கிறேன். இந்த இலாகாவை தனியாக ஒரு போர்டாக அமைப்பது வரவேற்கத்தக்கது என்று சொன்னுலும், அதில் பொது மக்க ளுடைய பிரதிநிதிகள் இடம் பெறவேண்டும் என்று கூறினேன்.

19th August 1961] [Sri K. Anbazhagan]

சட்டமன்ற உறுப்பினரோ அல்லது வேறு எந்த வகையிலோ பொது மக்களுடைய பிரதிநிதிகள், நியாயமான அளவு பிரதிநிதித்துவம்—இடம்—பெறக்கூடிய அளவிற்கு, விதி அமைக்க வேண்டும். அத்தனை பேரும் அரசாங்கத்திலே பணியாற்றுபவர்களாக இருப்பது அந்த போர்டுக்கு பெருமை அல்ல. அதிலும் 5-ல் 4 பேர் முழு நேர நிர்வாக உறுப்பினர்களாகக்கூட இல்லாமல், பகுதி நேர நிர்வாக உறுப்பினர்களாக இருப்பது என்பதும் சிறப்பு அல்ல. எனவே இவைகளைக் கவனித்து இந்த நிறுவனத்தைப் பொது மக்கள் பிரதிநிதித்துவம் உடையதாக ஆக்கவேண்டும் என்று நான் வேண்டிக்கொள்கிறேன். பொதுவாக அரசாங்கம் மாமியார் ஆகவும், அந்த போர்டு மருமகள் ஆகவும் இருக்கக்கூடும் என்று எதிர்பார்த்து, மாமியார், மருமகள் ஒற்றுமையாக இருக்கிற தன்மையிலே அங்கு இருக்கிற தொழிலாளர்களை ஏமாற்றவேண்டாம் என்று நான் ஏற்கனவே வேண்டிக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். வேண்டுமானால் மாமியார் யார், மருமகள் யார் என்று இடம் மாறியிருக்கலாம். ஆனால் தொழிலாளிகளை மாமியாரும், மருமகளும் ஏமாற்றுகிறார்கள் என்ற சூழ்நிலை இருக்கிறது. எனவேதான் அரசாங்கத்தையும், இந்த நிறுவனத்தையும் இன்று வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன், தயவு செய்து இந்த மனப்பான்மையை மாற்றி, தொழிலாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் நன்மை செய்து அதன் மூலம் மின்சார உற்பத்தியின் பலனை பொது மக்களுக்கும், நாட்டுக்கும் அளிக்கவேண்டும் என்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

* **SRI M. A. MUTHIAH CHETTIAR:** கனம் தலைவி அவர்களே, மின்சார இலாகா பட்ஜெட் பற்றி பேசும்பொழுது நான் பட்ஜெட்டைப்பற்றி விசேஷமாகப் பேசப்போவதில்லை. பொதுவாக மின்சார இலாகா செவ்வனே நடப்பது பற்றி பாராட்ட ஒரு சந்தர்ப்பம் என்று நான் பாராட்ட விரும்புகிறேன். பொதுவாக சென்னையிலே 30, 40 வருஷங்களாக மின்சார அபிவிருத்தி அதிகமாக ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது என்பது பற்றி நாம் பெருமைப்படவேண்டும். வெகு காலமாகவே நான் இந்த சட்ட மன்றத்தில் சொல்லிக்கொண்டிருக்கிறேன். ஹைட்ரோ எலக்டிரிக் ஸ்கீம் இருந்தபோதிலும், தெர்மல் ஸ்கீம்கள் எல்லாம் மிகவும் அவசியம். அதை அவசியம் உடனே ஏற்படுத்த வேண்டும். முன்னாலேயே கேட்டு வாங்கியிருந்தால் சல்லிசாக வாங்கியிருக்கலாம். இப்பொழுதுகூட நேரத்தை விடாமல் உலக பாங்கிலிருந்து கடன் வாங்கியாவது சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தெர்மல் ஸ்டேஷன் ஏற்படுத்துவதற்கும் அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். இதற்கான ஏற்பாடுகளை ஸ்டேட் எலக்டிரிஸிடி போர்டார் சீக்கிரம் செய்ய முற்படுவார்கள் என்று நம்புகிறேன். நம்முடைய பிரதம என்ஜினியர் அப்பாதுரை அவர்கள் மிகுந்த உற்சாகத்துடனும் ஊக்கத்துடனும் வேலை செய்கிறார். அவர்கள் உற்சாகத்தோடு இருக்கும்

காலத்திலேயே தெர்மல் ஸ்டேஷன் ஏற்படுத்துவது போன்று நடக்கவேண்டியவைகளையெல்லாம் நடத்திக்கொள்ளுவது மிகவும் நன்மையாக இருக்கும் என்று தோன்றுகிறது.

சமீபத்தில் வெள்ளம் வந்ததினால் மக்கள் சிரமப்பட்டதை எல்லாம் பார்த்திருக்கிறோம். வெகு காலமாக நாம் அணை கட்ட வேண்டுமென்று சொல்லும் போதெல்லாம் மைசூர் ராஜதானியில் ஆட்சேபனை சொல்லிவந்தார்கள். அதனால் அதை அப்போது விட்டுவிட்டார்கள். அந்தக் காலத்தில் சோழ ராஜா தஞ்சையில் வந்து 5 ஆறுகள் வெட்டாவிட்டால் நாடு வெகுவாக பாதிக்கப் பட்டிருக்கும். கண்ணம்பாடி, மேட்டூர் டாம்கள் இருப்பதால் தான் ஓரளவுக்கு நமக்கு சௌகரியமாக இருக்கிறது என்று சொல்லவேண்டும். தஞ்சையில் அறந்தாங்கி, பட்டுக்கோட்டை, திருச்சி, மதுரையில் சில போர்ஷன்கள், ராமனாதபுரம் ஆகிய இடங்களில் தண்ணீர் இல்லாமல் 4 வருஷம் பட்டினியாக இருக்கி றார்கள். காவேரியைப் பொறுத்த அளவில், 4 வருஷங்களில் ஒரு வருஷத்தில் அதிகமான வெள்ளம், ஒரு வருஷத்தில் தண்ணீர் தட்டுப்பாடு இப்படியெல்லாம் இருக்கிறது. 4 வருஷங்களில் ஒரு வருஷம் பட்டினியாக இருக்கத்தயார், மற்ற 3 வருஷங்களிலாவது தண்ணீர் வரவேண்டுமென்று சொல்லுகிறார்கள். மைசூரிலும், டெல்லியிலும் இப்பொழுது தான் இதைப்பற்றி உணர்கிறார்கள். முன்னால் உணரவில்லை. நமது அமைச்சர்கள் கனம் கக்கன், கனம் சிப் மினிஸ்டர், கனம் ராமையா இவர்களெல்லாம் எவ்வளவோ முயற்சித்திருக்கிறார்கள் இதைப்பற்றி. ஆனால் அப்பொழுதெல் லாம் சந்தர்ப்பம் சரியாக இல்லை. இப்பொழுது சமீபத்தில் வெள் ளம் வந்து மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏதாவது தீமை வந்த சமயத்தில் தான் ஒரு நன்மையும் வரும் என்று சொல்லு வார்கள். இப்பொழுது தான் டெல்லியில் இன்டகிரேடெட் ரிவர் ஸ்கீம் என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இப் பொழுது தான் டெல்லிக்குப் போய் சூட்டோடு சூடாக வற்புறுத்த வேண்டும். வாடர் பவர் கமிஷன் உடனே என்கொயரிக்கு வர வேண்டும். என்கொயரி ஒன்றிரண்டு வாரத்தில் முடிந்துவிட வேண்டும். ஒன்றிரண்டு மாதங்கள் ஆகிவிட்டால் பிறகு ஆறிப் போய்விடும். பார்லிமெண்டு மெம்பர்கள் இதைப்பற்றி பார்லி மெண்டில் பேசவேண்டும். தென் ராஜ்ய மெம்பர்கள் பார்லி மெண்டு ஆரம்பித்து 10 நாட்கள் ஆகியபோதிலும் வெள்ளத்தைப் பற்றியும் அணைகள் கட்டுவதைப்பற்றியும் இன்னும் பார்லிமெண் டில் பேசவே இல்லை. அவர்கள் இதைப்பற்றி அங்கே பேச வேண்டும், பேசுவார்கள் என்று நம்புகிறேன். இப்பொழுது இந்த இரண்டு மந்திரிகளும் உடனே டெல்லிக்குப் போகவேண்டும். மற்ற மந்திரிகள் இங்கே கவனித்துக்கொள்வார்கள். டெல்லிக்குப் போய் அங்கேயே டெண்டு போட்டுக்கொண்டு உட்கார்ந்து கொண்டு 5, 6 நாட்கள் இருந்து இதுபற்றி அவர்களிடம் வற் புறுத்தவேண்டும். (குறுக்கீடு). எலக்ஷனுக்குள் வந்தால் நல்லது தான். அதற்குள் 'அனௌன்ஸ்' செய்துவிட்டால்

19th August 1961] [Sri M. A. Muthiah Chettiar]

நல்லதுதான். வாடர் பவர் கமிஷன் என்கொயரி எல்லாம் 2 மாதங்களுக்குள் முடித்துவிடவேண்டும். மைசூர் கவர்ன்மென்டோடு பஞ்சாயத்து பேசி முடித்துவிடவேண்டும். நிச்சயமாக இரண்டு டாமகள் உடனே ஏறபடவேண்டும். மேட்டூருக்கு மேலேயோ கீழேயோ 2 டாம்கள் வரவேண்டும். திரு. ஸி. பி. ராமசுவாமி அய்யர் அவர்கள் கங்கை, காவேரி இன்டெக்ரேட் ஸ்கீமைப்பற்றி சொல்லியிருக்கிறார். கோதாவரித் தண்ணீரை கிருஷ்ணா, பெண்ணார் வழியாகக் கொண்டு வந்தால் வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கல்பட்டு, சேலம் 'அப்பர் ரீசஸ்' ஆகிய இடங்களுக்கு தண்ணீர் கிடைக்கும்; நான் இதுபற்றி முன்பே பேசியிருக்கிறேன். எல்லா அங்கத்தினர்களும் அதை ஆதரித்துப் பேசினார்கள். அதெல்லாம் பெரிய விஷயம்.—நான் சொன்னமாதிரி இரண்டு டாம்கள் கட்டுவது சாதாரண விஷயம். 10-ம், 10-ம் 20 கோடி ரூபாய் ஆகலாம். பணம் இல்லாவிட்டால் கூட லோன் வாங்கியாவது செய்ய வேண்டும். லோன் கேட்டால் கண்டிப்பாய் பணம் கிடைக்கும். இப்பொழுதுகூட அரசாங்கம் 10 கோடி ரூபாய்க்கு லோன் எழுப்பியிருக்கிறார்கள். அந்தத் தொகை பூராவும் கிடைத்துவிடும் என்பதில் சந்தேகம் இல்லை. சில தினங்களுக்கு முன்பு கூட இந்த லோனைப்பற்றி ஒரு கூட்டம் நடந்தது. அப்பொழுது கூட பைனான்ஸ் மினிஸ்டர் சொன்னார்கள். 190 கோடி ரூபாய் கடன் இருக்கிறது. 227 கோடி ரூபாய் அஸெட்ஸ் இருக்கிறது அசலை வைத்துப்பார்த்தாலே இப்பொழுது அதனால் உள்ள பலனைப் பொறுத்து பெருக்கிப் பார்த்தால் 1000 கோடி ரூபாய் அஸெட்ஸ் இருந்துகொண்டிருக்கிறது. எதைச் செய்தாலும் வருமானம் வரும் என்பதில் சந்தேகம் கிடையாது. மைசூரிலும் இப்பொழுது ஆட்சேபனை சொல்லமாட்டார்கள். இப்பொழுது தான் அங்கேயும் வெள்ளம் வந்து அதனால் பாதிக்கப்பட்டிருக்கிறது. பார்லிமெண்டு மெம்பர்களும் இதைப்பற்றி டெல்லியில் பேச வேண்டும். பேசினால் நல்லதாக இருக்கும். நான் சொன்னமாதிரி இரண்டு அணைகள் கட்டி அந்தப் பகுதிகளுக்கெல்லாம் வசதி செய்து கொடுக்கவேண்டும். அப்பொழுதுதான் சௌகரியமாக இருக்கும். முந்தியே சொன்னேன், ஈரோட்டுக்குப் பக்கத்திலே, அதற்குக் கீழே, ஜேடர்பாளையம் என்ற இடத்தில் ஒரு அணை கட்டலாம் என்று. (குறுக்கீடு) எங்கே கட்ட வேண்டும் என்பது பற்றி அதை நிபுணர்களுக்கு விட்டுவிடலாம். முக்கியமாக நான் சொன்ன இரண்டு அணைகளையும் உடனடியாகக் கட்டவில்லையென்றால், மிக்க கஷ்டமாகப் போய்விடும். இப்பொழுதே, வற்புறுத்தி, வாடர் பவர் கமிஷனிடம் சொல்லி, ஒரு மாதத்திற்குள்ளாக ஒரு தீர்மானம் எடுக்கச் செய்ய வேண்டும். நான் ஏன் இப்படி அணைகளைப்பற்றியே பேசுகிறேன் என்றால், அந்த இடங்களில் எலெக்ட்ரிஸிடியையும் உற்பத்தி செய்யலாம். அதை ஒரு ஹைட்ரோ-எலெக்ட்ரிக் ஸ்கீமாகச் செய்யலாம் என்றதினால் தான் சொல்கிறார்கள், 100 அடி இருந்தால் கூடப் போதும், எலெக்ட்ரிக் பவர் உண்டாக்கலாம் என்று. அப்படிப் பட்ட சிறு சிறு அணைகளில் கூட பவர் ஜெனரேட் செய்யலாம். வாடர் க்வாண்டிடி

அதிகமாக இருந்தால் போதும் என்று நிபுணர்கள் சொல்லுகிறார்கள். எவ்வளவோ காரியங்களைச் செவ்வனே நடத்தி வரும், நடத்துகின்ற எலெக்ட்ரிஸிடி போர்டாரை, இவைகளையெல்லாம் கூட நடத்த வேண்டும் என்று சொல்லி, அவர்கள் அந்த டிபார்ட்மென்டை செவ்வனே நடத்திவருவதற்காக அவர்களைப் பாராட்டுகிறேன். இத்துடன் என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

* **SRI A. GOVINDASAMY :** சட்ட மன்றத் தலைவியவர்களே, மின்சாரத்துறையிலே கனிசமான அளவு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பது பற்றி விளக்க வெகு சிரமப்பட்டு அமைச்சரவர்களும், மின்சார போர்ட் அதிகாரிகளும் தயாரித்துள்ள, நல்ல புள்ளி விவரங்களோடு கூடிய இந்த அறிக்கைக்காகப் பாராட்ட வேண்டியதுதான். அதில் நானும் பங்கு கொள்ளுகிறேன். ஆனால், இதிலே தொழிலாளிகளைப் பற்றி, அவர்களுடைய சேவையைப் பற்றி ஒரு வார்த்தை கூட சொல்லவில்லையே என்று உணமையிலேயே வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். எதறகாகவோ அவர்கள் பிரச்சினையைவிட்டு விடுகிறார்கள். அமைசசரவர்கள் பாராட்டினால் குறைவாகப் போகும் என்றோ என்னவோ . . . (குறுக்கீடு) படித்து விட்டுத்தான் சொல்லுகிறேன். இந்தத் தொழிலாளர்கள் நீண்ட காலமாக தற்காலியமாக உத்தியோகஸ்தர்களாக இருக்கிறார்கள். அதை மாற்றியமைக்க வேண்டும். இன்னும் வேறு பல குறைகளும் கவனிக்கவேண்டியிருககின்றன. அவைகளையும் போக்க வேண்டும்.

அமைசசரவாகளும், மின்சார போர்டாரும், முக்கியமாகச் சொல்லியிருப்பது, மின்சார விஸ்தரிப்பில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதல் இடம் வகிக்கிறது என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். இப்படிச் சொல்லி வடக்கு-தெற்கு என்று சொல்லுபவர்களுடைய வாயை அடைக்கலாம் என்று தானே என்னவோ, அவாகள, "இந்தியாவிலேயே" என்று பெருமைப் பட்டுக் கொள்கிறார்கள், அதை எடுத்துக் கூறியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். (குறுக்கீடு). அது சரி.

இன்றைக்கு விவசாயத்து துறைக்கு உபயோகிக்கப்படும் மின்சாரம் 19 சதவிகிதம் தான். பாக்கி 81 சதவிகிதம் மற்ற துறைகளுக்குக் கொடுக்கப்படுகிறது. 19 பர்சென்டுதான் விவசாயத் துறைக்கு என்பது நமக்கு பெருமை அளிக்கும் காரியம் இல்லை. ஒரு அறிக்கையில் தமிழ் நாட்டில் 20,000 கிராமங்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள்.

(Deputy Speaker in the Chair.)

பின்னால் மற்றொரு குறிப்பில் 18,000 கிராமங்கள் என்று சொன்னார்கள். இன்றைக்கு 19,900 கிராமங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அதையே ஊர்ஜிதமாக எடுத்துக் கொண்டு பார்த்தால், இன்றைக்கு 10,000 கிராமங்களுக்கு மின்சாரம் விஸ்தரிக்கப் பட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். நான் பார்த்ததைச் சொல்லுகிறேன், அனுபவத்தை ஒட்டிச் சொல்லுகிறேன், முன்பெல்லாம்

19th August 1961] [Sri A. Govindasamy]

கிராம மக்கள் விவசாயத்திற்கு மின்சாரம் உபயோகியுங்கள் என்று சொன்னால், "வேண்டாம்" என்று சொல்லுவார்கள். காரணம், அவர்கள் விவசாயத்திற்கு மின்சாரம் ஆபத்தாக இருக்கும் என்று கருதிவந்தார்கள். மேலும் அவர்களுக்கு அதற்கு வேண்டிய வசதிகளும் இல்லை. அவர்களுக்கு, சாதாரண விவசாயிக்கு, அதிகாரிகளை எப்படித் திருப்தி செய்வது என்று தெரியாமல், மின்சாரத்தை உபயோகப்படுத்த முடியாமல் போய் விட்டது. வசதியுள்ள சிலர் மட்டும் உபயோகித்துக் கொண்டார்கள். அப்படியே தான் இன்றைக்கும் கூட நடக்கிறது. அதிகாரிகள் கிராமங்களுக்கு வந்தால், அவர்கள் இன்ஜினியர்களானாலும் சரி மற்றவர்களானாலும் சரி, கிராமத்தில் பெரியதனக்காரர்கள் வீட்டில்தான் தங்குகிறார்கள். ஆகவே, ஒரு ஏக்கரா இரண்டு ஏக்கரா வைத்திருக்கும் ஏழைகள் பம்பு செட்டு வேண்டுபவர்களின் லிஸ்டில் சேர்க்கப் படமாட்டார்கள். ஏன் என்று அமைச்சரவர்களுக்கும் தெரியும். அவர்களுக்குக் கொடுப்பதனால், வாடகை கட்டிவராது என்று அப்படிப்பட்ட சிறுநிலக்காரர்களுக்குக் கொடுக்க மாட்டார்கள். ஆகவே, சாதாரண விவசாயிகளுக்குக் கிடைப்பதில்லை. இப்பொழுதும் அப்படிப் பட்ட பல குறைபாடுகள் இருக்கின்றன. எங்கள் மாவட்டத்தைப் பொருத்த வரையில், கம்பெனியிலிருந்து போர்டுக்கு வந்த பிறகும் ஒரு சில கிராமங்களுக்கு மின்சாரம் விஸ்தரிக்கப் படவில்லை. என்னுடைய தொகுதியில் புதுப்பாளையம் என்ற கிராமத்தில் ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் மனுசெய்திருந்தும் மின்சார வசதி தரப்பட்டதா என்றால் இல்லை. அங்கே போதுமான லோட் இருக்கிறது. ஆனாலும் வசதி கொடுக்க மறுக்கிறார்கள். ஆகவே அம்மாதிரி இருக்கும் கிராமங்களின் குறைகளைத் தீர்க்க வேண்டிய பொறுப்பு இந்த போர்டுக்கு இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். மின்சாரத் துறையைப் பொறுத்த வரையில் அதிலே கமர்ஷியல், கன்ஸ்ட்ரக்ஷன் என்றெல்லாம் இருக்கிறது. அமைச்சருக்கு மனு கொடுத்தால், அந்தப் பேப்பரை தேடிப் பிடிக்க ஒரு ஆண்டு ஆகிறது. அதனால் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஆதி திராவிட மக்கள் இருக்கும் ஒரு குறிப்பிட்ட சர்வே நம்பரில், கனெக்ஷன் கொடுக்கப் பட்டது. அங்கே கிணற்றில் போதுமான தண்ணீர் இல்லாததால் வேறு இடத்தில் மோட்டாரைப் போட அனுமதி வேண்டியிருந்தது. அங்கே ஒரு கம்பம் போட்டு கம்பியை இழுக்கலாம். அவ்வளவுதான். ஆனால், ஆதி திராவிட மக்களுக்காக என்னவெல்லாமோ செய்கிறோம் என்று சொல்லும் சர்க்காரால் அதைச் செய்ய முடியவில்லை. என்னுடைய தொகுதியில் பல கிராமங்களில், அரசமங்கலம், சேந்தனூர், சாம்பசிவரெட்டிப் பாளையம், குச்சிப்பாளையம் முதலிய கிராமங்களில் காலம் கடத்தப் படுகிறது. இன்னும் துரிதமாக நடவடிக்கை எடுக்கப் படவில்லை. அங்கே அவர்கள் பில்லைக் காட்டினால்தான் ப்ரையாரிடி கொடுப்போம் என்கிறார்கள். பில்லைக் காட்டினால் தான் முதல் இடம் கொடுக்கப்படும் என்கிறார்கள். அவர்களோ உத்தரவாதம்

[Sri A. Govindasamy] [19th August 1961

கொடுங்கள், நாங்கள் பணத்தைக் காட்டிப் பில்லைக் கொண்டு வருகிறோம் என்கிறார்கள். பல இடங்களில் இம்மாதிரியான சங்கடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த விஷயங்களிலெல்லாம் அரசாங்கம் தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்னொரு கஷ்டமும் இருக்கிறது. கிணற்றில் மோட்டார் வைக்கிறார்கள். நீர் மட்டம் குறைந்து போகிறது. அப்பொழுது ஒரு பத்தடி கீழே கொண்டுபோக வேண்டியிருக்கிறது. அல்லது நீர் மட்டம் உயர்ந்து விடுகிறது. அப்பொழுது மேலே கொண்டு வரவேண்டியிருக்கிறது. அம்மாதிரிச் செய்ய ஒவ்வொரு முறையும் கட்டணம்—ரூபாய் 10 என்று—கட்ட வேண்டியிருக்கிறது. இந்த விஷயத்திலும் தக்க சலுகை அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். இல்லா விட்டால் நெருக்கடியாகப் போய்விடுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். எங்கள் மாவட்டத்தில் கம்பெனி யாருடைய நிர்வாகத்திலே மின்சார வினியோகம் ஒப்படைக்கப் பட்ட காரணத்தால், ஏதோ வசதி உள்ள ஒரு சிலருக்கு நன்மை கிடைத்து வந்தது. நல்ல வேளையாக எங்கள் மாவட்டத்தில் உதவிக் கலெக்டராக இருந்தவர்தான் இப்பொழுது மின்சார போர்டின் செயலாளராக இருக்கிறார். எங்கள் மாவட்டத்தின் நிலைமை அவருக்கு நன்றாகத் தெரியும்.

விழுப்புரம் வட்டத்தில் கிழக்குப் பகுதியில் மட்டும் மின்சாரம் விஸ்தரிக்கப்பட்டு மேற்குப் பகுதி அறவே துண்டிக்கப்பட்டிருக் கிறது. அது பற்றி எந்தவிதமான நடவடிக்கையும் கிடையாது. ஆனால், அமைச்சர்கள் வருகிறபோது அங்குள்ள மக்கள் அமைச் சர்களுக்கு அளிக்கும் வரவேற்புப் பத்திரத்திலும், மனுக்களிலும், 'பெரிய ஜீவ நதிகள் இல்லாத காரணத்தால் கிணற்றுப் பாசனத்தை நம்பி வாழவேண்டியவர்களாக இருக்கிறோம், எங்கள் பகுதிக்கு மின்சார வசதி வழங்க வேண்டும்' என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்பொழுது, 'அவசியம் செய்து தருகின் றோம், தவறிப்போய் நீங்கள் மாற்றுக் கட்சிக்கு வோட்டுப் போட்டு விட்டீர்கள், இதெல்லாம் கவனிக்காமல் போயிருக்கிறது, இந்த ஒரு சமயம் எங்கள் பெட்டியில் வோட்டுப் போடுங்கள்' என்று அமைச்சர்கள் சொல்கிறார்கள். அதையடுத்து காங்கிரஸ் அங்கே ஜெயித்தது. ஜெயித்த பிறகாவது அங்கு வெளிச்சம் வந்ததா என்றால், அங்கு பழைய நிலையே இருந்துகொண்டிருக்கிறது. (கனம் ஸ்ரீ. வி. ராமையா: யார் சொன்னார்கள்?) முதல் மந்திரியே சொன்னார்கள். நான் இருக்கும்போதே, என்னை வைத்துக்கொண்டே சொன்னார்கள். எதற்காகச் சொல்கிறேன் என்றால் எதிர்க் கட்சி ஜெயித்துவிட்டது, அதனால் மின்சாரம் விஸ்தரிக்கப்படவில்லை என்று சாக்குப் போக்குச் சொல்வதை விட அதற்கு உண்மையான காரணங்களைச் சொல்ல வேண்டு மென்பதுதான் என்னுடைய தாழ்மையான வேண்டுகோள். கனம் திரு. கக்கன் அவர்களும், கனம் திரு. ராமையா அவர்களும் அங்கு அடிக்கடி வருகிறார்கள். அந்தப் பகுதியைச் சுற்றிப் பார்த் தால் எந்தக் கிராமத்திலாவது மின்சார விஸ்தரிப்பு இருக்கிறதா என்பதைத் தெரிந்துக்கொள்ள முடியும்.

19th August 1961]

THE HON. SRI P. KAKKAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, அமைச்சர்கள் அங்கு போகும்போது, 'அவர்களுக்கு வோட்டுப் போட்டு விட்டீர்கள், எங்களுக்கு வோட்டுப் போட்டால் மின்சாரம் கிடைக்கும்' என்று சொன்னதாக கனம் அங்கத்தினர் சொன்னார்கள். எந்த இடத்தில் அப்படிச் சொன்னார்கள் என் பதைச் சொல்வார்களா ?

* SRI A. GOVINDASAMY : முதல் அமைச்சர் அவர்களே சொன்னார்கள். அன்னியூர் கிராமத்தில் என்னை வைத்துக் கொண்டே அவர்கள் சொன்னார்கள், 'இந்தக் கிராமம் இருண்டு போயிருக்கிறதே, எதிர்க்கட்சிக்கு வோட்டுப் போட்டு ஏமாந்து விட்டீர்களே' என்று. அப்பொழுது நான் சொன்னேன், 'இப் பொழுது காங்கிரஸ்தான் ஜெயித்தது, தொகுதி பிரிக்கப்பட்டு விட்டது, விக்கிரவாண்டியை வளவனூரோடு சேர்த்தாய்விட்டது, அந்தத் தொகுதிக்கு நான்தான் உறுப்பினர்' என்று. முதல் அமைச்சர் தவறுதலாகக் கருதிக்கொண்டு, 'இந்தக் கிராமம் இருண்டிருக்கிறதே, நீங்கள் தவறு செய்துவிட்டீர்கள், எதிர்க் கட்சிக்கு வோட்டுப் போட்டு விட்டீர்களே' என்று சொன்னதும், நான் குறுக்கிட்டு, 'இல்லை, இல்லை, காங்கிரஸ் ஜெயித்த தொகுதி தான் இது' என்று சொன்னேன். எந்தக் கட்சி ஜெயித்தாலும், அந்தக் கிராமத்திற்கு வசதி வேண்டும் என்பதற்காகத்தான் சொன்னேன்.

விழுப்புரம் வட்டத்தில் மேற்குப் பகுதிக்கு அமைச்சர்கள் அடிக்கடி மின்னல் வேகத்தில் சுற்றுப் பிரயாணம் செய்கிறார்கள். அமைச்சர்களுடைய வசதிக்கு வேண்டியாவது அங்கு மின்சா ரத்தை விஸ்தரிப்பார்களானால், அந்தப் பகுதி மக்கள் எல்லாவித சௌகரியங்களையும் அடைவதற்கு முடியும். ஏதோ கிராமத்தில் ஸ்விட்சைத் தட்ட வரும்போது, 'இத்தனை கிராமங்களுக்கு மின் சாரம் கொடுத்துவிட்டோம்' என்று உரத்த குரலில் சொல்வதால் மட்டும் பிரயோஜனம் இல்லை.

தமிழ் நாடானது இந்தியாவிலேயே மின்சாரத் துறையில் முதல் இடம் பெற்றுவிட்டது, என்று அடிக்கடி அமைச்சர்கள் சொல் கிறார்கள். அப்படிச் சொல்லிக் கொண்டேயிருந்தால், மேற் கொண்டு மின்சார விஸ்தரிப்பு வேண்டியதில்லை என்று ஏற்பட்டு விடும். மேலிடத்தார்கள் கவனிக்க வேண்டும் என்பதற்காகத்தான் இதை நான் சுட்டிக் காட்டுகின்றேன். ஆளும் கட்சியைச் சார்ந்த கனம் அங்கத்தினர் ராஜா ஸர் முத்தையா செட்டியார் அவர்கள், அமைச்சரைப் பார்த்து, "டில்லிக்குப் போங்கள், அணு உலைக் கூடத்தைத் தமிழ்நாட்டில் வைக்க வேண்டும் என்று வற்புறுத் துங்கள்" என்று சொன்னார். வற்புறுத்திக் கேட்டுக்கொண்டு வந்தால், இத்தனை ஆண்டுகளாக வற்புறுத்தினோம் என்று சொல்ல லாம். இப்படிச் செய்தால், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத் திற்குள் வராவிட்டாலும், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தி லாவது அணு உலைக்கூடம் அமைக்க முடியும் என்ற நம்பிக்கை

ஏற்படும். அப்படியில்லாமல், எடுத்த எடுப்பிலேயே, 'நாம்தான் முதல் இடத்தில் இருக்கிறோம்' என்று பெருமையாகச் சொல்லிக் கொண்டேயிருந்தால், மேலிடத்தார்கள் கவனிக்காமல் விட்டு விடுவார்கள் என்ற காரணத்திற்காகக் குறிப்பிடுகிறேன்.

அடுத்தபடியாக, சேரிகளுக்கு மின்சார வெளிச்சம் தருவதற்கு அரசாங்கம் வசதி செய்திருக்கிறது. ஆனால், பஞ்சாயத்து போர்டு மானேஜ்மெண்டை ஏற்றுக்கொள்கிறபோது, ஹரிஜன வெல்பேர் டிபார்ட்மெண்ட் மூலமாக சேரிகளுக்கு மின்சாரம் விஸ்தரிக்கப் படும் என்ற சலுகை ஏட்டளவில் இருக்கிறது. பல சேரிகளுக்கு மின்சாரம் வழங்குவதுபற்றி இன்னும் நடவடிக்கை எடுக்கப்பட வில்லை. கிராமத்திற்கு மின்சாரம் வந்தும் அதை அடுத்துள்ள சேரிக்கு மின்சாரம் கொடுக்கப்படாமலிருக்கிறது. மின்சாரம் விஸ்தரிக்கப்பட்ட கிராமங்களை அடுத்துள்ள சேரிகளுக்கு மின் சாரம் வழங்கும்போது, பஞ்சாயத்து போர்டார் உத்தரவாதம் கொடுக்காத காரணத்தால் தள்ளிவிடக்கூடாது. இதிலே அரசாங் கத்திற்கு முழுப் பொறுப்பும் இருக்கிறது. ஆகவே, அந்த வசதி யைச் செய்து தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். பஞ்சாயத்து போர்டில் பணம் இருந்தால், 'சர்க்கார் கடனுக்குக் கொடுங்கள், சேமிப்பு பத்திரம் வாங்குங்கள்' என்று சொல்லி வற்புறுத்திப் பணத்தை எடுத்துக்கொள்வதற்குப் பதிலாக கிராமத்தின் தேவையை அறிந்து, அதற்கு வசதி செய்துதர வேண்டும் என்ற சாதாரண கோரிக்கையை அமைச்சர் முன்னால் வைக்க விரும்புகிறேன்.

கடைசியாக, ஒரு விஷயத்தைக் குறிப்பிடும்போது நான் ஏதோ தெற்கு-வடக்கு என்று சொல்வதாக நினைக்கக்கூடும். வடாற் காடு மாவட்டத்தில் அவரைப் பந்தல் மாதிரி மின்சாரக் கம்புகள் இணைக்கப்பட்டிருக்கின்றன. தென்னாற்காடு மாவட்டத்தில் அந்த அளவு இல்லை. செங்கற்பட்டு மாவட்டத்தில் விஸ்தரிக்கப்பட் டிருக்கும் அளவு தென்னாற்காடு மாவட்டத்தில் இல்லை. அதற்குக் காரணம், அமைச்சர் கனம் திரு. ராமையா அவர்களுக்குக்கூட நன்றாகத் தெரியும். மின்சார இலாகாவில் அந்த இரண்டு மாவட் டங்களைக் கவனிக்கக்கூடிய சூழ்நிலை இருந்தது. இப்பொழுதும் இருந்து வருகிறது. ஆனால், எங்கள் மாவட்டத்தைப் பொறுத்த வரையில், மின்சார விநியோகம் கம்பெனியாரின் கையில் பொறுப்பு இருந்ததால் அது கவனிக்கப்படாத நிலைமை இருந்தது. இப்பொழுது ஓரளவு கவனிக்கப்படுவதுபற்றி திருப்தியைத் தெரி வித்துக்கொள்கின்றேன். இன்னும் துரிதமாக விஸ்தரிக்க வேண்டு மென்று கோரிக்கையைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடிக்கின்றேன்.

SRI M. KALYANASUNDARAM: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மின்சார போர்டின் வரவு செலவுக் கணக்கானது இங்கு விவாதத்திற்குச் சம்பிரதாய முறையில் வந்திருந்த போதிலுங்கூட, நான் கூறக்கூடிய யோசனைகளை அவர்கள் ஆழ்ந்து கவனிக்கக்

19th August 1961] [Sri M. Kalyanasundaram]

கடமைப்பட்டவர்கள். அவர்கள் செய்யக் கூடியதைவிட அதிகம் செய்யவேண்டிய பொறுப்பு அரசாங்கத்திடமும் இருக்கிறது. ஏனென்றால், சட்டப்படி கூட, கொள்கை சம்பந்தமான விஷயங்கள் இன்னும் அரசாங்கத்தின் வசத்தில்தான் இருக்கிறதே தவிர, மின்சார போர்டுக்கு அப்படி இன்னும் அவ்வளவு அதிகாரம் கொடுத்துவிடவில்லை. ஆகவே, மின்சார போர்டானது ஒரு கணிசமான அளவுக்கு அரசாங்கத்தினுடைய மேற்பார்வைக்கு உட்பட்டு நடக்க வேண்டியதே தவிர, அரசாங்கத்திலிருந்தும் விடுபட்டு, தன்னிச்சையாக நடந்துகொள்வதற்கு ஏற்படுத்தப்பட்டதல்ல.

கடந்த நான்கு வருஷ காலமாக மின்சார போர்டினுடைய ஆட்சி நடந்திருக்கிறது. அதற்கு முன்னால் இது இலாகாவின் மூலமாகவே நேரடியாக நடந்து வந்தது. சுமார் 109 கோடி ரூபாய் முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே 30 கோடி ரூபாய் அளவுக்கும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே 79 கோடி ரூபாய் அளவுக்கும் செலவு செய்து, கிட்டத்தட்ட 5.71 லட்சம் கிலோவாட் மின்சாரம் உற்பத்தி பண்ணக்கூடிய சக்தி வாய்ந்த நிலையங்கள் அமைந்திருக்கின்றன. ஆனால், நிலையாக எப்பொழுதும் கிடைக்கக்கூடிய சக்தி, அரசாங்கத்தின் கணக்குப்படியும், மின் சார போர்டின் கணக்குப்படியும் 3·46 லட்சம் கிலோவாட்டுக்கு உட்பட்டுத்தான் இருக்கும் என்பதை அமைச்சர் அவர்களே ஒப்புக்கொள்வார்கள். இது நம்முடைய ராஜ்யத்தின் தேவைக்கு எவ்வளவு பற்றாக்குறையாக இருக்கிறது என்பதை நான் அமைச்சர் அவர்களுக்கு எடுத்துக்கூற வேண்டியதில்லை. அவர்கள் கொடுத்திருக்கும் புள்ளி விவரத்திலேயே இது இருக்கிறது.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 100 கோடி ரூபாய்க்கும் அதிகமாக நிதி ஒதுக்கிச் செலவு செய்த பிறகும், நம்முடைய தேவையைப் பூர்த்திபண்ணக்கூடிய நிலை ஏற்படாது. தேவை கிட்டத்தட்ட 14.48 லட்சம் கிலோவாட்டு இருக்கும் என்று கணக்குப் போட்டு, அந்தத் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றினாலும், 10 லட்சம் கிலோவாட் அளவுக்கு மின்சாரம் கிடைத்தாலே அது சந்தோஷப் படவேண்டிய விஷயம். அப்பொழுதும் நம்முடைய தேவையை அது பூர்த்தி செய்துவிட முடியாது. ஆனால், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நாம் கோரிய 118 கோடி ரூபாயை திட்டக் கமிஷன் ஒத்துக்கொள்ளவில்லை. அதை 100 கோடி ரூபாயாக அவர்கள் குறைத்திருக்கிறார்கள். அந்த அளவு நாம் திட்டங்களை நிறைவேற்றுவதில் துண்டு விழும். நம்முடைய ராஜ்யத்தின் மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்வதில் சில விசேஷ சிக்கல்கள் இருக்கின்றன. அதைத் திட்டக் கமிஷனும் மத்திய அரசாங்கத்தில் ஜலம், மின்சாரம் முதலிய விஷயங்களைக் கவனிக்கக்கூடிய இலாகா சம்பந்தப்பட்டவர்களும் விசேஷ அக்கறை செலுத்திக் கவனிக்கவேண்டும்.

[Sri M. Kalyanasundaram] [19th August 1961

நம்முடைய ராஜ்யத்தில் அனல் மின்சார நிலையம் ஏற்படுத்துவது என்பது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல. எனக்கு முன்னால் பேசிய சில அங்கத்தினர்கள்கூட அனல் மின்சார நிலயத்தை ஜில்லாவுக்கு ஒன்றுகூட வேண்டுமென்று கேட்டார்கள். அதில் என்ன கஷ்டம் இருக்கிறது என்பதைப் பார்க்கலாம். அனல் மின்சாரத்திற்கு வேண்டிய இயந்திரங்களை வெளி நாடுகளில் இருந்து கஷ்டம் இல்லாமல் வாங்கித் தந்து விடுவதாக அமைச்சர் சொல்லலாம். இருந்தாலும் அதிலும் அந்நியச் செலாவணிச் சங்கடம் இருக்கிறது. அதோடு, இரண்டாவது கஷ்டம் நிலக்கரி. ஏற்கனவே சென்னையிலும், சமயநல்லூரிலும் இருக்கக்கூடிய அனல் மின்சார நிலையங்கள் உற்பத்தி செய்யக்கூடிய மின்சக்தியின் செலவு மிக அதிகமாக இருக்கிறது. ஒரு யூனிட் அனல் மின்சார நிலயத்தின் மூலம் உற்பத்தி செய்வதற்கு இந்தியா பூராவும் பார்த்தால் 3 நையா பைசாதான் ஆகிறது. இருந்தாலும் நம்முடைய ராஜ்யத்தில் மட்டும் சென்னையில் உற்பத்தி செய்கிற அளவு ஒரு யூனிட்டுக்கு 6.3 நையா பைசா ஆகிறது. சமயநல்லூரில் கிட்டத்தட்ட 7½ நையா பைசாகூட ஆகிறது, எட்டு பைசா என்று சொல்லிவிடலாம். இவ்வளவு அதிகமாக உற்பத்திச் செலவு ஆகக்கூடிய அனல் மின்சார நிலயத்தை எங்கு பார்த்தாலும் வைப்பது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல. அப்படி ஆசை வைத்துக் கொண்டிருப்பதும் சரியல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன். சிலரைத் திருப்தி பண்ணுவதற்காக வேண்டுமானால் தனியார் துறையில் இங்கு ஒன்றும், அங்கு ஒன்றும் ஏற்படுத்தலாம். அதுவும் குறைவாக 30 மெகாவாட் ப்ளாண்டு போட்டால்கூட லாபகரமாக இருக்காது. பெரிய அளவில் உற்பத்திச் செய்யக்கூடிய ப்ளாண்டு வைத்தால்தான் கொஞ்சம் சிக்கனம் ஏற்படும். இப்போது எந்த அளவுக்கு அதை விஸ்தரித்தாலும் பொருளாதார ரீதியில் அதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டியது அவசியம். தனியார் துறையில் நடத்துகிறார்களா, பொதுத் துறையில் நடத்துகிறார்களா என்பது வேறு விஷயம். நேற்று தொழில் அமைச்சர் அவர்கள்கூட தனியார் துறையில் அவர்களுடைய தேவைக்கு உற்பத்தி செய்துகொள்வதற்கு லைசென்சு வழங்கப்படுவார்கள் என்று விளக்கம் சொன்னார். அவர்களுடைய தேவைக்கு மேல் அதிகமாக இருப்பதை சர்க்காருக்கே விற்கவேண்டும் என்று சொல்லப்போவதாகவும் சொன்னார். அதில் ஒன்றும் கஷ்டம் இல்லை. அரசாங்கத்திற்கே அவர்கள் விற்பது, இவர்கள் அதை வாங்கிக்கொள்வது அவர்களுக்கு ஒரு சப்ஸிடி போலத்தான் இருக்கும். அரசாங்கத்திற்குத்தான் அதிகப் பணம் செலவு ஏற்படும். ஆனால் ஒன்று, அனல் மின்சார நிலயத்தை நம்முடைய ராஜ்யம் பூராவும் விஸ்தரிக்க முடியும், எப்போது? இவர்கள் இந்தியா பூராவும் ஒன்று என்று சொல்கிறார்களே அந்த எண்ணம் உண்மையிலேயே செயலில் வந்தால் செய்ய முடியும். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு பதில் சொல்லவேண்டும் என்பதற்காக "இந்தியா பூராவும் ஒன்று" என்று சொல்லிக் கொண்டிருந்தால் போதாது. ஒரு டன் நிலக்கரி பீகார், வங்காள

19th August 1961] [Sri M. Kalyanasundaram]

மாகாணத்தில் 19 ரூபாய்க்கு விற்பானேன்? அதுவே நம்முடைய ராஜ்யத்தில் 47 ரூபாய்க்கு விற்கவேண்டும் என்றால் இதற்கு சர்க்கார் சரியான முறையில் பதில் சொல்லவேண்டும். சிமிண்டு, இரும்பு ஆகியவற்றுக்கு இந்தியா பூராவும் ஒட்டு மொத்தமாக விலை நிர்ணயிப்பது போலவே நிலக்கரிக்கும்—எல்லாச் சுரங்கங்களையும் சர்க்கார் எடுத்துக்கொண்டு—கன்னியாகுமரியில் இருந்து காஷ்மீர் வரை எல்லா இடத்திலும் ஒரு டன் நிலக்கரியின் விலை ஒரேயளவாக இருக்கும்படி நிர்ணயித்தால் அப்போது சென்னையில் ஒரு அனல் மின்சார நிலையம் அல்ல மாவட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொன்று வைக்க முடியும். அப்படி ஒட்டு மொத்தமாக விலை நிர்ணயிக்கப்பட வேண்டும். காரணம் அனல் மின்சார நிலையங்களுக்குத் தேவையான எரிபொருள் நிலக்கரிதான் என்பதை மனதில் வைக்கவேண்டும். நெய்வேலியில் கிடைக்கிற நிலக்கரியை உபயோகித்துக் கொள்கிறோம் என்றால்கூட மின்சாரத்தின் உற்பத்திச் செலவு அதிகமாகத்தான் ஏற்படும். அதோடு, நெய்வேலி நிலக்கரி பூராவையும் மின்சாரத்திற்கு உபயோகப்படுத்திக்கொள்ள முடியாது. இதை பல தொழில்களுக்கும் உபயோகித்துக்கொண்டாகவேண்டும். ஆகவே, நிலக்கரிக்கு தேசம் பூராவும் ஒரே விலையில் கிடைக்கும்படியாக சராசரி விலையை நிர்ணயிக்கும்படி நம் சர்க்கார் மத்திய சர்க்காரை வற்புறுத்த வேண்டும். அப்போது தான் அனல் மின்சார நிலையத்தைப்பற்றிப் பேச முடியும் என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இதை அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற புள்ளி விவரத்தில் இருந்துதான் சொல்கிறேன்.

நீர் விசையின் மூலம் உற்பத்தி செய்யக்கூடிய மின்சாரத்தின் விலை மிகவும் மலிவானது. அதுவும் நம் ராஜ்யத்தில் மேட்டூர் திட்டத்தில் ஒரு யூனிட் ½ நையா பைசாவுக்கு உற்பத்தி செய்யப்படுகிறது. இது தேசத்திலேயே மிகவும் மலிவானது என்று நினைக்கிறேன். ஆகவே, இப்படி மிக மலிவான முறையில் உற்பத்தி செய்யக்கூடிய மின் சக்தியை அதிகப்படுத்த முயற்சி செய்ய வேண்டும். அதற்குரிய கவனம் செலுத்தப்பட வேண்டும். அதுவும் கேரளம், மைசூர் போன்ற அண்டை ராஜ்யங்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி ஜல வசதியைப் பெருக்கி இத்துறையை அபிவிருத்தி செய்ய வேண்டும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட நகல் அறிக்கைபற்றி இந்தச் சபையில் விவாதம் நடத்திய காலத்தில் எதிர்க்கட்சி, ஆளும் கட்சி என்ற வேறுபாடு இல்லாமல் ஐந்து திருத்தங்கள் ஏகோபித்து ஒப்புக்கொள்ளப்பட்டன. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதி அறிக்கை பார்லிமெண்டில் சமர்ப்பித்தாகிவிட்டது. நம்முடைய திருத்தங்களில் ஒன்றாவது ஒப்புக்கொள்ளப்பட்டதா என்று தெரியவில்லை. தூத்துக்குடி துறைமுகம்கூட ஒப்புக்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. நேற்றையதினம் கனம் நிதி அமைச்சர் அவர்களிடம்கூட நான் மூன்றாவது திட்ட இறுதி அறிக்கையை இங்கே விவாதிப்பதற்கு சந்தர்ப்பம் அளிக்கவேண்டுமென்று கேட்டேன். பிஸினஸ்

[Sri M. Kalyanasundaram] [19th August 1961

அட்வைசரி கமிட்டியில் ஏன் அதைப்பற்றிச் சொல்லவில்லை என்றார். அப்போது சொல்லாவிட்டாலும் இப்போது கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கூட்டத் தொடரில் இல்லாவிட்டாலும் அடுத்ததிலாவது இரண்டு நாள் அதைப்பற்றி விவாதிக்கலாம். அதற்கு இரண்டு நாள் ஒதுக்குவதாகவும் அமைச்சர் அவர்கள் வாக்களித்திருக்கிறார்கள். நாம் முன்பு நிறைவேற்றிய திருத் தங்களில் ஒன்று, சென்னையில் இன்னொரு அனல் மின்சார நிலையம் ஏற்படுத்த வேண்டும் என்பது என்று நினைக்கிறேன். இன்னொன்று, கேரளா போன்ற அண்டை ராஜ்யங்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி எல்லா ராஜ்யங்களுக்கும் பயன்படத்தக்க வகையில் இருக்கக்கூடிய ஜலாசய வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது. இந்த இரண்டு திருத்தங்களும் எந்த அளவு வற்புறுத்தப்பட்டது என்று தெரியவில்லை. நம் ராஜ்யத்தில் இருக்கக்கூடிய ஜல வசதிகளை உபயோகப்படுத்தியிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். மேட்டூர் டன்னல் திட்டம் இருக்கிறது. வெள்ளம் வரும்போது அங்கே ரிசர்வாயரைத் திறந்துவிட்டால் போதாது. 1924-ம் வருஷ ஒப்பந்தம் இருக்கிறதே அதில் நடைமுறையில் என்ன என்ன மாறுதல்களைச செய்ய வேண்டும் எனபதைப் பரிசீலனை செய்து மேட்டூருக்கு மேலேகூட காவேரியில் எங்கங்கே அணைகட்ட முடியும் எனறு பார்க்க வேண்டும். சாந்திநல்லா-வைப்பற்றி சொல்கிறார்கள். ஒழுங்காக மேட்டூருக்கு கோடை காலத்திலும் கூடத் தண்ணீர் வந்துகொண் டிருக்கவேண்டும் என்றால் அதற்குத் தக்கவகையில் இததிட்டம் வகுக்கப்பட வேண்டும். அப்போதுதான் மேட்டூர் டன்னல் ஸ்கீம் நல்ல பலன் அளிக்கும். இதைத் தனிப் பிரச்சனையாகக் கருதி பரிசீலனை செய்யவேண்டும். இப்படிச் செய்தால் மேட்டூர் டன்னல் ஸ்கீம், பவர் ஹவுஸ் எல்லாம் நல்ல முறையில் பலன் அளிக்கும் என்பதோடு கூட, சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளம் போல் இனி ஏற்படாமல் பாதுகாத்துக்கொள்ளவும் முடியும். ஆகவே, இதில் விசேஷ கவனம் செலுத்தவேண்டும். இதனால் ஜனங்களுக்கும் மலிவான விலையில் மின்சாரம் கொடுக்க முடியும். அதோடு இன் னொன்று. மின் சக்தி தேவையும் நமக்கு நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே போகிறது. நம்முடைய தேவையைப் பூர்த்தி செய்துகொள்வதற்கு என்ன வழி என்பதையும் சிந்திக்க வேண்டும். அனல் மின் நிலையத்திற்காக 10 லட்சம் ரூபாய் என்று சம்பிரதாயத்திற்காகப் போடப்பட்டிருக்கிறது. ஆனால், அது எப்போது கிடைக்கும், எதற்காக அந்த நிதி ஒதுக்கப்பட்டிருக் கிறது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. எனக்குத் தெரிந்திருக்கக்கூடிய விவரங்களில் இருந்து இது மூன்றாவது திட்டத்தில் இடம் பெறவில்லை என்பது தெரிகிறது. அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியம். அதனால் நமக்கு சங்கடம் வரக்கூடாது. அதை அதிகப்படுத்தும் திட்டத் தோடு இணைத்தால்தான் எல்லா ராஜ்யங்களின் தேவையையும்
12 noon. பூர்த்தி செய்ய முடியும். மற்ற ராஜ்யங்கள் எப்படிப் போனால் என்ன, நம் ராஜ்யத் தேவையை மட்டும் பூர்த்தி செய்தால் போதும்

19th August 1961] [Sri M. Kalyanasundaram]

என்று நான் கூறவில்லை. நாலு ராஜ்யங்களும் கூடிய வரையில் ஒன்றாக ஒத்துழைத்து நான்கு ராஜ்யங்களின் வளர்ச்சிக்கும் ஏற்றவாறு மின்சாரத்தை பங்கிட்டுக் கொள்ள வேண்டுமென்ற அடிப்படையில் ஒரு பெரிய திட்டத்தை உருவாக்க வேண்டியது அவசியம். அதில் முக்கிய இடம் பெறவேண்டியது அணு மின்சார நிலையம், என்பதை மத்திய அரசாங்கத்தினிடம் வற்புறுத்திக் கூற வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நமது பற்றாக்குறையைப் போக்க என்னென்ன செய்ய வேண்டு மென்பதைக் குறித்து என் அறிவுக்கு எட்டிய யோசனைகளை, சர்க்கார் அறிக்கையிலிருந்தும், நிபுணர்களின் அறிக்கைகளி லிருந்தும், சில நிபுணர்களிடம் பேசியதிலிருந்தும் இதைக் கூறியிருக்கிறேன். அடுத்தபடியாக, விநியோகத்தில் நாம் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். உற்பத்தியாவதை விநியோகிப்பதில் சேதம் ஏற்படுவதை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். ஆகவேதான் நான் கொடுத்திருக்கக்கூடிய திருத்தத்தில் ஆப்ப ரேட்டிங் எபிஷியன்ஸி பற்றி குறிப்பிட்டிருக்கிறேன். நிலயங்களை பராமரிப்பது மட்டுமல்ல, உற்பத்தியாகும் மின்சாரத்தை எடுத்துச் செல்கிறோம், வீடுகளுக்கும், தொழிற்சாலைகளுக்கும், வயல் களுக்கும். எப்படி சேதாரம் ஏற்படுகிறது என்று பரிசீலனை செய்ய வேண்டும். அதில் பல ஓட்டைகள் இருக்கின்றன. இது, பீ.ஏ.ஸி.-யில் கூட வந்தது. 10 ஹார்ஸ் பவர் என்று சொல்லிக் கொண்டு 20 ஹார்ஸ் பவரில் ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள். இப்படி போகும் சேதாரம் ஒருபுறமிருக்கட்டும். மின்சாரம் போகும் கம்பிகள், அதில் உபயோகிக்கும் பொருள்கள் சரியாகயிருக் கிறதா அவை சரியாகயில்லாததால் எவ்வளவு சேதாரம் ஏற்படுகிறது என்று பார்க்க வேண்டும். தூரம் ஒரு பக்கத்தில் இருக்கிறது. அது ஒரு முக்கிய காரணம் என்று என்றால் ஒப்புக்கொள்ள முடியாது. வேறு காரணங்கள் இருக்கும். ஆகவே இதற்கு ஒரு டெக்னிக்கல் கமிட்டி போட வேண்டும். மத்திய அரசாங்கத்தில்கூட ரெயில்வே பட்ஜெட் தனி. தனி யாக இருந்தாலும் வோட்டுப் போடக்கூடிய அதிகாரம் பார்லி மெண்ட்டுக்கு உண்டு. இங்கு இதில் வோட்டுப் போடக்கூடிய அதி காரம் இல்லையென்று சட்டத்தில் இருக்கிறதே தவிர, ஆப்பரேட்டிங் எபிஷியன்ஸி குறித்து புள்ளிவிவரம் கொடுத்திருக்கிறார்களா? அட்மினிஸ்ட்ரேஷன் ரிப்போர்ட்டிலிருந்து ஒன்றும் கண்டு பிடிக்க முடியாது. 1959-ம் வருட ரிப்போர்ட் வந்திருக்கிறது. 1959-60-ல் ஆப்பரேட்டிங் எபிஷியன்ஸி எப்படியிருக்கிறது என்று கவனிக்க வேண்டியது மிக அவசியம். எலக்ட்ரிசிட்டி போர்ட் அதில் கவனம் செலுத்துகிறதா என்றால் செலுத்தியதாக நான் அறிந்து கொண்டமட்டில் தெரிந்துகொள்ள முடியவில்லை. எலெக்ட்ரிஸிட்டி போர்ட் எப்படி வேலை செய்கிறது என்ற விஷயத்திற்கு நான் பின்னால் வருகிறேன். பின்னர், வினியோகக் கொள்கை, அரசாங்கக் கொள்கை எப்படி யிருக்கிறதென்றால் விநியோகிப்பதிலும் பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாகவும் சாதாரண மனிதன்

[Sri M. Kalyanasundaram] [19th August 1961

மேலும் கஷ்டப்படக் கூடிய விதத்திலும்தான் விநியோகமும், கட்டணமும் இருக்கிறது. அதை பரிசீலனை செய்து வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 19,000 கிராமங்களுக்கும் மின்சாரம் போட்டு விட்டாலும் நான் திருப்தி அடைய மாட்டேன். எவ்வளவு பேர்களால் அனுபவிக்க முடிகிறது? தொழில்களுக்கு மின்சாரம் கொடுக்கிறீர்கள், சரி. விவசாயத்திற்கு மின்சாரம் கொடுக்கிறீர்கள், சரி. சினிமாக் கொட்டகைகளுக்கு மின்சாரம் கொடுக்கிறீர்கள், சரி. விளம்பரத்திற்கு கொடுக்கிறீர்கள், சரி. ஏர் கண்டிஷன் ரூமில் ஒரு சிலர் படுக்க மின்சாரம் கொடுக்கிறீர்கள், சரி. மின்சாரம் அவசியமான பொருளாக 1961-ல் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொள்வார்கள். அதை ஆடம்பரப் பொருளாக கருத மாட்டார்கள் என்று நினைக்கிறேன். இதை விட அபிவிருத்தி பல மடங்கு பெருகி அதிகரித்திருக்கும் இந்நேரத்தில் மின்சாரம் பத்தாம்பசலியாகி, மின்சாரம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அத்தியாவசியத் தேவையாகி விட்டது. இப்பொழுது எவ்வளவு குடும்பங்களுக்கு மின்சாரம் கிடைக்கிறது? வீட்டில் விளக்கு போட்டு ரேடியோ வைத்துக் கொள்ளக்கூட நடுத்தர வர்க்கத்தினர் பயப்பட வேண்டியிருக்கிறது. ரேடியோவைத் திருப்பிவிட்டால் பில் அதிகமாகி விடுமே என்று பயப்படவேண்டியிருக்கிறது. எவ்வளவு இலவசமாக கொடுத்திருக்கிறீர்கள் என்று நான் இப்போது கேட்க வரவில்லை. அதை மலிவாகக் கொடுங்கள். மின்சாரத்தை கிராமங்களுக்கு கொண்டு போனாலும் வசதியுள்ளவர்கள்தான் அதை அனுபவிக்க முடிகிறதே தவிர எளிய மக்களால் அதைப் பயன்படுத்த முடியவில்லை. நகரத்திலுள்ள நடுத்தர வர்கத்தினர் கூட அதை தாராளமாக பயன்படுத்த முடியவில்லை. அந்த அளவு மின்சார கட்டணம் உயர்வாகயிருக்கிறது. ஆகவே, அதிகமாக உற்பத்தி செய்து விட்டோம், அதிகமாக விநியோகம் செய்து விட்டோம் என்று இவ்வளவு திட்டங்களைக் காண்பித்து, இவ்வளவு கோடி செலவழித்திருக்கிறோம் என்று காண்பித்து அமைச்சர் அவர்கள் தங்களைத் தாங்களே பாராட்டிக் கொள்வதில் அர்த்தமில்லை. சாதாரண மனிதனுக்கு என்ன உரிமை வழங்கப்பட்டிருக்கிறது என்பதை வைத்துத்தான் நான் பாராட்டுகிறேன். இவ்வளவு முன்னேற்றம் அடைந்திருப்பதால் தான் கேட்கிறேனே தவிர முன்னேற்றம் அடையவில்லை என்று சொன்னால் இந்த யோசனையை அவர்கள் முன்னால் வைக்க மாட்டேன். திரு. வி. கே. ராமஸ்வாமி முதலியார் அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது அவரை ஒரு குறுக்கு விசாரணை நடத்தினார்கள், கட்டணத்தை உயர்த்தலாமா என்று. உயர்த்தலாம். யாருக்கு உயர்த்தலாம்? அதிகமாக உபயோகிப்பவர்களுக்குள்ள சலுகையைக் குறையுங்கள். அதிகமாக உபயோகப்படுத்துபவர்களுக்கு, தொழில்களுக்கு, .01 பைசாவாவது ஏற்றுங்கள். அப்பொழுது எப்படி இருக்கிறது என்று பாருங்கள். தொழில்களுக்கு அதிகச் சலுகை கொடுக்கிறீர்களே, அதற்கு கட்டணத்தை அதிகரித்தால் தொழில் நம் ஊரை விட்டு பறந்து போய் விடும், வேறு இடத்திற்கு போய்

19th August 1961] [Sri M. Kalyanasundaram]

விடும் என்று சொல்லும் காரணம் சரியல்ல. அந்த அளவிற்கு உயர்த்த வேண்டுமென்று சொல்லவில்லை. இப்பொழுதுள்ளது, சல்லிசாயிருக்கிறது. பல்க் சப்ளை எடுத்துக் கொள்பவர்களுக்கு சலுகை அதிகமாயிருக்கிறது. அதை எவ்வளவு தூரம் உயர்த்த முடியும் என்று ஆலோசித்துப் பார்த்து உயர்த்தி எளிய மக்கள் மின்சாரத்தை நன்கு பயன்படுத்தும் வகையில் சர்க்கார் கொள்கை மாறவேண்டும். இந்த யோசனையை எலெக்ட்ரிசிட்டி போர்டுக்கு கூறவேண்டுமென்றுதான் நான் இதை எடுத்துக் கூறுகிறேன். அப்பொழுதுதான் இவ்வளவு கிராமங்களுக்கு மின்சாரம் கொண்டு போயிருக்கிறோம் என்று சொல்வதில் அர்த்தமிருக்கும். விவசாயத்திற்காக மின்சாரம் உபயோகிப்பதில் பல சலுகைகள் 1, 2, 3 என்று 7 ஐட்டம் காண்பித்திருக்கிறார்கள். இதில், பின்னடைந்த பிரதேசம், முன்னேறியிருக்கும் பிரதேசங்கள் என்று இருக்கிறது. எப்படி அதை பிரித்தார்கள்? பின் தங்கியிருக்கும் பிரதேசங்களுக்கு ஒரு காரண்டி, முன்னேற்ற மடைந்திருக்கும் பிரதேசங்களுக்கு ஒரு காரண்டி. விவசாயம் எப்படியிருக்கிறது என்று பார்க்கவேண்டும். மாடுகள் செத்துக் கொண்டிருக்கிறது, மனிதன் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறான். மின்சாரத்தை உபயோகித்து விவசாயத்தை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று நினைக்கிறோமே தவிர, எவ்வளவுதூரம் கட்டும் என்று மட்டும் கணக்கு பார்க்கக் கூடாது. மின்சார போர்ட் வினியோகிக்கும் பகுதியில் ஒரு ரேட், லைசென்ஸிகள் இருக்கக் கூடிய பகுதிகளில் இன்னொரு ரேட். தாரதம்மியம் அதிகமாக இருக்கிறது. லைசென்ஸிகள் ஏன் மின்சார போர்ட் கொள்கையை பின்பற்றக்கூடாது என்பதை அறிய விரும்புகிறேன். அதில் என்ன இடையூறு இருக்கிறது என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஒரு எச்.பி.-க்கு 55-60 ரூபாய் மினிமம் காரண்டி வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். ஏன் லைசென்ஸிகள் அதிகமாக வசூலிக்க வேண்டும். ஒரே ரேட்டில் தானே கொடுக்கப்படுகிறது? உற்பத்தி செய்வது மின்சார போர்ட். அதை வாங்கி விநியோகம் செய்கிறார்கள், இவர்கள். கம்பி, மரம் இவைகள்தான் அவர்களுடையது. ஒவ்வொரு கம்பத்திற்கும், ஒவ்வொரு அங்குல கம்பிக்கும் லாபம் கிடைக்கவேண்டுமென்ற கொள்கையைத்தான் அவர்கள் கையாள்கிறார்களே தவிர ஒட்டு மொத்தமாக லாபம் இருக்கிறதா இல்லையா என்பதல்ல. சேலம்-ஈரோடு, ஸவுத் மதராஸ் எலெக்ட்ரிஸிட்டி கார்ப்பரேஷன் இவை நல்ல லாபம் சம்பாதித்திருக்கிறார்கள். நான் பார்த்ததைச் சொல்கிறேன். அந்த லாபத்தில் ஓரளவு கன்ஸ்யூமர்ஸுக்கு ரிபேட் கொடுக்கக்கூடிய அளவிற்கு லாபம் கிடைத்திருக்கிறது. அப்படியிருக்க ஒட்டுமொத்தமாக எவ்வளவு லாபம் வருகிறது என்று பார்த்து ஏன் மினிமம் காரண்டியைக் குறைக்கக் கூடாது? அதே சமயத்தில் ஒரு ஸ்கீம் போட்டு அதில் 15 சதவிகிதம் லாபம் கிடைத்தாலும் மொத்தத்தில் லாபம் கிடைக்கிறதா இல்லையா என்று பார்க்காமல் ஒவ்வொரு வருடத்திற்கும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு வருடத்திலும் கணக்குப்

[Sri M. Kalyanasundaram] [19th August 1961

பார்த்து லைசென்ஸ் ஏரியாவில் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். மொத்தத்தில் லாபம் கிடைத்ததா இல்லையா என்று பார்ப்பதில்லை. அதோடு லைசென்ஸீ ஏரியாவில் ஒவ்வொரு வருடமும் எவ்வளவு லாபம் கிடைத்திருக்கிறது என்பது நமக்குத் தெரிய வேண்டும். அவைகளை எல்லாம் கணக்குப் பார்த்து, இப்போது இருப்பதுபோல் பின்னடைந்த பகுதி, முன்னேற்றமடைந்த பகுதி என்று மட்டும் பார்க்காமல் சாதாரண மக்கள் இதனால் பயனடையக்கூடிய அளவுக்கு திட்டத்தை வரையறுக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களிடம் வலியுறுத்திக்கூறிக்கொள்கிறேன். அப்போது தான் சாதாரண விவசாயிகள் மின்சாரத்தின் பயனை அடைய முடியும். இன்னும் ஒன்று, மின்சாரத்தை மின்சார போர்டும், லைசன்ஸ் கம்பெனிகளும் வழங்கிக்கொண்டிருக்கின்றன. அதிலும் அபிவிருத்தி செய்வதற்கு ஒதுக்கப்பட்டிருப்பதிலும் ஏற்றத்தாழ்வு காண்பிக்கப்பட்டிருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத்திட்ட காலத்தில் மின்சார அபிவிருத்திக்காக திட்ட காலத்தில் 10 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது ஐந்து வருடங்களுக்குமாக. இந்தப் பத்து கோடி ரூபாயில் ஐந்து கோடி எழுபத்திமூன்று லட்சம் ரூபாய் 1961-62-ம் வருடத்திற்கு செலவழிக்க ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு காரணம் என்ன? 1962 பிப்ரவரியில் பொதுத்தேர்தல் நடக்கப்போகிறது. இதைக் காரணமாக வைத்துக்கொண்டு அமைச்சர்கள் போய் பிரசாரம் செய்வதற்கு வசதியாக இருக்கும் என்கின்ற காரணத்தைதான் சொல்லமுடியும். மொத்தத்தில் 10 கோடி ரூபாயில் ஐந்து கோடி 73 லட்சம் ரூபாய் கிராம மின்சார அபிவிருத்திக்காக கொடுத்திருக்கிறார்கள். உண்மையிலேயே இதை நிறைவேற்றினால் சந்தோஷம் தான். ஆனால் உண்மையிலேயே நிறைவேற்றப் போகிறார்களா என்பது தான் சந்தேகம். இவ்விதம் பாதிக்கு மேல் ஒரு வருடத்திற்கு மட்டும் ஒதுக்கிவிட்டுள்ள ஐந்து வருட காலத்திற்கும் சேர்க்க லைசன்ஸ் கம்பெனிகளுக்கு 2 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அவர்கள் கிராமத்தில் மின்சார விஸ்தரிப்பு ஏற்படவில்லையே என்று கவலைப்படப் போவதில்லை. எங்கு லாபம் கிடைக்கிறதோ அங்குதான் போவார்களே தவிர கிராமப்புறங்களில் அவர்களுக்கு அக்கரை இருக்கும் என்று என்னால் சொல்லமுடியாது. அப்படிப்பட்டவர்களை நான் இது வரை பார்க்கவில்லை. காங்கிரஸ் அங்கத்தினர்கள் சேர்மென்னாக இருக்கக்கூடிய கம்பெனிகளில் கூட இந்த முறை தான் இருந்து கொண்டிருக்கிறது. லைசன்ஸ் கம்பெனிகளில் தேசபக்தியுள்ளவர்கள் தேசபக்தியில்லாதவர்கள் என்று வித்தியாசம் கிடையாது. ஆனால் இரண்டு பேருக்கும் பணபக்தி மட்டும் இருக்கிறதே தவிர வேறு ஒன்றும் இருப்பதை என்னால் காண முடியவில்லை. ஆகவே இவர்களுக்கு அரசாங்கம் ஏதாவது நிபந்தனை கொடுத்தாக வேண்டும். அல்லது லைசன்ஸ் கம்பெனிகளை இந்த வருடத்திலிருந்தே அரசாங்கம் எடுத்துக்கொள்ளவேண்டும். நண்பர் சீனிவாச அய்யர் அவர்கள் குறிப்பிட்டது போன்று 10 வருடத்திற்கு அபிவிருத்தி வேலைகளை எடுத்துக்கொள்ளுங்கள்

19th August 1961] [Sri M. Kalyanasundaram]

என்றுவது சொல்லவேண்டும். அவ்விதம் ஒன்றுமில்லாமல், ஐந்து வருடங்களுக்கும் சேர்த்து 5 கோடி ஒதுக்கிவிட்டு அதில் இந்த வருடத்திறகு 25 லட்சம் என்று ஒதுக்கியிருப்பது சரியலல. அதிலும் இதுவரை எவ்வளவு கொடுத்திருககிருர்கள் என்று பார்த்தால் மூன்று (காலத்திலும்) இனத்திலும் சைஃபர் தான் இருக்கிறது. இப்போது ஆகஸ்டு ஆகிவிட்டது, இனி எப்போது சாங்ஷன் செய்து எப்போது வேலையை முடிக்கப் போகிருர்கள் என்று தெரியவில்லே. இன்னின்ன வேலேகளே கம்பெனிகள் எடுத்து நடத்த வேண்டும், அவர்களே கட்டாயப்படுத்த வேண்டும் என்று அமைச்சர் அவர்களே நான் கேட்டுக்கொள்கிறேன். இதில் விதிகளேத் திருத்த வேண்டியது அவசியமென்ருல் விதிகளே திருத்தி, அவசியமேற்பட்டால் இதற்கென்று ஒரு விசேஷ சட்டம் கொண்டுவந்தாவது அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்போது யார் யார் மறுக்கிருர்கள் என்பது தெரியும். ஏதோ எல்லேயை நிர்ணயம் செய்து விட்டோம் என்று சொல்வதில் பிரயோசனம் இல்லே. இந்தியா பாகிஸ்தான் எல்லே போன்ரு நிர்ணயித்துவிட்டோம்? ஆகவே அபிவிருத்தி அடையாத பகுதிகளுக்கு மின்சாரத்தை வழங்குவதற்கு விதிகளேயாவது மாற்றவேண்டும். இல்லேயென்ருல் ஒப்பந்தத்தை ரத்து செய்ய வேண்டும். எந்த முறையிலாவது துரிதமாக கிராமப்புறங் களுக்கு வேகமாக மின்சாரத்தை வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று அமைச்சர் அவர்களேக் கேட்டுக்கொள்கிறேன்.

இது போக, மின்சார போர்டு இயங்குவதைப்பற்றி சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். மின்சாரம் போர்டால் வழங்க வேண்டும் என்ற சட்டத்தில் உடன்பாடு இல்லாதவன் நான். மின்சாரக் குழு அவசியமில்லே என்றும், அரசாங்கமே நேரடியாக நடத்தலாம் என்பது என்னுடைய எண்ணம். அரசாங்கத்தால் சாதிக்க முடியாத காரியங்களே எவ்வளவு தூரத்திற்கு இந்த போர்டார் தீர்த்து வைப்பார்கள் என்பதை என்னுல் புரிந்து கொள்ள முடியவில்லே. வேண்டுமென்ருல் இன்கம் டாக்ஸ் வாங்கிக்கொள்ளலாம். இப்போது எப்படியாவுலும் சட்டம் வந்துவிட்டது, மின்சார போர்டும் அமைந்தாய்விட்டது. போர்டும் இயங்கிக்கொண்டிருக்கிறது. இதன் தலேவர் முழு நேர ஊழியராக இல்லே. முன்னுல் ஒருவர் நியமிக்கப்பட்டார். அவர் போன பிறகு இப்போது ஒருவர் வந்தார். எல்லோருமே முழு நேர ஊழியர்களாக இருக்கப் பயப்படுகிருர்கள். இப்போதுள்ளவரும் லீவு எடுத்துக்கொண்டு போய்விட்டார். இதன் காரணம் என்ன என்பதைப்பற்றி வேண்டுமென்ருல் ஸ்பெஷல் பிராஞ்சு மூலமாக விசாரணே செய்து பார்க்கட்டும். போர்டு பரிபூரண அதிகாரம் பெற்றிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. சட்டத்தின் 78-வது பிரிவில் போர்டு இயங்குகின்ற முறைப்பற்றி சொல்லும்போது இதற்கான விதிகளே வகுத்து உத்தரவு பிறப்பிக்க ராஜ்ய அரசாங்கத்திற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் பேரில் இதுவரை இந்த சென்னே அரசாங்கம் என்ன செய்தது? என்னென்ன விதிகள் இதுவரை வகுத்து கொடுத்திருக்கிருர்கள்.

சாதாரணமாக ஷெட்யூல் ஆஃப் பவர் கூட இதில் கொடுக்கப்படவில்லை. சீப் இன்சினியராக இருக்கிறவருக்கு இது புரிகிறதோ இல்லையோ தெரியவில்லை. அவர் போர்ட் இன்சினியராக இருக்கிறார், அதோடு போர்ட் மெம்பராகவும் இருக்கிறார். அவர்களுக்கும் சில உரிமைகள் தான் இருக்கின்றன. அவைகளை எல்லாம் பை-பாஸ் செய்துவிட்டு என்னவெல்லாமோ அதிகாரங்களை செய்து கொண்டிருக்கிறார். ஏதோ அமைச்சர்கள் ஓடச்சொல்லுகிறார்கள், அதற்குத் தகுந்தபடி இவர் ஓடுகிறார் என்பதற்காக இவரை வைத்துககொண்டிருக்கிறார்களா? இவரைவிட சிறந்தவர்களே இல்லையா? இம்மாதிரியான விருப்பு வெறுப்பு, விஞ்ஞானியாக இருப்பவர்களிடம் இருக்கக்கூடாது. இதை திறமை என்று சொல்ல முடியாது. அவரை தனியாக பிடித்திருக்கிறது, அதற்காக அவரை பாராட்ட வேண்டுமென்றால், அவருக்கு தனியாக சிலையை ஏற்படுத்துங்கள், வேண்டுமென்றால் பத்ம பூஷன், அல்லது பாரத ரத்ன போன்ற பட்டங்களை கொடுங்கள். அதல்லாமல் இப்படிப்பட்டவரை ஒரு இலாகாவில் தலைவராக ஏற்படுத்தி வைத்துக்கொண்டு இந்த மின்சார இலாகாவையே கெடுத்து விடாதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் சொல்லுவதை வேண்டுமென்றால் அவர்கள் புரிந்து கொள்ளாமல் இருக்கலாம். இன்றைக்கு மின்சார இலாகாவில் என்ன நடக்கிறது என்றால், உண்மையில் ஒரு "அபூப்கான் தர்பார்" தான் நடந்து கொண்டிருக்கிறது. பெரிய இரும்புத்திரை போட்டு அங்கு நடப்பதை எல்லாம் மறைத்துக் கொண்டிருக்கிறார்கள். மின்சார வெட்டு வந்திருக்கிறது. ஏன் இந்த மின்சார வெட்டு ஏற்பட்டது? இதற்கு காரணம் என்ன? அமைச்சர் அவர்கள் ஏதோ 15 நாட்கள்தான் மின்சார வெட்டு இருந்ததாக சொன்னார்கள். ஆனால் எத்தனை இடத்தில் எத்தனை தடவை பிரேக் டவுன் ஏற்பட்டிருக்கிறது? எத்தனை இடங்களில் "ஷட் டவுன்" ஏற்பட்டிருக்கிறது, எல்லா ஏரியாக்களுக்கும் ஒழுங்காக மின்சாரம் வழங்கப்பட்டதா? இதைப்பற்றி சரியான பதில் சொல்லட்டும். இதையெல்லாம் மின்சார வெட்டு என்று சொல்லுவதில்லை. ஏப்ரல் மாதத்தில் மட்டும் 15 நாட்கள் நடந்தது என்று சொல்லிக்கொண்டார்கள். ஜனவரி மாதத்திலிருந்து மே மாதம் வரைக்கும் பல முறை மின்சார வெட்டு ஏற்பட்டது உண்மையா, இல்லையா என்று விசாரித்துச் சொல்லட்டும், எந்தெந்த இடங்களில் எல்லாம் "பிரேக் டவுன்" ஏற்பட்டது, எந்தெந்த இடங்களில் எல்லாம் "ஷட் டவுன்" ஏற்பட்டது இவைகளை எல்லாம் விசாரித்து பதில் கூற வேண்டும் என்று அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். யாராவது சொல்லுகின்ற வார்த்தைகளை மட்டும் நம்பி பேசினால் பிரயோசனம் இல்லை. திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று பிரச்சாரத்திற்காக வேண்டுமென்றால் எதை வேண்டுமானாலும் சொல்லலாம். இவைகள் எல்லாம் டிப்பார்ட்மென்ட் ரகசியங்கள் என்று யாரும் நினைக்கவேண்டாம். தேசத்திலுள்ள மக்களுக்கு இந்த காரியங்கள் எல்லாம் தெரிந்திருக்க வேண்டியது தான். இந்த டிப்பார்ட்மென்ட் பொதுமக்களுடைய தொடர்பை

19th August 1961] [Sri M. Kalyanasundaram]

ஏற்படுத்திக்கொண்டிருக்க வேண்டிய டிப்பார்ட்மென்ட். இப்பேர்பட்ட டிப்பார்ட்மென்டை நல்ல முறையில் வைத்துக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். அதைவிட்டு அவர்கள் சொல்லுவதை எல்லாம் அமைச்சர்கள் கேட்டு ஆதரிப்பது மிகவும் தவறு என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அது மட்டுமல்ல, டிப்பார்ட்மெண்டுக்குள் ஜாதி வெறியை, மொழி வெறியை, மத வெறியை, இவைகளை எல்லாம் சீஃப் இன்சினியர் அவர்களுடைய கையாட்கள், தூண்டிவிட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, அரசியல் வெறியை தூண்டிவிட்டு, கம்யூனிஸ்ட்களுக்கு எதிர்ப்பை காண்பித்துக்கொண்டிருக்கிறார்கள். கம்யூனிஸ்ட் எதிர்ப்பு வெறி இருக்குமானால் பதவியை விட்டு விட்டு வெளியில் வந்து அரசியல் இறங்கிப் பார்க்கட்டும், அப்போது பார்த்துக் கொள்ளலாம். ஆனால் அவருக்கு அவ்வளவு அறிவு இருக்கும் என்று நான் நினைக்கவில்லை. சில வகைகளில் அவருக்கு திறமை இருப்பதாக நீங்கள் வேண்டுமானால் நினைக்கலாம். இப்படி வெறியைக்கொண்டிருப்பவர்கள் விஞ்ஞானியாக இருக்க முடியாது. இன வெறி, ஜாதி வெறி இப்படி எல்லாவிதமான வெறியையும் கொண்டிருக்கக்கூடியவர் ஒரு விஞ்ஞானியாக இருக்க முடியாது. எந்தப் பிரபலமான விஞ்ஞானியையும் எடுத்துப் பாருங்கள், அவர்களுக்கு இந்த மாதிரி வெறி என்பதே இருக்காது. அஞ்ஞானிதான் அப்படிப் பேசுவான். ஏதாவது கொஞ்சம் நஞ்சம் விஞ்ஞானம் இருந்தாலும் அதுவும் போய் விடும். அப்புறம் அஞ்ஞானம்தான் இருக்கும். அவர் செய்ததைத் தான் பார்ப்போமே—அப்படி என்ன செய்துவிட்டார்? போட்ட திட்டங்கள் யாவும் 30 ஆண்டு காலமாக உருவான திட்டங்கள். இப்போது கனடா, வெஸ்ட் ஜெர்மனி உதவி கிடைக்கிறது. இந்த உதவி என்ன ஒரு அதிகாரியைப் பொருத்தா கிடைக்கிறது? இன்றைக்கு சோவியத் யூனியன் பின்தங்கிய நாடுகளுக்கு உதவி செய்யவில்லையென்றால், கனடாவும் மேற்கு ஜெர்மனியும் உதவி செய்துவிடுமா? இதைக்கூட அறிய சக்தியற்றவர் அவர். ஒரு கோடி ரூபாய் செலவில் ஒரு திட்டம் போட்டால், என் இஷ்டப்படி போட்டால்தான் வேலைகள் நடக்கும் என்று சொல்லி, நேராக அமைச்சர் ராமையா அவர்களிடம் போவது, அமைச்சர் ராமையா அவர்களும்கூட என்னவோ, ஏதோ என்று அவர் சொல்லுகிறபடியே ஒத்துக்கொள்வது, அதன் பிறகு சீஃப் மினிஸ்டரிடம் போகவேண்டியது, அங்கேயும் இம்மாதிரி சொல்ல வேண்டியது., இப்படி நடக்கிறது. இந்தக் காலத்தில் எவன் வேண்டுமானாலும் என்ன வேண்டுமானாலும் பண்ணலாம். பண்ணி விட்டு கம்யூனிஸ்ட்கள் தலையில் வைத்துவிடுவது. கனம் அங்கத்தினர் வேதரத்னம் பிள்ளை அவர்களே ஏமாறும்போது மற்றவர்கள் ஏமாறுவதைப்பற்றிக் கேட்பானேன். யார் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். நிலைமை அப்படி இருந்துகொண்டிருக்கிறது. அது போகட்டும். பொதுத் துறையில் இருக்கக்கூடிய இலாகா இந்த இலாகா. கோடிக் கணக்கில் செலவு செய்து கொண்டுபோகிறோம். அப்படி இருக்கும்போது ஒரு அதிகாரியை

[Sri M. Kalyanasundaram] [19th August 1961

நம்பி ஏன் இப்படி இருக்கவேண்டும். எல்லோருடைய கூட்டு முயற்சியினுலும், எல்லா நிபுணர்களுடைய கூட்டு முயற்சியினுலும் எல்லா தொழிலாளர்களுடைய கூட்டு முயற்சியினுலும் இந்தத் திட்டங்கள் உருவாகவேண்டுமே தவிர, ஒரு தனிப்பட்ட மனிதன் இல்லாவிட்டால் எல்லாமே கெட்டுவிடும் என்று நினைப்பதும், அவனுல்தான் எல்லாம் நடக்கிறது என்று நினைப்பதும், ஆதரவு கொடுப்பதும், என்ன நிபந்தனை போட்டாலும் அதற்கு செவி சாய்ப்பதும், இந்த முறையில் இருக்கும்வரையில் ஒற்றுமையை வளர்க்க முடியாது. அதற்கு பதிலாக கட்சிப் பிரதி கட்சிதான் ஏற்படும்.—நான் சொல்லுவது அரசியல் கட்சிப் பிரதி கட்சி அல்ல—சீஃப் என்ஜினியர் கட்சி, சீஃப் என்ஜினியர் எதிர்ப்புக் கட்சி என்று அங்கே கட்சிகள் தோன்றப் போகின்றது. தொழிலாளர்களிடம் ஒருவரது சொந்த விருப்பு வெறுப்பைக் காட்டலாமா? நாம் பல திட்டங்கள் போட்டு பல கோடி ரூபாய் செலவு செய்கிறோம். திட்டங்களெல்லாம் நிறைவேற்றப்படுவது யாரால்? நான் ஏன் இவ்வளவு சொல்கிறேன் என்றுல் தயவு செய்து இவருக்கு எக்ஸ்டென்ஷன் கொடுக்காமல் இருங்கள் என்பதற்காகத்தான். ரொம்ப அறிவு ஆற்றல் உள்ளவர்கள் என்று புகழுகின்றீர்கள். ஏதாவது என்றுல் வெளியே போகிறேன் என்று மிரட்டுகிருர், உடனே பயந்துகொண்டு அவர் சொல்படி கேட்பது. ஏன்? வெளியே போகிறேன் என்றுல் போகட்டுமே. சிறந்த அறிவாளி என்கிறீர்கள்—என்ன க்வாலிபிகேஷன், காட்டுங்கள். என்ன ஒரிஜினல் ஐடியா, காட்டுங்கள். நான் சவால் விட்டுக் கேட்கிறேன். பத்து ஆண்டு காலத்தில் நாம் செலவு செய்திருக்கிற 109 கோடி ரூபாய்க்கு உருவானவைகள் என்ன? சாதனைகள் என்ன என்று இவால்யுவேட் செய்யுங்கள் ஒரு கமிட்டி போட்டு. ஏன், நீங்களாகச் செய்யவேண்டாமா? குற்றம் கூறுவதற்கில்லை, ஏதாவது சொன்னுல் மனம் ஒடிந்து போய் விடுமோ என்று பேசாமல் இருக்கிறீர்கள். அதை எடுத்துச் சொல்வதற்குப் போதிய மனேபலம் இல்லை. அவர் இஷ்டம் போலத்தான் நடப்பேன் என்று போய்க்கொண்டிருக்கிருர். தொழிலாளர்களுடைய பிரச்னை அவர்கள் பொறுப்பில் இருக்கக் கூடாது. மின்சார போர்டின் பொறுப்பில் நேரடியாக ஒரு அதிகாரியை நியமிக்கவேண்டும் என்று செய்யப்பட்ட ஒரு ஒப்பந்தப்படி ஒரு வருஷத்திற்கு முன்னுல் உத்திரவு பிறப்பிக்கப்பட்டது. சப்தப்படாமல் இந்த உத்திரவை ரத்து செய்தீர்கள். ஏன்? அப்படியானுல் என்னுல் வேலை செய்ய முடியாது என்று மிரட்டியவுடன், மின்சார போர்டு மெம்பர்களெல்லாம் பயந்து அவர்கள் சொன்னபடி கேட்கவேண்டும், இல்லாவிட்டால் அவர் ராஜிநாமா செய்து விட்டுப் போய்விடுவார், அப்புறம் குந்தா வராது, ஒன்றும் வராது என்று கற்பனை செய்துகொண்டு, தம்மையும் ஏமாற்றிக் கொண்டு ஊரையும் ஏன் ஏமாற்ற வேண்டும் என்று தெரியவில்லை. இத்தகைய ஒரு மனிதரை பொறுப்புள்ள ஒரு இடத்தில் வைப்பது தவறு. நாற்பதாயிரம் தொழிலாளர்கள் இருக்கிருர்கள்,

19th August 1961] [Sri M. Kalyanasundaram]

ஆயிரக் கணக்கான என்ஜினீயர்கள், எத்தனையோ நிபுணர்கள், இன்னும் நிபுணர்களாக ஆக வேண்டியவர்கள் இவர்களுடைய மனதையெல்லாம் புண்படுத்தி, அவர்களை தன் சொந்தப் பணியாட்களைப் போல நடத்தினால் சிறந்த விஞ்ஞானிகளை எப்படி உண்டாக்க முடியும் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். எனக்கு தனிப்பட்ட முறையில் அவரோடு ஒன்றும் இல்லை. நான் ஒரே ஒரு தடவை பார்த்திருக்கிறேன்—அவ்வளவு தான். மற்றபடி பார்த்ததும் இல்லை, பேசியதும் இல்லை. தொழில்களைப் பெருக்கக்கூடியவர்கள் தொழிலாளிகள். தொழிலாளிகள் வாங்குகிற சம்பளத்திற்காக உயிரைத் தந்து வேலை செய்யக் கூடியவர்கள். அவர்களுடைய உழைப்புதான் நாட்டுக்குப் பிரதானம். இதை இருதயபூர்வமாக ஒத்துக்கொண்டால், சீஃப் என்ஜினீயருடைய நடவடிக்கைகளைப்பற்றி கொஞ்சம் கூர்ந்து ஆலோசிக்கவேண்டும். போட்டிருக்கக்கூடிய உத்திரவு, அதனால் ஏற்பட்டிருக்கக்கூடிய தகராறு எல்லாவற்றையும் எடுத்துக் கூறி புத்தியாவது சொல்லிப் பாருங்கள். அப்போதும் கேட்கவில்லை யென்றால்; நடப்பது நடக்கட்டும். பணம் ஒதுக்கியிருக்கிறது, கோர்ட்டுக்குக் கொண்டு போய் விட்டார்கள், பணத்தைச் செலவழிக்க முடியாமல் போய்விட்டது என்று பொதுமக்கள் இதை நம்பவேண்டும் என்று அறிக்கையில் சேர்த்திருந்தால் அது மிகவும் தப்பான காரியம். இதிலே தொழிலாளிகள் எப்போது கோர்ட்டுக்குப் போனார்கள் என்பது முக்கியம். லேபர் கமிஷனர் முன்பு பேச்சுவார்த்தை நடந்து, கனம் அமைச்சர் வெங்கட்ராமன் அவர்களும், கனம் அமைச்சர் ராமையா அவர்களும் ஆலோசனை கூறி அவர்கள் ஆசீர்வாதம் கொடுத்து செய்யப்பட்ட ஒப்பந்தம் நிறைவேற்றப்படவில்லை. அதற்கு மாறாக ஒப்பந்தங்களை மீறி எந்தெந்த தொழிலாளர்களை எந்தெந்த சந்தர்ப்பத்தில் நசுக்கலாம் என்று ஆரம்பித்து, ஃபெடரேஷன் முக்கியமாக இருக்கிறது என்பதைப் பார்த்து அவர்களுக்கு என்ன தொந்திரவு கொடுக்கலாம் என்று அந்த வகையில் போன காரணத்தினால்தான் தொழிலாளிகள் கோர்ட்டுக்குப் போனார்கள். அவர்களுக்கு அரசாங்கத்திடத்தில் ஏற்பட்ட பயத்தினால் போகவில்லை. அவர்கள் கோர்ட்டுக்குப் போனதற்கு இந்த சீஃப் என்ஜினீயர்தான் காரணம். அம்மாதிரி சீஃப் என்ஜினீயர் இருக்கிறார். அதற்காகத்தான் அரசாங்கத்தை விட்டு வேறாக—தொழிலாக—கருதவேண்டும் என்று கோரிக்கை கொடுத்து வைத்திருக்கிறார்கள். அதை தொழிலாகக் கருதவேண்டும் என்று கோரிக்கை கொடுத்திருப்பதன் காரணம் என்னவென்றால் தொழில் சச்சரவுச் சட்டப்படி, ஷாப் எஸ்டாப்ளிஷ்மெண்ட் ஆக்ட்படி ஏதாவது நன்மை கிடைக்கும் என்று சீஃப் என்ஜினீயரிடத்தில் இருக்கிற பயத்தினால் கூறினார்களே தவிர அரசாங்கத்திடம் ஏதோ வெறுப்பு காரணமாக இல்லை. அல்லது பொதுத் துறை விருத்தியடையக்கூடாது என்று அல்ல. தொழிலாளர்களுடைய கஷ்டத்தினால்தான் இந்த சாதனைகள் ஏற்பட்டுள்ளன, திட்டங்கள் நிறைவேறியுள்ளன. இதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். அவர்களுடைய கோரிக்கை

[Sri M. Kalyanasundaram] [19th August 1961

களைப் பரிசீலனை செய்வதிலே ஹைக்கோர்ட் தாவா குறுக்கே நிற்கவேண்டியதில்லை. பேச்சுவார்த்தை நடத்துங்கள். பேச்சுவார்த்தையில் உடன்பாடு வந்தால்தானே வாபஸ் வாங்கிக் கொள்கிறார்கள். பேச்சுவார்த்தை நடத்துவதற்கே வாபஸ் வாங்க வேண்டும் என்று சொல்வானேன்? ஒரு என்ஜினியருக்காக பயப்படுவானேன்? பேச்சுவார்த்தை நடத்துங்கள் என்று உத்திரவு போடக்கூடாதா? என்ஜினீயர் உங்களுக்குப் பயந்து நடக்க வேண்டுமா? அல்லது என்ஜினீயருக்கு பயந்து அமைச்சர்கள் இருக்கவேண்டுமா? என்னதான் நிபுணராக இருந்தாலும் அமைச்சரையும் அரசாங்கத்தையும் ஆட்டி வைக்கும் நிலைக்கு விடக்கூடாது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் உணர வேண்டும்.

அடுத்தபடியாக அவர்களுடைய குறைகளைத் தீர்ப்பதற்கு தனிப்பட்ட தொழிலில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளிகள் என்று வரையறுத்தாகிவிட்டது. தனியாக ஒரு போர்டு போட்டு பரிசீலனை செய்யுங்கள். பேச்சுவார்த்தை நடத்துங்கள். அதில் எனக்கு ஏதாவது தொழிற்சங்கத்திடம் செல்வாக்கு இருந்தால் அதைப் பயன்படுத்தத் தயாராக இருக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வளவு தூரம் ஆத்திரமூட்டும் செயல்கள் இருந்தபோதிலும் அமைதியாக இருப்பவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் என்னென்னவோ சாதனைகள் இருக்கிறது என்று சொல்லுகிறோம். திறமை அதிகரிக்கிறது என்று சொல்லுகிறோம். அதே போல விபத்துக்கள் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. நான் இப்போது மரணம் ஏற்பட்ட விபத்துக்களை மட்டும் எடுத்துக் குறிப்பிடுகிறேன். 1956-57-ல் 9 விபத்துக்கள், 1957-58-ல் 11 விபத்துக்கள், 1958-59-ல் 16 விபத்துக்கள், 1960-61-ல் 28 விபத்துக்கள், 1961-62-ல், அதாவது ஜூலை, ஆகஸ்ட் என்று ஆகிய இரண்டு மாதங்களில் மட்டும் 8 விபத்துக்கள், இப்படி வர வர விபத்துக்கள் அதிகமாகிக்கொண்டே போகின்றன. நான் இப்போது கூறியது மரணம் ஏற்பட்ட விபத்துக்கள் மட்டும். அதைத் தவிர கை இழப்பது, கால் இழப்பது போன்ற விபத்துக்கள் வேறு இருக்கின்றன. இவைகளின்மீது என்ன விசாரணை நடத்தினீர்கள்? இப்படி உயிரைக் கொடுத்து வேலை செய்யக்கூடியவர்கள் மீது அபவாதத்தைச் சுமத்துகிறீர்கள். நல்லது செய்யாது போனாலும், தயவுசெய்து அபவாதமாவது செய்யாமல் இருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

12-30 p.m. அவர்கள்மீது அவதூறான வழக்குகள் போடப்பட்டு, பழி வாங்கப்படுகின்றனர். இன்னும் வேலைகள் அங்கு எப்படி நடத்தப்படுகின்றது என்று பார்த்தால், நமது பிரதம மந்திரி ஸ்ரீ நேரு அவர்கள் வெறுக்கும்படியான கன்ட்ராக்டைத்தான் அதிகமாக

19th August 1961] [Sri M. Kalyanasundaram]

இந்த இலாகாவினர் ஆதரித்துவருகின்றனர். நம்முடைய நாட்டிலுள்ள இளைஞர்களுக்கும், விஞ்ஞானிகளுக்கும் நல்ல வேலை வாய்ப்புக்கள் கொடுக்கவேணடுமென்று சொல்லப்படுகிறது. ஆனால் இந்த மின்சார இலாகாவினரோ அப்படிப்பட்ட வாய்ப்புக்களையெல்லாம் கொடுக்காமல், இதுவரையிலே இலாகாவினர் செய்து வந்த வேலைகளுக்குகூட இப்போது கன்ராக்டுகாரர்களை நியமித்து அவர்களிடம் எல்லா வேலைகளையும் செய்து வருகின்றனர். இப்படிக் காரியங்களையெல்லாம் செய்துவிட்டு, நமது பிரதம மந்திரி அவர்கள் வரும்போது மட்டும் காக்காய் பிடித்துவிட்டு, அவருடைய கொள்கையை அவமதித்துவருகின்றனர். அவர் அப்படித்தான் பேசிக்கொண்டு இருப்பார், இங்கு நடப்பது எல்லாம் அவருக்குத் தெரியாது, நீங்கள் செய்வதைச் செய்து கொண்டிருங்கள் என்று சொல்வதில் எந்தப் பிரயோஜனமும் இல்லை. கன்ட்ராக்டையும், பஸ் பர்மிட்டையும் வைத்துத்தான் நாங்கள் கட்சி நடத்துவோம் என்று சொன்னால் எங்களுக்கு எவ்விதமான ஆட்சேபணையும் இல்லை. சூபரின்டென்டென்டு என்ஜினியர் மகாநாடு ஒன்று கூட்டி, தொழிலாளர்களிடையே உள்ள தகராறைத் தீர்க்கலாம். அதைவிட்டு அனாவசியமாக லேபர் கோர்ட்டுக்கு எதற்கெடுத்தாலும் போவானேன்? இந்த இலாகாவில் கன்ட்ராக்டினால் எவ்வளவு பணம் செலவாகிறது என்பதற்கு என்னிடம் புள்ளிவிவரங்கள் இருக்கின்றன. நேரம் இப்போது அனுமதிக்காத காரணத்தினால், அதை இப்போது கூற விரும்பவில்லை. அனாவசியமாக இன்னும் சில பொருள்கள் அதிக விலை கொடுத்து வாங்கப்படுகிறது. இவைகளை எல்லாம் அமைச்சர் அவர்கள் சற்று ஆராய்ந்து பார்க்கவேண்டும். ஆனால் இதையெல்லாம் இப்போது யார் ஆராய இருக்கிறார்கள்? இதைத் தவிர, இலாகாவில் சில காங்கிரஸ்காரர்களுக்கு பயந்து அவர்கள் அதிகமான அளவுக்கு டெண்டர் குறிப்பிட்டாலும் அவர்களுக்குத்தான் டெண்டர்கள் கொடுக்கப்படுகிறது. ஏன் குறைந்த ரேட்டுக்காரர்களுக்கு டெண்டர்கள் கொடுக்கப்படவில்லை என்பதை பரிசீலனை செய்து பார்க்கவேண்டும். இதைப்போல் எத்தனையோத் துறைகளில் எவ்வளவோ பணம் அனாவசியமாக செலவழிக்கப்படுகின்றது. இதற்கெல்லாம் உதவியாக இருக்க இந்த சீஃப் எஞ்சினியர்தான் இருக்கவேண்டுமென்பது நோக்கமாக இருந்தால் அவர்களுடைய ஆட்சியே நடக்கட்டும்.

ஆனால் அதே நேரத்தில் தேசத்தின் முன்னேற்றத்திற்காக நாம் விவசாய அபிவிருத்தி செய்யவேண்டுமென்றும், தொழில் அபிவிருத்தி செய்யவேண்டுமென்றும் அமைச்சர் அவர்கள் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதை நான் மிகவும் பாராட்டுகிறேன். ஆகவே மின்சாரத்தை அதிகப்படியான அளவிற்கு அபிவிருத்தி செய்து, உற்பத்தியைப் பெருக்குவதற்காக வேண்டுமானால் அதில் நிபுணர் என்று சொல்லக்கூடிய இந்த சீஃப் என்ஜினியர் அவர்களை கன்சல்டிங் என்ஜினியராக வேண்டுமானால் நியமித்துக்கொண்டு, அவர்களுடைய யோசனைகளை கேட்டுக்கொள்ளுங்கள். இம்மாதிரி

யான பிரச்னைகளில் அவர்களை தலையிடவேண்டாமென்று கூறிக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

THE HON. SRI V. RAMAIAH : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த விவாதத்தை ஆரம்பிக்கக்கூடிய காலத்திலே நாம் செய்திருக்கக்கூடிய பல முக்கியமான காரியங்களை நான் கொடுத்த அறிக்கையில் விவரமாகச் சொல்லி இருக்கிறேன். அதன்மீது பல அங்கத்தினர்கள் தங்களுடைய நல்ல கருத்துக்களையெல்லாம் சொல்லி இருக்கிறார்கள். ஏராளமான அங்கத்தினர்கள் இந்த விவாதத்தில் பங்கெடுத்துக்கொண்டு, நல்ல புது ஆலோசனைகளைச் சொன்னதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

இந்த மின்சார போர்டினுடைய நிதி நிலை அறிக்கையின்மீது நாம் விவாதம் நடத்தி, அதை நம்முடைய சட்டசபையினுடைய ஓட்டுக்கு விடுவது என்பது இல்லாமல் இருந்தாலும், இங்கு பேசப் பட்ட ஒவ்வொரு கருத்தும் நல்ல முறையிலே மின்சார போர்டின் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அதற்காக வேண்டிய நட வடிக்கைகளை எடுத்துக் கொள்வார்கள் என்று இந்த வருஷமும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சென்ற வருஷம் இங்கே நடந்த விவாதத்திலே எழுப்பப்பட்ட பல பிரச்னைகளை, ஒவ்வொரு அங்கத்தினரும் கூறிய ஆலோசனைகளை மின்சார போர்டின் குழு பரிசீலனை செய்து, அதற்காக வேண்டிய பல நல்ல முடிவுகளை யெல்லாம் எடுத்து, அதனுடைய விவரத்தை என்னிடத்திலே கொடுத்திருக்கிறார்கள். இதை எந்த அங்கத்தினர் பார்க்க விரும் பினாலும், அதை நான் அவர்களுக்குக் காட்டுவதற்குத் தயாராக இருக்கிறேன். ஆகவே இங்கு குறிப்பிட்டிருக்கக்கூடிய எல்லாக் கருத்துக்களையும் நல்லவிதமாக கூர்ந்து கவனித்து, மேலும் இந்த போர்டின் வேலைகளை நல்லமுறையிலே நடத்திச் சென்று, மக்கள் அதிக லாபம் பெறக்கூடிய முறையில் செயல்படுவதற்கான முயற்சி கள் எடுத்துக் கொள்ளப்படும் என்பதைச் சொல்லிக்கொண்டு, இந்த விவாதத்திலே எழுப்பப்பட்டுள்ள பிரச்னைகளுக்குப் பொது வாக என்னுடைய பதிலை சொல்லிவிட்டு, அதற்கு மேலே அவகாச மிருந்தால் ஒவ்வொரு அங்கத்தினர் எழுப்பிய பிரச்னைகளுக்கும் நான் முடிந்த வரையிலே பதில் சொல்ல விரும்புகிறேன்.

இந்த இரண்டு நாள் விவாதத்திலே மின்சார இலாகா செய்து கொண்டிருக்கக் கூடிய வேலையைப் பற்றியும், செய்யவேண்டு மென்று நாம் நினைக்கக்கூடிய திட்டங்களைப் பற்றியும் வற்புறுத்தி சொல்லி வந்திருக்கிறோம். குறிப்பாக, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலம் முடிந்து, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் வருஷத்தில் இருக்கக்கூடிய இந்த நேரத்தில், இந்த மாகாணத் தைப் பொறுத்த அளவில் நாம் எல்லோரும் நம்முடைய திட்டத் தின் நிலையை முதலில் நன்கு புரிந்து கொள்ளவேண்டும். ஏனென் றால், மின்சார இலாகாவின்—மின்சார போர்டின்—திட்டங்கள்

நல்ல முறையிலே அமைந்தால்தான் நாம் மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்திலே விரும்பக் கூடிய அளவுக்கு திருப்தியாக காரியத்தைச் செய்து முடிக்க முடியும் என்பது என்னுடைய கருத்து. ஆகவே இதிலே எல்லா மக்களும் அதிகமாக அக்கறை காட்ட வேண்டுமென்பது எனது ஆசை. அதன் காரணமாகத்தான் நமது மாகாணத்திலே கடந்த 10, 12 வருஷ காலமாக நாம் எடுத்துக் கொண்டிருக்கக் கூடிய பல்வேறு முயற்சிகளை ஒரே மொத்தமாக ஒப்பிட்டுப் பார்க்கக்கூடிய வகையிலே இந்த அறிக்கையை தயாரித்திருக்கிறேன். இந்த அறிக்கையைப் படித்துப் பார்க்கும்போது, நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புவது என்னவென்றுல், ஏதோ செய்த வேலைகளை மட்டும் பாராட்டுகின்ற முறையில், அப்படிச் செய்தால் மட்டும் போதும் என்ற நினைப்பிலே, இந்த அறிக்கையை நான் தயார் செய்யவே இல்லை. இந்த அறிக்கையை நான் தயார் செய்யும்போது, இப்போது ஏற்பட்டிருக்கக் கூடிய வளர்ச்சி, எவ்வளவு வேகமாக முன்னேறிக்கொண்டிருக்கிறோம், அதற்காக எடுத்துக் கொள்ளப்படும் பல்வேறு முயற்சிகள் ஆகியவைகளைத்தான் நான் இந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறேன். அப்படிப் பார்க்கும் போது நமக்கு முன்னிருக்கக் கூடிய பிரச்னை எப்படி இருக்கிறது என்று பார்த்தால், மூன்றுவது திட்டம் முடியக்கூடிய நேரத்திலே நமது மாகாணத்திலே தொழில்துறை வளர்ச்சி நல்ல முறையில் அபிவிருத்தி அடைந்து, அதற்குப் போதுமான மின்சார உற்பத்தியை நம்மால் அளிக்க முடியுமா என்பது சற்று சிந்தனை செய்து பார்க்கக் கூடிய விஷயமாகவே இருக்கிறது. மின்சாரப் பற்றுக்குறை ஓரளவுக்கு ஏற்படுமே என்று அஞ்சத்தான் வேண்டியிருக்கிறது. இப்போது அறிக்கையில் கொடுத்துள்ளபடி, அதிலுள்ள புள்ளிவிவரத்தின்படி 5 அல்லது 6 லட்சம் கிலோவாட் பற்றுக்குறை ஏற்படலாம் என்று நாம் நினைக்க வேண்டியிருக்கிறது. ஆனால் அதனால் நாம் பீதி அடையத் தேவையில்லை. இடைக்காலத்திலே அதாவது மீதமுள்ள 4 வருஷத்திலே இந்தப் பற்றுக்குறையை நீக்குவதற்கான எல்லா முயற்சிகளையும் நாம் எடுத்தாக வேண்டும். அதற்கு எத்தனையோ புதுத் திட்டங்களை நாம் செயல்படுத்தி நடத்த முடியும். அதற்குத் தகுந்த முறையிலேதான் நாம் எல்லோரும் முயற்சிகள் எடுத்துக்கொண்டு இருக்கிறோம் ; எடுத்துக் கொண்டும் வருகிறோம். அந்த முயற்சிக்குத் தகுந்த முறையிலேதான், மூன்றுவது ஐந்தாணடுத் திட்டம் உருவாகி இருக்கும் இந்த நேரத்திலே மின்சார உற்பத்திக்கு இந்த அரசாங்கம் எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறது என்று பார்த்தால், அது ஓரளவுக்கு நாம் திருப்தி அடையக் கூடிய அளவில்தான் இருக்கிறது. ஆனல் என்னைப் பொறுத்த அளவிலே நான் இன்னும் அதிகமாக மின்சார உற்பத்திக்கான வழிகளிலே கவனம் செலுத்தியாக வேண்டும். இதிலே மின்சார போட்டினுடைய திட்டம் என்ன, அந்தத் திட்டத்தினல் எவ்வளவு மின்சாரம் பெற முடிகிறது, வேறு எந்த வழிகளில் மின்சாரத்தை அதிகப்படியாக உற்பத்தி செய்ய முடியும்

[Sri V. Ramaiah] [19th August 1961

என்பவைகளில் அதிக கவனம் செலுத்தியாக வேண்டும். அப்போதுதான் மூன்றாவது திட்ட இறுதியில் ஏற்படக்கூடிய நெருக்கடியை சமாளிக்க முடியும். இதைவிட்டு, இது ஒரு சாதாரணப் பிரச்னை தானே, இதற்கு இவ்வளவு முக்கியமான இடம் கொடுக்க வேண்டுமா என்றெல்லாம் ஒரு சிலர் கருதலாம். குறிப்பாக நேற்றையதினம் ஆரம்ப உரையாக நான் சில வார்த்தைகள் சொல்லி முடிக்கக்கூடிய நேரத்தில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் வெற்றிகரமாக முடிவதற்கு நாம் கவனம் செலுத்த வேண்டும் என்று சொன்னபொழுது, திராவிட முன்னேற்றக் கழக உபதலைவர் கனம் அனபழகன் அவர்களும், அவர்கள் பக்கத்தில் இருந்த கனம் கருணாநிதி அவர்களும் 'ஓ, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் என்று மறதியாக சொல்லிவிட்டாரோ' என்று சந்தேகப்பட்டார்கள். நான் ஒன்றும் மறதியாகச் சொல்லவில்லை. ஏனென்றால், நாம் தொடர்ந்து சொல்லிக்கொண்டிருப்பது போல, மூன்றாவது ஐந்தாண்டுத திட்டம் பெரிய அளவுக்கு நமது மின்சார உற்பத்தியைத்தான் அதிகமாகத் தாங்கி நிற்கிறது. இதற்குத் தகுந்த முறையில் நாம் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம். இந்தப் பெரிய பொறுப்பை இப்பொழுது அரசாங்கம் மட்டும் ஏற்றுக்கொள்ளவில்லை. நமது மாநிலத்திலுள்ள தொழில் நடத்தக்கூடியவர்கள், விவசாயிகள், கிராமவாசிகள், அத்தனை பேருமே இதை நல்ல முறையில் சிந்தனை செய்து பார்க்கத் தொடங்கி இருக்கிறார்கள். அதோடு இல்லாமல் இந்தப் பெரிய பிரச்னை எழுவது நம்முடைய மாநில எல்லையோடு நின்றுவிடாமல், குறிப்பாக மத்திய அரசாங்கம் இதிலே அதிக தீவிர கவனம் செலுத்தத் தொடங்கியிருக்கிறது. இந்த நிலையை பார்க்கும்பொழுது இதை வளர்த்த முறையை பார்த்தோமானால், எனக்கு ஓரளவுக்கு சந்தோஷம்.

ஒரு காலத்திலே மின்சார இலாகாவில் எந்த ஒரு திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்றாலும், அன்றைக்கு இருந்த பிரதம என்ஜினியர் அல்லது அவருக்கு கீழே வேலை பார்த்த பல என்ஜினியர்களுடைய சொந்தமான பொறுப்பாக இருந்தது. அவர்கள் எந்த ஒரு திட்டத்தை உருவாக்கினாலும், அது லாபகரமான திட்டமாக இருக்கவேண்டும். அன்றைக்கு இருந்த நினைப்பு எப்படி இருந்தது என்று பார்த்தால், என்ஜினியர்கள் மட்டும் அந்தத் திட்டங்களை அமைப்பதில் ஈடுபட்டு இருந்ததன் காரணமாக, அன்றைக்கு மின்சாரத்தின் தேவை 10 வருஷங்களுக்கு ஒரு முறை இரட்டிப்பாகும் என்ற ஒரு நினைப்பு இருந்தது. அந்த நினைப்பு அடிப்படையில் பார்த்தோமானால் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தை உருவாக்கும்பொழுது அப்பொழுது இருந்த நிபுணர்களும் மற்றவர்களும் திட்ட காலத்தில் நிறைவேற்றக்கூடிய பல்வேறு திட்டங்களும் உபரியாகப் போய்விடுமோ என்றுகூட நினைத்தார்கள். அதே நினைப்பு அடிப்படையிலே இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பித்தபோதும் அந்த நிபுணர்கள் இருந்தனர். ஆனால், இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் நமது நிபுணர்

19th August 1961] [Sri V. Ramaiah]

களுடைய முயற்சி காரணமாகவும், தொழில் துறையிலே அக்கரை கொண்டவர்கள் காரணமாகவும், அதோடு அல்லாமல் மின்சாரம் அதிகமாக உபயோகிக்கக்கூடிய விவசாயிகளுடைய முயற்சியின் காரணமாகவும், சிறு தொழில்களில் ஏற்பட்டிருக்கக்கூடிய வளர்ச்சியின் காரணமாகவும் இன்றைக்கு ஒரு புது நினைப்பையே உருவாக்கியிருக்கிறோம். மின்சார உற்பத்தியை பொறுத்தவரையிலே, அது சம்பந்தமாக திட்டங்களை உருவாக்கக் கூடிய பொறுப்பை வெறுமனே நிபுணர்கள் கையில் மட்டும் விட்டு விடக்கூடாது. அதை இணைக்கப்பட்ட ஒரு திட்டமாக ஏற்றுக் கொள்ளவேண்டும் என்ற முறையிலே தொழில் இலாகாவைச் சேர்ந்தவர்கள், விவசாய இலாகாவைச் சேர்ந்தவர்கள், இன்னும் அபிவிருத்தி இலாகாவைச் சேர்ந்தவர்கள் ஆகியோர்களுடைய திட்டங்களையும் மின்சார உற்பத்தி அல்லது விஸ்தரிப்பு சம்பந்தமான திட்டங்களையும் ஒன்றாக இணைத்துப் பார்க்கும்பொழுதுதான் இந்த மாநிலத்திலே இன்னும் எவ்வளவு அதிகமாக மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும் என்று ஆராயக்கூடிய நிலையை ஏற்படுத்தியிருக்கிறோம். அந்த முறையில் பார்த்தோமானால், டாக்டர் லோகநாதன் கமிட்டி அமைப்பதற்கு முன்பு, அவர்கள் இந்தப் பிரச்னையை ஏற்றுக்கொள்ளுவதற்கு முன்புகூட, சென்னை ராஜ்யத்தைப் பொறுத்தவரையிலே பல்வேறு இலாகாவினைச் சேர்ந்தவர்கள்கூடி ஆராய்ந்து பார்த்தபொழுதுதான் நமது மின்சார பற்றுக்குறை எவ்வளவு இருக்கும் என்று ஊகிக்க முடிந்தது—தெரிந்துகொள்ள முடிந்தது. அந்த அடிப்படையில் நமது மாநிலத்தில் இன்னும் எவ்வளவு மின்சார உற்பத்தியை அதிகப்படுத்தியாக வேண்டும் என்று பார்த்தால், மின்சார உற்பத்தியை அதிகப் படுத்துவதற்கு நமக்கு இருக்கக்கூடிய வசதிகளை பார்த் தோமானால், நீர் மின்சார உற்பத்தி தவிர மற்ற சாதனங்கள் நமக்கு மிகக் குறைவாக இருக்கிறது. அதுவும் குறிப்பாக நெய் வேலி திட்டம் ஆரம்பம் ஆகும் வரைக்கும், மின்சார உற்பத்திக் காக அமைய வேண்டிய நமது திட்டங்கள் பூராவும் நீர் மின்சார திட்டமாக இருக்கவேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. நிலக்கரி இங்கு வெகு தூரத்திலிருந்து வரவேண்டிய காரணத்தினால் மின்சார உற்பத்தி செய்வதாயிருந்தால் எவ்வளவு கஷ்டம், அது எப்படி லாபம் இல்லாமல் போய்விடும் என்ற நிலையை யெல்லாம் இந்த அறிக்கையிலே கொடுத்திருக்கிறேன். நெய்வேலித் திட்டம் உருவாகுமுன் நமக்கு இருந்த ஒரே வழி நீர் மின்சார நிலையங்களைத்தான் பெருக்க முடியும் என்று நினைத்தோம். நிரந்தரமாக வருஷம் பூராவும் அந்தத் திட்டங்களிலிருந்து மின்சார உற்பத்தி செய்ய முடியும் என்றால் நமக்கு அதிக லாபமாக இருக்கும். ஆனால், இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில் நிலைமை எப்படி இருக்கிறது என்றால், நாம் தொடர்ந்து வருஷம் பூராவும் 365 தினங்களும் அந்தத் திட்டங்களுடைய முழு அளவிற்கு மின்சாரம் உற்பத்தி செய்ய முடியுமா என்று பார்த்தால், அந்த நிலை இல்லாததை நாம்

[Sri V. Ramaiah] [19th August 1961

கண்கூடாக பார்த்துக்கொண்டிருக்கிறோம். காரணம், நமது திட்டங்கள் அமைக்கப்பட்டிருக்கக்கூடிய இடங்களில் எல்லாம் பருவ மழையைப் பொறுத்து நமக்கு மின்சாரம் கிடைக்கக்கூடிய இடமாக இருக்கிறது. எப்பொழுது பருவ மழை குறைந்து விடுகிறதோ, அப்பொழுது அந்தத் திட்டங்கள் செயல்படாமல் போய்விடுகிறது. இதில் இருக்கக்கூடிய அதிகமான வித்தியாசங்கள் 5 வருஷம், 6 வருஷங்களுக்கு முன்பு நமக்கு தெரியாமல் இருந்திருக்கலாம். ஏனென்றால் அப்பொழுதெல்லாம் அதிகமான தொழில் வளர்ச்சி இல்லை, பெரிய தொழில்கள் இல்லை, அதிகமாக மின்சார சக்திக்கு தேவை இல்லை. அன்றைக்கு இருந்த சூழ் நிலையில் மேட்டூர் திட்டமும் பாபநாசம் திட்டமும் அன்றைக்கு இருந்த தேவையை நிரந்தரமாக பூர்த்தி செய்யக்கூடிய நிலைமையில் இருந்திருக்கலாம். ஆனால், கடந்த 5 வருஷ காலமாக மின்சாரத் தேவை அதிகமாக வளரக்கூடிய காலத்தில் பற்றுக்குறை நமது கண்ணுக்கு அதிகமாக தெரிய வருகிறது. அதனால் சில பெரிய தொழிற்சாலைகள் சில வாரங்கள் அல்லது சில தினங்களுக்கு செயல்படாமலே போய்விடக்கூடிய கஷ்டம் ஏற்படுகிறது. ஆகையால் நாம் அதிகமாக நீர் மின்சார நிலையங்களை உண்டுபண்ணி அந்த சக்தியை பயன்படுத்தினால் போதுமா என்று பார்த்தால் அதனால் ஏற்படக்கூடிய சங்கடங்களையும் இந்த அறிக்கையில் சொல்லியிருக்கிறேன். இன்னும் பல அறிக்கைகளிலும் இதை விவரமாக எடுத்துக் காட்டியிருக்கிறோம்.

இன்றைக்கு நம் முன்பு இருக்கக்கூடிய பிரச்னை என்னவென்றால், நீர் மின்சார நிலையங்களில் உருவாக்கக்கூடிய சக்தியையும் வைத்துக்கொண்டு மற்ற வழிகளிலும் மின்சார சக்தியை உண்டுபண்ணி நிரந்தரமாக தொழிலுக்கு மின்சாரம் கிடைக்கக்கூடிய ஒரு சூழ் நிலையை உண்டாக்க வேண்டும். அந்த முறையில் பார்க்கும் பொழுது நாம் புது புது முறைகளை ஆராய்ந்து பார்க்கவேண்டும். நிலக்கரியை வெகு தூரத்திலிருந்து கொண்டு வருவது நமது மாநிலத்திற்கு எவ்வளவு கஷ்டமாக இருக்கிறது என்று பார்க்கும் பொழுது, நமது மாநிலத்தில் அணு மின்சார நிலையத்தை ஏற்படுத்தி மின்சார உற்பத்தியை விஸ்தரித்தால், நமக்கு இருக்கக்கூடிய தேவையை பூர்த்தி செய்ய முடியும் என்ற கருத்தை கடந்த 3 வருஷங்களாக நாம் ஆராய்ந்துகொண்டு வருகிறோம், நாம் வலியுறுத்திச் சொல்லிக்கொண்டு வருகிறோம். ஒரு சிலர் அணு மின்சார நிலையம் வேண்டும் என்று கேட்ட உடனேயே அது வரவில்லையே என்று நினைக்கிறார்கள். நமது கோரிக்கையை மத்திய அரசாங்கம் ஏதோ புறக்கணித்துவிட்டதோ என்றுகூட நினைக்கிறார்கள். ஆனால், நிலைமை எப்படி இருக்கிறது என்று பார்த்தால், அணு சக்தியிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்வது என்பது இன்றைக்கு மிக முன்னேற்றம் அடைந்துள்ள தேசங்களில்கூட ஆராய்ச்சி கட்டத்தில்தான் இருக்கிறது. அதுபற்றி நிரந்தரமாக யாரும் ஒரு முடிவுக்கு வரவில்லை. அதனால் ஏற்படக்கூடிய உற்பத்திச் செலவை யாருமே இன்னும் திட்டவட்டமாக சொல்லமுடியாத கட்டத்தில்தான் இருக்கிறார்கள். இதிலே

19th August 1961] [Sri V. Ramaiah]

இப்பொழுது முக்கியமான ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறோம். பெரிய தேசங்களைப் பார்த்தால், நாம் அடாமிக் பவர் சம்மந்தமாக அதிகத் தீவிர அக்கறை காட்டுவதில் மிகையொன்றும் இல்லை. இந்தியாவில் இன்றைக்கு வெகு முக்கியமான இடம் ஆராய்ச்சிக்குக் கொடுத்திருக்கிறோம். முடிவுகள் சாதகமாக இருக்கும் என்று டாக்டர் பாபா அவர்கள் வலியுறுத்திச் சொல்லிவருகிறார்கள். ஆகவே, அடாமிக் பவர் ஸ்டேஷன் சம்மந்தப்பட்ட வரை, "நாம் கேட்டும் கொடுக்கவில்லை, ஆகையால், நாம் வலியுறுத்திச் சொல்லவில்லை" என்று சொல்வதானது, பிரச்னையைப் புரிந்துகொள்ளவில்லை என்றுதான் அர்த்தம். ஒரு சிலர் நினைக்கிறார்கள், அடாமிக் பவர் ஸ்டேஷனை, ரஷ்யா தேசத்தைக் கேட்டால் அவர்கள் கொடுப்பார்கள் (ஸ்ரீ எம். கல்யாணசுந்தரம்: நான் சொல்லவில்லையே) நீங்கள் அப்படிச் சொல்லாவிட்டால், மற்றவர்கள் சொன்னார்கள். அமெரிக்கா தேசத்தைக் கேட்டால் அவர்கள் கொடுப்பார்களே, எவ்வளவு சுலபமாக இருக்கும், அதை அமைப்பதில் கஷ்டமே இருக்காதே என்று. உலக நாடுகளில் கானடா தேசம் ஒன்றுதான் ஆராய்ச்சிகளையும், அதன் முடிவுகளையும் தங்கு தடையில்லாமல் கொடுக்க முன்வந்தார்கள். அவர்கள் செய்திருக்கும் உதவி மிகப் பெரிது. அவர்கள் செய்த உதவியால் குந்தா மின்சார நிலையம் உருவாகியிருக்கிறது. இதையெல்லாம் காட்டிலும், அணுசக்தி ஆராய்ச்சிக்கு கானடா காட்டியிருக்கும் ஒரு பெரும் நல்ல எண்ணத்தை நாம் எப்பொழுதுமே மறக்க முடியாது. அவர்கள் அவ்வளவு நல்ல எண்ணத்தோடு, நல்ல நோக்கோடு, ட்ராம்பே ஆராய்ச்சித் திட்டத்தைப் பூர்த்தி செய்து கொடுத்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு இன்றைக்கு அணு மின்சார உற்பத்தி சம்மந்தமாக தொடர்ந்து மற்ற சூழ்நிலைகள் ஏற்பட்டு இருக்கின்றன. முதல் ஸ்டேஷனும், இரண்டாவது ஸ்டேஷனும் இப்பொழுது உருவாகத் தொடங்கி இருக்கிறது. அதன் வெற்றி மேலும் மேலும் அணு மின்சார நிலையங்களை உருவாக்க உதவியாக இருக்கும். அப்படிப்பட்ட முறையில் பார்த்தால், நாம் மேற்கொண்டிருக்கும் முயற்சிகள் நமக்கு லாபம் கொடுப்பதாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. அதே நேரத்தில், இன்னும் புது வழிகளையும் கண்டுபிடித்து மின்சார உற்பத்தியைப் பெருக்க வேண்டும்.

அனல் மின்சார சக்தியை உண்டாக்குவதில், பல கஷ்டங்கள் இருக்கின்றன. அன்னியச் செலாவணி ஒருபுறம் இருக்க, அதைக் காட்டிலும் பெரும் கஷ்டம் என்னவென்றால், எப்படி நிலக்கரியை குறைந்த விலைக்கு வாங்கி தேவைப்படும் இடத்திற்குக் கொண்டு வருவது என்பதுதான் முக்கியப் பிரச்சினை. நாம் அதை உணராமல் இல்லை. நிலக்கரியைப் பொருத்த வரையில், மற்ற நாட்டுக்குத் தேவையான பல பொருள்களுக்கு "பூல் ப்ரைஸ்" என்று வைத்திருக்கிறோமே, அதே போல, இதற்கும் வைக்கவேண்டும். அதற்கான ஏற்பாடுகள் செய்தாக வேண்டும் என்று எண்ணுகிறோம். அந்தச் சூழ்நிலை எற்படாவிட்டால், வேறு வகைகளில் மின்சாரம் கிடைக்கச் செய்யவேண்டும். அதையும் ஆராய்ந்துக்

[Sri V. Ramaiah] [19th August 1961

கொண்டிருக்கிறோம். இன்றைக்கு ஆறு லட்சம் கிலோ வாட்ஸ் பற்றாக்குறை என்று சொல்லிவிட்டு, என் வேலை தீர்ந்தது என்று சொல்லிவிட முடியாது. அதைப் பூர்த்தி செய்யும் வழிகளைக் கண்டு பிடிக்கும் சூழ்நிலையையும் ஏற்படுத்தியாக வேண்டும். இதை யெல்லாம் மத்திய சர்க்காரும், ப்ளானிங் கமிஷனும் இன்னும் சென்ட்ரல் வாடர் அண்ட் பவர் கமிஷனும் உணர்ந்துதான் இருக்கிறார்கள்.

குறிப்பாக பக்கத்து இராச்சியங்களில் இயற்கை வசதிகள் அதிக மாக இருக்கின்றன. இதெல்லாம் பாசனத்திற்கும் மின்சார உற்பத்திக்கும் அதிகமாகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்று நாம் கருதுவது போலவே, அந்த நினைப்பு அடிப்படையிலேயே மத்திய சர்க்காரும் ஆராய்ந்து பார்க்க முன்வந்திருக்கிறார்கள். ஆகையால், மூன்றாவது திட்ட காலத்தில் ஏற்படும் பற்றாக் குறையைப் போக்க நாம் மட்டும் அக்கரை கொண்டு இருக்கவில்லை; மத்திய சர்க்காரும், ப்ளானிங் கமிஷனும் உணர்ந்திருக்கிறார்கள். ஆகையால் ஏதேனும் ஒரு வழியில், தேவையான மின்சாரம் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. பலர் கருதுகிறார்கள், மூன்றாவது அடாமிக் பவர் ஸ்டேஷன் வைக்க இங்கே இடம் இல்லையா என்று. ஆரம்பத்தில் நாம் சொன்னதுபோல, அடாமிக் பவர் ஜெனரேஷன் நமக்கு லாபகரமாக இருந்தால், அப்படி ஆராய்ச்சிகள் மூலம் பலன் கிடைத்தால், மூன்றாவது திட்டத்தில் அதைச் சேர்க்க என்ன கஷ்டம் என்று புரியவில்லை. டாக்டர் பாபா அவர்களின் ஆராய்ச்சியின் பயனாக அடுத்த கட்டத்திற்குப் போனால் லாபம் என்று தெரிந்தால அதை மேற்கொள்வார்கள். பக்கத்தில் இருக்கும் இராச்சியங்களில் அதிகமாக இயற்கை வசதிகள் இருப்பதால், அங்கே இருக்கும் குன்றுகளிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்வது பற்றி ஆராய்ச்சிகளை மத்திய சர்க்கார் மேற்கொண்டிருக்கிறார்கள். அனல் மின்சார உற்பத்திக்கும், பூல் ப்ரைஸுக்கும் முயற்சிகள் செய்து வருகிறோம்.

SRI K. ANBAZHAGAN : அமைச்சரவர்கள் சொன்னார்கள் அணுசக்தி உலைக் கூடம் அமைப்பது மின்சார உற்பத்திக்கு சாதக மாக இருந்தால் அதை ஏற்றுக்கொள்வார்கள் என்று. ஏற்கனவே நம் மாநிலத்தில் நடந்த டெக்னோ எகனமிக் சர்வேப்படி, அந்த நூலில் செலவுபற்றிக் குறிப்பிடும்போது, "The cost of nuclear power has been estimated by the Atomic Energy Commission at 7 annas" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைவிட கோலிலிருந்து கிடைக்கும் மின்சார சக்தி 1·2 அணாக்கள் என்றும், லிக்னைட்டிலிருந்து கிடைப்பது 0·6 அணா என்றும் புள்ளி விவரங்கள் கொடுத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் பார்க்கும்போது, நம் மாநிலத்திற்கு முதல் உரிமை இருக்கிறது, அணுசக்தி உலைக் கூடத்திற்கு. செலவு இனத்தை மின்சாரத்துறையில் பார்க்கும்போது முன்னால் ரூ. 138 கோடி என்றிருந்தது, பிறகு அது ரூ. 133·32 கோடி என்றிருந்தது. அதற்கு பின்னால் சென்னை

10th August 1961] [Sri K. Anbazhagan]

மூன்றாவது திட்ட நகலில் ரூ 118 கோடி என்றிருந்து இன்றைக்கு ரூ. 101 கோடி என்று குறைந்திருக்கிறது. அதே போல நெய்வேலி மின்சார திட்டத்திலும், இங்கே 10-வது பக்கத்திலும் 11-வது பக்கத்திலும் . . .

THE HON. SRI V. RAMAIAH: வருகிறேன், வருகிறேன். இப்பொழுது தானே ஆரம்பித்திருக்கிறேன். கனம் அன்பழகன் சந்தேகங்களைத் தீர்க்கிறேன். மின்சாரத் தேவை என்று சொல்லும் போது, அதை எப்படி நிர்ணயம் செய்தார்கள், செய்கிறோம் என்ற விவரங்களைப் பார்க்க வேண்டும். இன்றைக்கு மின்சாரத் தேவை என்று சொல்லும்போது, அது மின்சார இலாகா மட்டும் நிர்ணயம் செய்யக் கூடியது இல்லை. பொதுவாக முன்னேற்றத்திற்குத் தகுந்தாற்போல, மின்சார உற்பத்தியும் பெருக வேண்டும் என்று சொல்லுகிறோம்.

நமது நாடு பூராவையும் ஒன்றாக எடுத்துக்கொண்டு எந்த எந்தப் பகுதியிலே அணு மின்சார நிலையம் அமைக்கவேண்டுமென்று பார்க்கும்போது, இந்தப் பகுதியிலே இருக்கும் தேவையை நம்மை விடப் பன்மடங்கு அதிகமாக அங்குள்ளவர்கள் உணர்ந்து எடுத்துக் காட்டுகிறார்கள். இதில் எந்த விதமான பாரபட்சமும் கிடையாது. நமக்குத் தேவையான மின்சார சக்தியை உற்பத்திச் செய்து கொடுக்க அவர்கள் அதிக முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். நமக்கு அடாமிக் பவர் பிளாண்ட் வரும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இதில் அவசரப்படுவதற்குக் காரணம் ஒன்றுமே இல்லை. 1 p.m.

'டெக்னோ-இகனாமிக் ஸர்வே அப் மெட்ராஸ்' என்ற அந்த அறிக்கையில் அணு மின்சார சக்தியை உற்பத்தி செய்வதற்கு ஏற்படக்கூடிய செலவையும், நிலக்கரியிலிருந்து மின்சார சக்தியை எடுப்பதற்கு ஏற்படக்கூடிய செலவையும் ஒப்பிட்டு கனம் அங்கத்தினர். திரு. அன்பழகன் அவர்கள் சொன்னார்கள். அடாமிக் பவர் ப்ளாண்ட் ஏற்படுத்தும் விஷயம் ஆராய்ச்சிக் கட்டத்திலே, நம் நாட்டில் மட்டுமல்ல, உலகத்திலேயே இருந்துகொண்டிருக்கிறது. திட்டவட்டமாக, எந்த அளவுக்கு அதனுடைய வெற்றி இருக்கும் என்று யாரும் உறுதியான முடிவுக்கு வரவில்லை. ஆனால், அனல் மின்சார நிலையத்தைப் பொறுத்த வரையில், ஐம்பது, அறுபது வருஷ ஆராய்ச்சியின் காரணமாக, உற்பத்திச் செலவு யூனிட் ஒன்றுக்கு இவ்வளவுதான் ஆகும் என்று திட்டவட்டமாகச் சொல்ல முடியும். அணுசக்தி மின்சார நிலையத்தைப் பொறுத்தவரையில் அந்த நிலை இன்னும் ஏற்படவில்லை. பல விதமான அபிப்பிராயங்கள் இருந்துகொண்டிருக்கின்றன. ஆனால், அடாமிக் கமிஷன் செய்து வருகிற ஆராய்ச்சியின் தன்மை எப்படியிருக்கிறதென்றால், இதைக் குறைந்த விலைக்குக் கொடுத்துவிட முடியும் என்ற நம்பிக்கையை அளித்துக்கொண்டிருக்கிறது. அதனால், மூன்றாவது, நான்காவது ஐந்தாண்டுக் திட்டத்தில் இதுபற்றித் தொடர்ந்து ஆராய்ந்து செய்ய வேண்டுமென்ற ஆர்வம் அதிகமாக ஏற்பட்டிருக்-

கிறது. அதன் காரணமாக, அணுச் சக்தி மூலம் மின்சாரம் எடுக்கக்கூடிய வாய்ப்பு நமக்கு ஏற்படும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

இந்த மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே எப்படி நம்முடைய மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும் என்பதைப்பற்றி இந்த அறிக்கையிலே விவரமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நமக்கு மேலும் மேலும் சக்தி ஏற்பட்டாக வேண்டும். இப்பொழுதிருக்கும் நிலையில், நெய்வேலித் திட்டம் நமக்குப் பெரிய உதவியாக இருக்கிறது. அதனுடைய நிலையை நான் சொல்லும்போது, கனம் அங்கத்தினர் திரு. அன்பழகன் அவர்களுக்குச் சந்தேகம் வருகிறது. 10-வது பக்கத்தையும், 16-வது பக்கத்தையும் பார்த்துக் கொண்டு, அவைகளில் குறிப்பிட்டிருக்கும் புள்ளி விவரங்கள் சரியில்லையோ என்ற சந்தேகம் அவருக்கு வருகிறது. சரியாகப் பார்த்தால் முரண்பாடு எதுவுமில்லை என்பது விளங்கும். பத்தாவது பக்கத்தில் சொல்லியிருக்கும் விவரங்கள் நெய்வேலியின் தேவையைப் பூர்த்தி செய்துகொண்ட பின்னர் 2·16 லட்சம் கிலோ வாட் 'கிரிட்' டுக்குக் கிடைக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறோம். 2.16 லட்சம் கிலோ வாட்டோடு நின்றுவிடாமல் விஸ்தரிப்புத் திட்டத்திலே 1·50 லட்சம் கிலோவாட் சக்தியுள்ள திட்டம் இணைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். அதிலேயும் அவர்களுடைய தேவை பூர்த்தியானதற்குப் பிறகு 67,000 கிலோவாட் மீதி நமக்குக் கிடைக்கும். (ஸ்ரீ கே. அன்பழகன் எழுந்தார்) சந்தேகம் ஏதாவது இருந்தால் பிறகு கேளுங்கள். மற்ற கனம் அங்கத்தினர்கள் எழுப்பிய பிரச்னைகளுக்கும் பதில் சொல்ல வேண்டும் அல்லவா?

இந்த விவாதத்தில் முக்கியமாக எழுப்பப்பட்ட பிரச்னைகள் பல இருந்தாலும், நேரம் இருக்கின்றபோதே, கனம் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் எழுப்பிய பல பிரச்னைகள் அல்லது பல கருத்துக்கள் இவைகளுக்கு நான் பதில் சொல்வதைக் காட்டிலும், முக்கியமான ஒன்றுக்குப் பதில் சொல்கிறேன். பிரதம இன்ஜினியர் அவர்களைப் பொறுத்த மட்டில் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் காரசாரமாகப் பேசினர். அதற்கு பிரதம இன்ஜினீரை நான் 'டிபெண்டு' பண்ணி, அவரைப் பாதுகாக்கக்கூடிய முறையில் பதில் சொல்ல வேண்டிய அவசியம் கிடையாது. பாதுகாப்பதற்கு வேண்டிய அந்த அளவுக்குக் குற்றச்சாட்டு எதுவுமே இல்லை. கனம் அங்கத்தினர் சற்று ஆவேசமாகப் பேசினர் என்று சொல்லலாம். இருக்கக்கூடிய நிலையைக் கொஞ்சம் நிதானமாக, வெறி பிடிக்காத முறையில் புரிந்துகொள் வதற்கு முயற்சி எடுத்தால், அவர்கள் சொன்ன வார்த்தைகளுக்கு எந்தவிதமான ஆதாரமும் கிடையாது என்று நான் சொல்ல முடியும். அரசாங்கம், பிரதம இன்ஜினீருக்குப் பயந்துபோய் இருப்பதால், அவர் நினைப்பதையெல்லாம் செய்துகொண்டிருப்ப தாகச் சொன்னார்கள். அரசாங்கம் பிரதம இன்ஜினீருக்கு அதிக

19th August 1961] [Sri V. Ramaiah]

மாகப் பயந்து போய்விட்ட காரணத்தால், தொழிலாளருடைய நலனை அப்படியே கைவிட்டு விட்டோமோ என்ற சந்தேகம் அவருக்கு வந்தது. ஆனால். கடந்த நான்கு வருஷ காலமாக, இந்த இலாகா நேரடியாக என்னுடைய பார்வையில் கனம் அங்கத்தினர் நினைப்பதைப்போல் இல்லாவிட்டாலும், போர்டினுடைய வசம் இருந்தாலும், அதிலே நடக்கக்கூடிய ஒவ்வொரு காரியமும் எனக்கு நன்றாகத் தெரியும். தொழிலாளர்களுடைய நிலை எனக்குத் தெரியும். அவர்களுடைய பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு, அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு எடுத்துக் கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைப்பற்றிக் கனம் அங்கத்தினர் அவர்கள் எவ்வளவு தீவிரமாக பார்த்துக்கொண்டிருக்கிறார்களோ அதே தீவிரமாக நானும்தான் பார்த்துக்கொண்டிருக்கிறேன். தொழிலாளர்களுடைய பிரச்னையைத் தீர்க்கவேண்டும் என்பதிலே யாருக்கும் இரண்டு விதமான கருத்து கிடையாது. கனம் அங்கத்தினர் அவர்கள், அரசாங்கம் ஏதோ வெறுமனே பிரதம இன்ஜினீரை மட்டும் பாராட்டிவிட்டு, அவருடைய செயலை மட்டும் பாராட்டிவிட்டு நின்றுவிட்டதாகச் சொன்னார்கள். இந்த மாநிலத்தில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை வெற்றிகரமாக முடித்துக் கொடுப்பதற்கு பிரதம இன்ஜினீரைக் காட்டிலும் தொழிலாளர்கள் தான் அதிகமாகச் சேவை செய்திருக்கிறார்கள் என்று வலியுறுத்திச் சொன்னதைக் கேட்க ஆச்சரியமாக இருந்தது. தொழிலாளர்கள் செய்த சேவையை யாருமே மறுக்க வில்லை. தொழிலாளர்கள் இல்லாவிட்டால் ஒரு வேலையும் நடந்திருக்காது. அதற்குத் தேவையான மதிப்பு, மரியாதை அரசாங்கம் மட்டுமல்ல, மக்களே கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். நண்பர் திரு. அண்ணாமலை அவர்கள் நேற்றைய தினம் பிரசங்கம் செய்யும்போது, 'நான் பிரதம இன்ஜினீரையும், அவருக்குக் கீழிருக்கும் இன்ஜினீர்களையும் பாராட்டுவேன், அரசாங்கத்தைப் பாராட்ட மாட்டேன்' என்று திரும்பத் திரும்ப வலியுறுத்திச் சொன்னார்கள் பிரதம இன்ஜினீரைப் பாராட்டினாலே போதும், அவரைப் பாராட்டினால், தொழிலாளர்களுக்கும் அது போய்ச் சேரும். தொழிலாளர்களைப் பாராட்டினாலும், அது பிரதம இன்ஜினீரைப் போய்ச் சேரும். சட்டசபை அங்கத்தினர்கள், பொது மக்கள் எல்லோருமே தொழிலாளர்களுடைய மகத்தான சேவையை, அதிலும் குறிப்பாக, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் இவைகளில் கடமையுணர்ச்சியோடு செய்யக்கூடிய சேவையைப் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஏதோ அங்குமிங்கும் ஒரு சிலர் தங்களுடைய கடமையைச் சரியான முறையில் உணராமல் ஏதோ சில தவறுகள் செய்திருக்கலாம். கனம் அங்கத்தினர் கொடுத்த புள்ளி விவரப்படி ஆயிரம், இரண்டாயிரம் அல்லது, பல ஆயிரம் தொழிலாளர்கள் இந்தச் சேவையில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஒரு லட்சம், இரண்டு லட்சம் அல்ல, ஒரு கோடி, இரண்டு கோடி ரூபாய் அல்ல, வருஷமொன்றுக்கு கோடிக் கணக்கான ரூபாய்கள் மேலும் மேலும் செலவு செய்துகொண்டிருக்

கிறோம் என்ற விவரத்தை இந்த அறிக்கையிலிருந்து பார்க்கிறோம். இத்தனை கோடி ரூபாய் செலவு செய்தாலும், இவ்வளவு சுலபமாக, இவ்வளவு சுமுகமாக திட்டங்கள் நிறைவேறுவதற்குக் காரணம் எல்லா நிலையிலும், பிரதம இன்ஜினீரிலிருந்து சாதாரண சிறு ஊழியர் வரைக்கும் இருக்கும் ஊழியர்கள் ஒரு தேசபக்தி கொண்ட சேவையில் ஈடுபட்டது தான். அதுதான் இந்த அற்புதமான வளர்ச்சிக்குக் காரணம் என்பதை நாம் பார்க்கின்றோம். வெறுமனே ஆவேசப்பட்டு, ஏதோ ஒரு நினைப்பை மனதில் வைத்துக்கொண்டு, நல்ல உற்சாகமாக வேலை பார்க்கக்கூடிய, இந்த நாட்டிலேயே பெரும் மதிப்புக்கும், மரியாதைக்கும் பாத்திரமாக இருக்கக்கூடிய பிரதம இன்ஜினருடைய மனதைக் கெடுத்துவிட வேண்டாம், தளர்ச்சியடையச் செய்ய வேண்டாம் என்றுதான் கம்யூனிஸ்டுக் கட்சி அங்கத்தினரை நான் கேட்டுக்கொள்கின்றேன். அவரைப் பொறுத்தவரையில் அவர்கள் மீது தனிப்பட்ட முறையில் விருப்பு வெறுப்பு இல்லாமல் இருக்கலாம். பிரதம இன்ஜினீர் தம்முடைய கடமையை உணர்ந்து நல்ல சேவை செய்திருக்கிறார் என்பதை நான் பல சந்தர்ப்பங்களில் பார்த்திருக்கிறேன். அவர் மீது வைத்திருக்கும் நம்பிக்கை காரணமாக, அவரைப்பற்றி நான் விவரமாகச் சொல்லாவிட்டாலும் சுருக்கமாகக் கடைசி பக்கத்தில் சொல்லியிருக்கிறேன். இந்த மாநிலத்தின் பெரிய திட்டங்களை நிறைவேற்ற எத்தனையோ முயற்சிகளை எடுத்து, நல்ல முறையில் மற்றவர்களுடைய அனுபவத்தையும் ஆதரவையும் மேலும் மேலும் தேடிக்கொண்டிருக்கிறது அரசாங்கம். என்றாலும், இதற்கு முக்கிய காரணஸ்தர் மின்சார போர்டோ, அல்லது மின்சார இலாகாவைச் சேர்ந்த அமைச்சரோ, அல்லது அரசாங்கமோ என்று சொல்லிவிட முடியாது. அதையெல்லாம் விட, அந்த இலாகாவிலே செயல்படக்கூடிய பிரதம இன்ஜினீர், மற்ற இன்ஜினீர்கள், மற்ற ஊழியர்கள், திட்டப் பகுதியிலே வேலை செய்வதைப் பார்த்த கனடிய, ரஷ்ய நிபுணர்கள் நல்ல அபிப்பிராயங்கள் தெரிவித்துள்ளார்கள். கனடிய, ரஷ்ய நிபுணர்கள் திட்டப் பகுதிகளில் பார்த்த மகத்தான சேவையைக் கண்டு, நமது மாநிலத் திட்டங்களில் அவர்களுடைய நாடுகள் அதிகமாக ஈடுபட்டு, திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்ற ஒரு முடிவு எடுத்திருக்கிறார்கள். இதை யாரும் மறந்துவிடக் கூடாது. அந்த முறையிலே நம்முடைய இன்ஜினீர்களும் தொழிலாளர்களும் செயல்படும்போது, மாநிலத்தின் மீது அக்கறை கொண்டவர்கள், ஆர்வம் உள்ளவர்கள், மாநிலம் வளர்ச்சியடைந்தாகவேண்டுமென்று நினைக்கக்கூடியவர்கள், இன்றைக்கு ஏற்படக்கூடிய பெரும் மாறுதல்களைத் துரிதமாகச் செய்யவேண்டுமென்று நினைக்கக்கூடியவர்கள் எதையோ நினைத்துக்கொண்டு, இதற்குப் பாத்திரமாக இருக்கக்கூடியவர்கள் தளர்ச்சி அடைந்துவிடக்கூடிய முறையில் வார்த்தை சொல்லாமலிருந்தால் அதுவே மாநிலத்திற்கு நல்ல சேவை செய்ததாக இருக்கும். கனம் அங்கத்தினர் கல்யாணசுந்தரம் அவர்கள் ஆவேசமாகப் பேசினர். நாம் இங்கே பேசக்கூடிய பேச்சுக்களினால் உற்சாகமாக வேலை செய்யக்கூடிய

19th August 1961] [Sri V. Ramaiah]

அதிகாரிக்கு ஊக்கம் குன்றச் செய்துவிடக் கூடாது என்பது தான். மேலும் மேலும் பல நல்ல திட்டங்களை நிறைவேற்றித் தரக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தித் தரவேண்டும். அவர்கள் நினைப்பது போல எனக்கு பிரதம இன்ஜினீயர் மேல் மோகமோ, பக்தியோ கிடையாது. அதிலும் அவர்கள் மாமியார், மருமகள் கதையெல்லாம் சூசகமாகச் சொன்னார்கள். அப்படியொன்றும் இல்லை. உண்மையில் பிரதம இன்ஜினீயர் அவர்கள் திறம்பட வேலை செய்து வருகிறார்கள். அதை நாம் பாராட்டவேண்டும். எந்தத் திட்டமாக இருந்தால் என்ன, எப்போது முடிந்தால் என்ன என்று எண்ணிவிட்டால் இவர்கள் சொல்கிறபடி இருந்துவிடலாம். இதை புரட்சிக் கருத்துக்களை உடைய கம்யூனிஸ்டுக் கட்சி அங்கத்தினரே ஒப்புக்கொள்ளமாட்டார். நம்முடைய மிகப் பெரிய திட்டங்கள் எல்லாம் எப்படியேனும் வேகமாக முடிந்தாக வேண்டும். கனம் சந்தானம் அவர்கள் சொன்னார்கள் என்று நினைக்கிறேன், நம் நாட்டில் என்ன பத்து வருஷத்தில் பன்னிரண்டு யூனிட்டிலே இருந்து 120 யூனிட்டாகத்தானே உயர்ந்திருக்கிறது என்றார்கள். மற்ற நாடுகளில் இரண்டாயிரம், நாலாயிரம் என்று இருக்கலாம். அந்த அளவை எட்டிப் பிடிக்கத்தான் புதுப் புது திட்டங்களை மிக வேகமாக நிறைவேற்றி வைக்க வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். இந்த வேகம் தடைபட்டால் நாம் மிகவும் பின்தங்கி விடுவோம். நமது பிரதம இன்ஜினீயருடைய உற்சாகத்தை எந்த வகையிலும் அதுவும் குறிப்பாக வெறிபிடித்த பேச்சுக்களினால் குன்ற அடித்துவிட வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதனால் திரு அப்பாதுரை அவர்களுக்கு ஒன்றும் நஷ்டம் ஏற்பட்டுவிடப் போவதில்லை. அவர்களுடைய திறமையை, சக்தியை வெளிநாட்டு நிபுணர்கள் எல்லாம் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். கனடா தேசத்தினரும், ரஷ்யா தேசத்தினரும் அவரைப் பாராட்டி எல்லா வகையிலும் அவர்களுக்கு ஆதரவு அளிக்கிறார்கள். அவர் என்ன புதிதாகச் செய்துவிட்டார், முப்பது, நாற்பது வருஷங்களுக்கு முன்பு போட்ட திட்டங்கள்தானே என்று திரு. கல்யாணசுந்தரம் சொல்லலாம். முப்பது, நாற்பது வருஷங்களாக நாம் திட்டம் போட்டுக்கொண்டு தான் வந்தோம். ஆனால் இப்போதுதான் மிகவும் தீவிரமாக வேலை செய்கிறோம். வேறு எந்த மாநிலத்தைக் காட்டிலும் நம் மாநிலத்தில்தான் இரண்டாவது திட்ட காலத்தில் போடப்பட்ட திட்டத்தை நிறைவேற்றிவிட்டு, மூன்றாவது திட்ட காலத்தில் எடுத்துக்கொள்ளக்கூடிய வேலைகளையே இரண்டாவது திட்ட காலத்தில் எடுத்துக்கொண்டிருக்கிறோம். குந்தா மூன்றாவது திட்டம்; மூன்றாவது திட்ட காலத்தில் எடுத்துக்கொள்வதாகவே இருந்தது. கனடா தேச நிபுணர்களும், ப்ளானிங் கமிஷனைச் சேர்ந்தவர்களும், இன்னும் மத்திய சர்க்காருடைய நிபுணர்களும் நாம் செய்து முடித்திருக்கிற வேலைகளைப் பார்த்துவிட்டு பாராட்டியதோடு இந்தத் திட்டம் தொடர்ந்து செயல்பட வேண்டும் என்று நினைத்த காரணத்தினால் இரண்டாவது திட்ட காலத்திலேயே ஆரம்பித்துத் தொடர்ந்து நடத்துவதற்கு

அனுமதி அளித்துவிட்டார்கள். மேட்டூர் டன்னல் ஸ்கிமை எடுத்துக்கொண்டாலும்—திரு. கல்யாணசுந்தரத்திற்கு இது பிடிக்கும்—ரஷ்யா உதவி செய்ய முன்வந்திருக்கிற காரணத்தினல்—இரண்டாவது திட்ட கடைசி வருஷத்திலேயே ஆரம்பித்துவிட்டோம். இதற்கெல்லாம் நமது பிரதம இன்ஜினியருடைய திறமையை, சேவையைப் பாராட்ட வேண்டும். இப்படி பல அற்புதமான வேலைகளைச் செய்திருக்கிறார்கள் என்று நாம் பாராட்டிச் சொல்லாவிட்டாலும் அவர்கள் உற்சாகம் குன்றக்கூடிய வகையில் எதையும் சொல்வது உசிதமாகாது. திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் இப்படித்தான் சொல்லவேண்டும், அப்படித்தான் சொல்ல வேண்டும் என்று நான் சொல்லவில்லை. அவருக்கு உசிதமானதை அவர் சொல்லலாம். ஆனல் கனம் அங்கத்தினர்களுக்கு நான் சொல்லிக்கொள்வது நம்முடைய மின்சாரத் திட்டங்கள் எந்த வகையிலும் குறைபாடு இல்லாது துரிதமாக நிறைவேறிக்கொண்டிருக்கின்றன என்பதுதான். இன்னும் அதிக அளவில் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்கிற அடிப்படையில்தான் நாம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறோம். இன்னென்று. நாம் உற்பத்தி செய்யக்கூடிய சக்தியை கொஞ்சம் கூட விரயம் செய்வதில்லை. மேலும் இந்தத் திட்டங்களிலும் அதிகமாக விரயமாகிக் கொண்டிருக்கிறது என்று சொன்னல் அந்நிய நாட்டினர்கள் இவ்வளவு ஆர்வத்தோடு நமக்கு உதவி செய்ய முன்வந்திருக்க மாட்டார்கள். யாராவது ஒரு சிறிய அதிகாரி தனக்குள்ள குறையினல் ஒரு சிறு குற்றச்சாட்டைச் சொல்லியிருப்பார்கள். அதை மிகைப்படுத்தி இங்கே திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் ஒரேயடியாக விரயமாகிறது, இயந்திரங்கள் தூங்குகின்றன, காண்டிராக்டுக்கு விடுகிறார்கள் என்று சொன்னர். நம்முடைய இலாகா செய்யக்கூடிய வேலைகளை காண்ட்ராக்ட் விடுவதில்லை. (திரு. எம். கல்யாணசுந்தரம்: இலாகாவே இதுவரை செய்துவந்த வேலைகளை நிறுத்தப்பட்டு காண்டிராக்டுக்கு விடப்பட்டிருக்கின்றன). மெஷின்கள் எங்கும் தூங்கவில்லை. (திரு. எம். கல்யாணசுந்தரம் மேட்டூரில் மட்டும் 6 மிஷின்கள் தூங்குகின்றன.) நான் சமீபத்தில் தான் போனேன். அப்படி ஒன்றும் இல்லை. எல்லா மிஷின்களும் வேலை செய்துகொண்டிருக்கின்றன. என்ன என்ன முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமோ அவை எல்லாம் எடுக்கப்படுகின்றன . . .

SRI M. KALYANASUNDARAM: On a point of personal explanation, Sir, யாரோ ஒரு சின்ன அதிகாரி சொன்னதைக் கேட்டு சொல்வதாக அமைச்சர் குற்றம் சாட்டுகிறார். என்னிடத்தில் எந்தச் சின்ன அதிகாரியும் சொல்லவில்லை. நான் யார் சொல்வதையும் கேட்பதில்லை. கோள் கேட்கிற சின்னபுத்தி எனக்குக் கிடையாது. நான் சொன்ன குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்குத் தயாராய் இல்லை. அதற்குத் தகுந்த பதில் எதுவும் கூறாமல் 'வெறி, வெறி' என்று அதைமட்டும் சொல்லி என்ன பயன்? நான் சொன்ன நல்ல யோசனைகளைப்பற்றி கூறும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

19th August 1961]

THE HON. SRI V. RAMAIAH : அடுத்தபடியாக, இந்த க்ரூப்பிங் ஸிஸ்டம் விவசாயிகளுக்கு பெரிய தொந்தரவைக் கொடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை நான் உணர்ந்து அதை நீக்கி விடுவதற்கு என்னென்ன முயற்சிகள் எடுக்க வேண்டுமோ அதை மின்சார போர்ட் எடுத்துக்கொண்டிருப்பதை நான் என்னுடைய அறிக்கையில் சொல்லியிருக்கிறேன். சென்ற ஆண்டு ராமநாதபுரம் ஜில்லாவில் பரீட்சார்த்தமாக இந்த க்ரூப்பிங் ஸிஸ்டம் இருக்கவேண்டாமென்று முடிவு செய்தோம். இந்த ஏற்பாடு திருப்திகரமாக இருந்து நல்ல லாபம் தரும் முறையில் இருப்பதால் இந்த க்ரூப்பிங் முறையை நீக்கியிருக்கிறோம். அதே அடிப்படையில் இந்த ஆண்டு இரண்டு மூன்று ஜில்லாக்களில் பல தாலூக்காக்களில் இந்த க்ரூப்பிங் ஸிஸ்டத்தை நீக்க முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம். கனம் வேதரத்னம் அவர்கள், இந்த மாநிலத்திலுள்ள மற்ற எல்லா ஜில்லாக்களேயும் ஒரு கண்ணோட்டத்துடனும், தஞ்சை ஜில்லாவை ஒரு கண்ணோட்டத்துடனும் பார்க்கிறோம் என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அந்தக் குற்றச்சாட்டை ஓரளவு ஏற்றுக்கொள்ள நான் தயாராயிருக்கிறேன். காரணம், தஞ்சை ஜில்லாவைப் பொறுத்த வரையில் பூராவும் லைசென்ஸ்தார் பகுதியாகயிருக்கிறது. கிராம மின்சார விஸ்தரிப்புத் திட்டத்தின்கீழ் லைசென்ஸ்தார் பகுதிகள் அதிகம் முன்னேறவில்லை. இதற்கு ஏதாவது ஒரு புது முயற்சி எடுத்தாக வேண்டுமென்ற முறையில் நாம் கடந்த ஆண்டு 25 லட்சம் ரூபாயும், இந்த ஆண்டு அவர்கள் மின்சார விஸ்தரிப்பிற்காக 25 லட்சமும் கொடுக்க முன்வந்திருக்கிறோம். ஆனால் போதுமா என்று பார்த்தால் மின்சார போர்ட் எல்லையில் நடக்கும் வேலைகளேயும், லைசென்ஸ்தார் பகுதிகளில் நடக்கும் வேலைகளேயும் பார்க்கும்போது இது மிகக் குறைவாகத்தான் இருக்கிறது. ஆகவே, மேலும் அதிகக் கடன் கொடுப்பதற்கு வழிகள் உண்டா என்று, அதிகக் கடன் கொடுக்க என்ன முடிவுகள் எடுக்க வேண்டுமோ அதை ஆராய்ந்து பார்க்க நான் தயாராயிருக்கிறேன். என்னைப் பொறுத்தவரையில் லைசென்ஸ்தார் பகுதியாகயிருந்தாலும் சரி, போர்ட் பகுதியாகயிருந்தாலும் சரி எங்கும் முன்னேற்றம் ஏற்பட்டாகவேண்டும். ஸ்சென்ஸ்தார் பகுதி என்று தட்டிக் கழிக்கத் தயாராயில்லை. ஆகவே, கடன் கொடுப்பது மட்டுமன்றி, லைசென்ஸ்தார் பகுதிகளில் எந்தெந்த கிராமங்களுக்கு மின்சாரம் விஸ்தரிக்க கஷ்டமாகயிருக்குமோ அதை அரசாங்கமோ அல்லது மின்சார போர்டிடமோ ஒப்படைத்து விட்டால் அங்கு மின்சாரம் விஸ்தரிப்பதற்கு போர்ட் பொறுப்பு எடுத்துக்கொள்ளும் என்று சொல்லியிருக்கிறோம். கனம் கல்யாணசுந்தரம் அவர்கள் சொன்னது போல் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் இடம் ஒப்பந்த ரீதியாக ஒதுக்கப்பட்டிருந்தாலும் வளர்ச்சி ஏற்பட வேண்டாமென்று ஒதுக்கவில்லை. நியாயமான காரணத்திற்காக ஏற்படாமல் இருந்தால் அங்கு நம் போர்ட் விஸ்தரிப்பு செய்யவேண்டும். அதில் இருக்கக்கூடிய சட்டப் பிரச்னையை ஓரளவு ஆராய்ந்து பார்த்தும் நாம் செய்ய வேண்டி

யதை துரிதமாக எடுத்து செய்துவிடுவோம் என்று நினைக்கிறேன். அவர்கள் விநியோகம் செய்ய முடியவில்லை என்றால் அதை நாம் செய்தாகவேண்டும். அந்த முறையில் பார்க்கும்போது உடையார் பாளையம், பெரம்பலூரில் ஒரு பகுதி, முசிரி, அரந்தாங்கி தாலூகா போன்றயிடங்களில் போர்ட்டின் நேரடி விஸ்தரிப்பிற்கு வர வேண்டுமென்று முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம். சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தை மனதில் வைத்துக்கொண்டு ஒரு புது நினைப்பை இங்கு சொன்னார்கள். ஏன் காவேரி ஆற்றின் குறுக்கே இரண்டு இடங்கள் தேக்கம் அமைத்து மின்சார சக்தியை அதிகப்படுத்தக்கூடாது என்ற நினைப்பு. இந்த ஆராய்ச்சி பல ஆண்டுகளாக நடந்து கொண்டுதானிருக்கிறது. ஆனால் எங்கு நல்ல லாபகரமாக அணை கட்டவேண்டும் என்றால் அணை கட்டவேண்டிய எல்லை மைசூர் எல்லையில் இருக்கிறது. நாம் தனிப்பட்ட முறையில் முயற்சி எடுத்து செய்ய முடியுமா என்று பார்த்தால் அதிலுள்ள சிக்கல்கள் நமக்கு தெரியும். இந்த வெள்ளம் காரணமாக மைசூர் எல்லையில் கட்ட வேண்டிய அணையை துரிதமாகக் கட்டுவதற்கு மத்திய சர்க்காரின் பவர் அண்ட் இர்ரிகேஷன் கமிஷன் முயற்சிகள் எடுக்குமென்று நம்புகிறேன். மக்களுக்கு என்னென்ன சௌகரியங்கள் செய்து கொடுக்க வேண்டுமோ அவைகளை நமது அரசாங்கம் காலம் கடத்தாமல் செய்ய எல்லா முயற்சிகளும் எடுக்கும். கிராம மின்சார விஸ்தரிப்பு செய்ய, இன்றுள்ள இணைப்பு அடிப்படையில் செய்ய முடியுமா என்று பார்த்தால் பல கஷ்டங்கள் இருக்கின்றன. காரண்டி கொடுக்கக்கூடிய திட்டமாக அமைந்தால் மின்சார விஸ்தரிப்பு நடக்காது. அந்த முறையில் பார்த்தால் பல அங்கத்தினர்கள் சொன்னது போல் கிராமத்தில் உயர்ந்த நிலையில் உள்ளவர்களுக்கு மட்டும்தான் மின்சாரம் கிடைக்க முடியும். கனம் கோவிந்தசாமி அவர்கள் சொன்னதுபோல் சிறு விவசாயிகளுக்கு அல்லது ஹரிஜன மக்களுக்கு மின்சாரம் கிடைக்குமா என்று பார்த்தால் அது பெரும் கஷ்டமாகயிருக்கிறது. கிடைப்பதில்லை. எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் போட்டு விடுவது மட்டுமல்ல, சாதாரண விவசாயிகளுக்கும் மின்சாரம் கிடைக்க வேண்டும். காரண்டி லிஸ்டத்தில், லாபம் கிடைக்காவிட்டாலும் அதனால் நஷ்டம் வரக்கூடாது என்று நினைப்பை மாற்றி விட வேண்டுமென்பது என் ஆசை. 11,000 அல்லது 12.000 அல்லது எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் கொடுத்தோம் என்று திருப்தியடையாமல் இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் என் அறிக்கையில் கூறியிருக்கிறேன், இனிமேலுள்ள பிரச்னைதான் அதிகப்படியான பிரச்னையென்று. சாதாரண மக்களுக்கும், விவசாயிகளுக்கும் மின்சாரம் கிடைக்க பெரு முயற்சி எடுக்க வேண்டுமென்று வலியுறுத்தியிருக்கிறேன். மின்சாரத்தை நல்ல விதமாக பயன்படுத்த என்னனென்ன புது முயற்சிகள் எடுக்க வேண்டுமோ அதை ஆராய்ந்து பார்க்கும் முறையில்தான் நிபுணர்கள் அடங்கிய குழு அமைத்து அவர்கள் அறிக்கை அரசாங்கப் பரிசீலனையில் இருக்கிறது. கனம் கல்யாணசுந்தரம்

19th August 1961] [Sri V. Ramaiah]

அவர்கள் சொன்னதுபோல், உல்லாச வாழ்க்கைக்கு மட்டும், உல்லாச வாழ்க்கை நடத்தக் கூடியவர்களுக்கு மட்டும் மின்சாரம் கொடுத்துவிட்டால் போதும் என்ற திருப்தியோடு இல்லாமல் சாதாரண விவசாயிக்கும் இந்த சக்தியின் நன்மை கிடைக்க வேண்டும். கிராம ரீதியாக பார்க்கும்போது, கிராமங்களில் பொருளாதார சுபிட்சம் ஏற்பட மின்சாரம் பயன்பட வேண்டும். ஒரு நிலையில் பார்க்கும்போது மின்சார சக்தி அதிகமாக விவசாயத்திற்கு இன்று பயன்பட்டு வருகிறது. அதனால் அதிக மாக விவசாயிகளுக்கு லாபம் கிடைத்திருக்கிறது. முக்கியமாக 1-30 p.m.
சிறு தொழில்கள் வளர்ந்தோங்க வேண்டும். கிராமத்தில் பல தொழில்களை விஸ்தரிக்க வேண்டும். அந்த முறையில் இந்த அறிக்கையை தொடர்ந்து பார்ப்போமானால் நாம் நினைப்பது போல் எல்லாம் நடக்கக்கூடிய வகையில் பல திட்டங்களை போட்டிருக்கிறோம். அதற்காக ஒரு பக்கத்தில் அதிகமான அளவில் மின்சாரத்தை உற்பத்தி செய்யவேண்டும். அதே நோத்தில் கிராமங்களிலுள்ள நடுத்தர மக்களுக்கு கஷ்டமில்லாமல் மின்சாரம் கிடைக்கவேண்டும். அந்த முறையில் பார்க்கும்போது நம்முடைய நினைப்பு இன்னும் 10, 15 வருடத்தில் ஈடேறிவிடலாம் என்று நாம் எல்லோரும் நினைக்கும்படியான அளவில் இந்த இலாகாவில் உள்ள வர்கள் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 160 யூனிட்டு உபயோகப்படுத்த திட்டமிட்டிருக்கிறோம். இது மட்டும் போதாது. மேல் நாட்டில் உபயோகிப்பது போன்று 2,000, 4,000 யூனிட்டுகள் உபயோகிக்கக் கூடிய காலம் சீக்கிரம் வரவேண்டும் என்பதுதான் என் ஆசை. அதிலும் இந்தக் குறிக்கோளை அடைவதற்கு 50 அல்லது 60 வருடங்கள் என்று ஆகக்கூடாது. அதிலும் 10, 15, வருடத்திற் குள்ளாகவே நாம் அந்தக் குறிக்கோளை அடையவேண்டும். அப்போதுதான் நாம் பரிபூரண சுபீட்சத்தை அடைந்ததாகக் கருத முடியும். இதை அடைந்துதீரவேண்டும் என்ற முயற்சியில் எல்லாக் கட்சியினரும் ஒத்துழைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கனம் கல்யாணசுந்தரம் அவர்கள் இதன்பேரில் பல திருத்தங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் திருத்தங் களைப் பார்ப்போமேயானால் நேரடியாக மின்சார போர்டுக்கு சம்பந்தமில்லாவிட்டாலும், பல திருத்தங்களை கொடுத்திருக் கிறார்கள். அதே சமயத்தில் மின்சாரக் குழு சம்பந்தப்பட்ட சில திருத்தங்களையும் கொடுத்திருக்கிறார்கள். அதிலுள்ள கருத் துக்களை எல்லாம் நான் எடுத்துக்கொண்டிருக்கிறேன். யார் நல்ல கருத்துக்களை எந்தக் கட்சியின் சார்பாக சொன்னாலும் அதிலுள்ள கருத்துக்களை எடுத்துப் பார்த்து ஆராய்ந்து பார்க்க வேண்டிய பொறுப்பு இருக்கிறது. அந்த முறையில் வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொண்டு, இதன் பேரில் கொடுக்கப்பட்டிருக்கும் திருத்தங்களை வலியுறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொண்டு என்னுரையை முடித்துக்கொள்கிறேன்.

[19th August 1961

SRI M. KALYANASUNDARAM : அமைச்சர் அவர்கள், எந்தக் கருத்து எந்த கட்சியிலிருந்து சொல்லப்பட்டாலும் அதை எடுத்துக்கொள்வதாக பரந்த உள்ளத்தோடு சொன்னதை வரவேற்கிறேன். இதில் ஒரு யோசனையை சொல்ல விரும்புகிறேன். என்னுடைய திருத்தங்கள் ஒருபுறம் இருக்கட்டும். இதன் பேரில் இங்கு நடந்த விவாதங்களை எல்லாம் எலக்ட்ரிக்ஸிட்டி போர்டுக்கு அனுப்பி அதன் பேரில் அவர்கள் கொடுக்கும் பதிலை இந்த சபையில் வைப்பதாக இருந்தால் நான் கொடுத்திருக்கும் திருத்தங்களை எல்லாம் வாபஸ் பெற்றுக்கொள்கிறேன்.

THE HON. SRI V. RAMAIAH : வாபஸ் பெறுவதற்கு இவ்வளவு கண்டிஷன் தேவையில்லை. சென்ற வருடத்தில் நடந்த விவாதத்தின் சுருக்கத்தை எடுத்து மின்சார போர்டுக்கு அனுப்பி வைத்தோம். அதன்பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப் பற்றியும் எனக்கு தெரிவித்திருக்கிறார்கள். அதை அங்கத்தினர்கள் பார்க்க வேண்டியது அவசியம்தான் என்றால் அதைக் கொடுக்கவும் தயாராய் இருக்கிறேன். இதைப்பற்றியும் அவர்கள் எடுக்கும் நடவடிக்கைகளை அங்கத்தினர்கள் பார்வையிடுவது அவசியம் என்றால் . . . (ஸ்ரீ எஸ். எம். அண்ணாமலை : அவசியம்தான் . . .) சரி, அப்படியானால் அதைக் கொடுக்கவும் தயாராய் இருக்கிறேன். இதைப்பற்றி பரிசீலனை செய்யவும் தயாராய் இருக்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM : அப்படியானால் என்னுடைய திருத்தங்களை வாபஸ் பெற்றுக்கொள்கிறேன்.

The amendment was, by leave, withdrawn.

DEPUTY SPEAKER : I shall now put the original motion to the vote of the House. The question is :—

"That the Annual Financial Statement for 1961-62 and the Supplementary Financial Statement for 1960–61 of the Madras State Electricity Board laid on the table of the House be taken up for discussion."

The motion was put and carried.

DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8–30 a.m., on Monday, the 21st August 1961.

The House then adjourned.

V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

* 314. *Notification issued with G.O. Ms. No.* 1057, *Rural Development and Local Administration, dated* 12th *April* 1961, *confirming the consitution of third batch of Panchayat Unions in North Vellore Development District. [Laid on the table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]